விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 22 ஞாயிற்றுக்கிழமை (05.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

# மகிந்தவின் பிடியிலிருந்து நாட்டை பாதுகாப்பேன்

## சவாலை ஏற்கத் தயார் - சந்திரிகா



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை அழிக்க முயற்சித்தால் அந்த சவாலை எதிர்நோக்கத் தயார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)



புதிய அரிசி விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் தலைமையில் வரலாற்று சிறப்பு மிக்க ஜயசிறி மஹாபோதிக்கு அருகாமையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றபோது...

## உள்ளே...


வலம்புரி
சங்குநாதம்
Sankunatham
நாதம் 09
வலுவடையும் சீன உறவு
உங்கள் சாங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் - ...

## வடக்கு கிழக்கிற்கு நியாயமான தீர்வு!

### வழங்க வலியுறுத்துகிறார் அமைச்சர் லக்ஷ்மன்

(கொழும்பு)

வட, கிழக்கு மாகாணங்களுக்கு நியாயமான அதிகார பரவலாக்கத்தை வழங்குவதற்கு இரு பிரதான கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டை எட்ட வேண்டும் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

கண்டி, ஹாரகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போதைய அரசாங்கம் ஆட்சியமைத்து குறுகிய காலத்தில் மேற்கொண்ட பாரிய பணிகளை 15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த அரசிற்கு ஏற்பட்டதைப்போன்று புதிய அரசிற்கும் ஏற்படும் - சுனில்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ விண்வெளியில் இருப்பதுபோல இருந்தார். வாழ்நாள் முழுவதும் தாமே ஜனாதிபதி என அவர் நினைத்திருந்தார்.

எனினும், மக்கள் தமது ஈர்ப்பு சக்தியைப்பயன்படுத்தி அவரை கீழே இறக்கினர் என பாராளுமன்ற உறுப்பினர் சுனில் அந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். 15 ஆம் பக்கம் பார்க்க....

## யுத்தத்திற்கு மீண்டும் இடமில்லை - மைத்திரி

(மட்டக்களப்பு)

இந்த நாட்டில் அனைவருக்கும் மத சுதந்திரமுண்டு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற கிறிஸ்தவ போதகர்கள் ஒன்றியத்தின் பாஸ்கா பண்டிகை வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்த நாட்டில் அனைத்து மக்களுக் 15 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரியை பொம்மையாக்க மாட்டோம்

### அதிகார குறைப்பு குறித்து சஜித்



(கொழும்பு)

ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்திலேயே மக்களின் நன்மதிப்புக்கு ஆளான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எந்தவொரு அதிகாரமுமில்லாத பொம்மையாக்குவதற்கு நாங்கள் ஒருபோதும் முயற்சிக்க மாட்டோம் என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை தெம்பரவெவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கமைவாக ஊழல் மோசடி 15 ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மின் கடத்தியில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக மின்சாரம் தாக்கிய நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ராசேந்திரன் செல்வானந்தன் (வயது-36) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் 15 ஆம் பக்கம் பார்க்க....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392.

WESTERN UNION MONEY TRANSFER

(சி-562)



## வாடகைக்கு

பருத்தித்துறையில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொ.பே:-0771745178

(சி-583)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532





## அக்ஷயா

அழகுக் கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன.
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள் கடும் கறை அகற்றும் கிறீம், கண்கருவளையம், உதட்டு கருமை நீக்கும் கிறீம்
- உடல் எடை கூட்டும் குறைக்கும் பால்மா, குளிசை டொனிக் என்பன
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை.
- மார்பு கூட்டும், குறைக்கும் கிறீம் குளிசை தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய், கைகால் கறுப்பு நீக்கும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.
- கடும் கருமை அகற்றும் பேசியல் 3000/-

அக்ஷயா

0772106155, 0775387973
221, நாவலர் றோட் (பிறவுண் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

(005)



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

*(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(சி-577)



2 மணித்தியாலத்தில்

## கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்.

Computer Repair

0779086737 52, Hospital Road,
GUNAA BEST PC Jaffna.

(004)



## அக்குபஞ்சர் சிகிச்சை நிலையம்

அக்குபஞ்சர் வைத்திய முறையில் சகல ரோகங்களுக்கும், நாட்பட்ட, கைவிடப்பட்ட ரோகங்களுக்கும் சிகிச்சையுடன், ஆலோசனைகளும் வழங்கப்படும்.

திங்கள்–புதன்–வெள்ளிக்கிழமைகளில் முன் பதிவுடன் சிகிச்சை பெறலாம்

சித்தாயுர் வேத

**அக்குபஞ்சர் நிலையம்**


பருத்தித்துறை வீதி, புத்தூர்

தொடர்புகளுக்கு:–
நவீன வைத்திய நிலையம், அச்சுவேலி.

Dr.T.Puviraasan
MD.M.A
D.I.M & S

(9997)


## கண்ணீர் அஞ்சலி



### இராசலிங்கம் ஸ்ரீராம்

எமது சங்கத்தின் சங்கானை சண்டிலிப்பாய் கிளை தலைவரும் ஸ்ரீவரதராஜா பேக்கரி உரிமையாளரும் ஆகிய இராசலிங்கம் ஸ்ரீராம் அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகுந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரினது துயரில் நாமும் கலந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

நிர்வாகத்தினர்,
அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.

(சி-574)



## யாழ். அத்தியடி பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா - 2015

| | | | | |
|---|---|---|---|---|
| 06.04.2015 | திங்கட்கிழமை | கொடியேற்றம் | ந.பகல் | 12.00மணி |
| 10.04.2015 | வெள்ளிக்கிழமை | தங்கரதம் | மாலை | 07.00 மணி |
| 13.04.2015 | திங்கட்கிழமை | வேட்டைத்திருவிழா | காலை | 07.30 மணி |
| 13.04.2015 | திங்கட்கிழமை | சப்பறம் | மாலை | 07.00 மணி |
| 14.04.2015 | செவ்வாய்க்கிழமை | தேர் | காலை | 09.00 மணி |
| 15.04.2015 | புதன்கிழமை | தீர்த்தம் | காலை | 11.00 மணி |
| 16.04.2015 | வியாழக்கிழமை | பூங்காவனம் | மாலை | 07.00 மணி |

இங்ஙனம்
பிள்ளையார் பணியில் நிற்கும் கோயில் நிர்வாகம்.


விளம்பர அன்பளிப்பு:
நியூ நகுலா ஜுவலர்ஸ்
45, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். T.P : 021 222 4101


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாம்பாள் செல்வராசா



கலையரசு வீதி, நவாலியை பிறப்பிடமாகவும், மானிப்பாய், கொழும்பு மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பாள் செல்வராசா 2015.04.04 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-தவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிஐயா -நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வராசாவின் அருமை மனைவியும் றிசன் (லண்டன்), பிரதிகாவின் அருமைத் தாயாரும், கருணாகரன் (நியூசிலாந்து), அமரர் யோகாம்பாள், சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், விஜயாம்பாளின் அன்புச் சகோதரியும், கொட்சியின் (லண்டன்), அன்பு மாமியும், றோகிதனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மொன்றியல், கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:–
குடும்பத்தினர்.

(001)

## மரண அறிவித்தல்

### சுந்தரம் சத்தியமூர்த்தி



இல.6, பெரியதம்பிரான் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சத்தியமூர்த்தி 04.04.2015 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் சுந்தரம்-இராசம்மாவின் அன்பு மகனும், சுந்தரம் ஞானசுந்தரத்தின் அன்புத் தம்பியும், ஞானசுந்தரம் குணவதியம்மாவின் பாசமிகு மைத்துனனும், பற்குணராஜா (ராசன்-பிரான்ஸ்), உதயசங்கர் (மோகன்), உதயகுமார் ரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் சித்தப்பாவும், விஜயராணி, வசந்தகுமாரி, மகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், பதுமன், பவி, சங்கவி, தனுஜன், ரேணுஜன், தனுகாந், தேசிகன், உஷாந், சுபாசினி ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.04.2015 இன்று பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:**மோகன்** (மோகன் சவுண்ஸ்ட்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
தொ.பே:–0777030234

(006)

## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் வருடாந்த பொதுக்கூட்டம்

தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 18.04.2015 சனிக்கிழமை மு.ப 9 மணியளவில் இடம்பெறவுள்ளதால் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.


**ஆலய பரிபாலன சபை**

(சி-581)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத- மதவாத தண்டனை சட்டத்தை நான் எச்சரிக்கையுடன் வரவேற்கின்றேன்

## மனோ கணேசன் தெரிவிப்பு



**(கொழும்பு)**

**இனவாதம் எது, மதவாதம் எது, இனவுரிமை எது, மதவுரிமை எது என்பன பற்றி இந்நாட்டு அரசியல், மத தலைவர்கள் குறிப்பாக பெரும்பான்மை தரப்பை சேர்ந்தவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் இனவாத- மதவாத தண்டனை சட்டத்தை எச்சரிக்கையுடன் வரவேற்பதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு மாநகர சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஜனநாயக மக்கள் முன்னணி மாநகர சபை உறுப்பினரான எம். திருபாகரகுமார், கட்சி தலைவரின் முன்னிலையில் உறுதியுரை பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வு நேற்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது. புதிய மாநகரசபை உறுப்பினருக்கு உறுதியுரை செய்து வைத்து நிகழ்வில் உரையாற்றிய போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தட்டிப் பறிக்கப்படும் நமது உரிமைகளுக்காக தமிழ் பேசும் மக்கள் குரல் எழுப்புவது, போராடுவது, எழுதுவது இனவாதம் அல்ல.

அடுத்த இனத்தின் உரிமைகளை தட்டி பறிப்பது, வெட்டிக் குறைப்பது இனவாதம்தான் ஆகும. இந்த தெளிவு அரசாங்கத்திலும், எதிர்க்கட்சியிலும் இருக்கின்ற பெரும்பான்மை கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் இருக்க வேண்டும்.

இந்த தெளிவுடன்தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். இந்த சட்டம் நல்லது. ஆனால், இந்த தெளிவு சிலருக்கு இல்லை. ஆகவே இனவாதம், மதவாதம் பேசினாலோ, எழுதினாலோ இரண்டு வருடம் சிறைத்தண்டனை என்று குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் கொண்டு வர அமைச்சரவை முடிவு செய்திருப்பதை எச்சரிக்கையுடன் வரவேற்கின்றேன்.

இந்த நாட்டில் இன, மதவாதம் பல்வேறு ரூபங்களில் இருக்கின்றது. வெறுமனே கோவில்களையும், பள்ளிகளையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் இடிப்பது மாத்திரம் இனவாதம் அல்ல.

இந்நாட்டில் சனத்தொகையை கணக்கிட்டு, கொழும்பு மாவட்டத்தில் மூவர், நுவரெலியா மாவட்டத்தில் ஐவர், பதுளையிலும், கண்டியிலும் தலா இருவர் என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முகமாக புதிய தேர்தல் முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என கூறினால் கொழும்பிலும், மலையகத்திலும் அரசியல் செய்கின்ற சிலருக்கு கோபம் வருகிறதாம்.

இவர்கள் யார்? இவர்கள், தேர்தல் காலங்களில் தமிழ் வாக்குகளை குறி வைத்து, தமிழர்களை வாக்கு வங்கியாக மட்டும் பயன்படுத்துகின்றவர்கள் ஆகும். இங்கே யார் இனவாதி? எனது இனத்தின் உரிமையை உறுதிபடுத்த விழையும் நான் இனவாதியா? அல்லது எங்கள் வாக்குகளை தட்டி பறித்து ருசி பார்க்க துடிக்கும் இவர்கள் இனவாதியா?

இன்று யுத்தம் இல்லை. புலிகளும் இல்லை. அவர்களது எறிகணைகளும் இல்லை. ஆகவே அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கான தேவையும் இல்லை. ஆகவே எங்கள் நிலங்களை திருப்பி கொடுங்கள் என்று நாம் கோருவது எப்படி இனவாதமாகும்?

இதையும் இனவாதமாக காட்ட சிலர் முயல்கிறார்கள். முஸ்லிம் சகோதரர்களின் பள்ளிகளை உடைக்காதே என்று நான் சொன்னால், என்னை பார்த்து முதலில் சுன்னத்து செய்துவிட்டு வந்து பிறகு முஸ்லிம்களை பற்றி பேசுங்கள் என்று சொல்லுபவர் இனவாதியா? அல்லது முஸ்லிம்சகோதரர்களுக்காக குரல் எழுப்பும் நான் இனவாதியா?

இலங்கை தாய் திருநாட்டை சிலாகிக்கும் தமிழ் மொழியிலான தேசிய கீதத்தை பாடுவது மீதான அதிகாரபூர்வமற்ற தடையை நீக்குங்கள் என்று நான் ஜனாதிபதியை கேட்டேன். அவரும் உடன்பட்டார்.

அதன் பிறகு இந்த தடை நீக்கம் என்ற செய்தி உலகம் முழுக்க போனது. அதை நமது புதிய அரசின் நல்லெண்ண செயற்பாட்டின் அடையாளம் என்று நமது வெளிவிவகார அமைச்சர் ஜெனீவாவில் சென்று சொல்கிறார்.

நமது பிரதமர் அதை யாழ்ப்பாணத்தில் நினைவூட்டுகிறார். இந்நிலையில் தேசிய நிறைவேற்று சபை கூட்டம் முடிந்த பின் என்னிடம் வந்த ஒரு பெரும்பான்மை அரசியல்வாதி இரகசியமாக ஒரு வேண்டுகோளை விடுக்கின்றார். அது என்ன வேண்டு கோள்? "மனோ, நீங்கள்கடந்தமுறை இங்கே தமிழில் தேசிய கீதம் பாடும் விவகாரம் பற்றிய பிரச்சினையை எழுப்பினீர்கள். இனி இப்படியான சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை எழுப்பாமல் இருங்கள். அது நமது ஜனாதிபதியை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கி விட்டது" என்று அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

தமக்கு தர்மசங்கடம் என்று ஜனாதிபதி என்னிடம் சொல்லவில்லை. அவரிடம் அப்படியான ஒரு அடையாளம் கூட தெரியவில்லை. ஆனால், ஜாதிக ஹெல உறுமய கட்சியை சார்ந்த ஒரு தேரர் என்னிடம் இப்படி சொல்கிறார். அவருக்கு நான் என்ன பதில் சொன்னேன் வேறு விடயம்.

தமிழ் மொழியில் இலங்கை தேசிய கீதம் பாடுவதை பற்றிகூட பேசாதீர்கள் என சொல்பவர்கள் இனவாதிகளா? தாய் நாட்டை பற்றி தாய்மொழியில் தேசிய கீதம் பாடும் உரிமையை கோரும்நான்இனவாதியா? இவை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இனவாதம் எது என்பது பற்றி அனைவருக்கும் அறிவுறுத்த வேணடும். எச்சரிக்கையுடன் இந்த சட்டங்களை வரவேற்க வேண்டும் என்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அரசியல் அநாதைகளுக்கு மீண்டும் அரசியலில் இடமளிக்க வேண்டாம்

புதிய அரசியல் பாதையை உருவாக்கும் நல்ல தருணம் தற்போது பிறந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற கூட்ட மொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அநேக தரப்பினர் பல்வேறு கோஷங்களுடன் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஆட்சிக்கு வந்த போதிலும் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ எந்த நன்மையும் ஏற்படவில்லை. அத்துடன் அரசியல் ரீதியாக அநாதைகளாக்கப்பட்டுள்ள தரப்பினர் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் இடமளிக்கக் கூடாது.

பொதுத் தேர்தலுக்கு செல்ல அச்சம் கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் 19ஆவது அரசியலமைப் புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். இதனை தோற்கடிக்க வேண்டியது மக்கள் மாத்திரமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவரான ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேனவினதும் கடமை என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-5)




பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட

7 முதல் 14 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கான பயிற்சி

ART EXCEL
(All Round Training in Excellence)

ஏப்ரல் 9,10,11,12 ஆம் திகதிகள் காலை 8.30-11.30

வளர்ந்தோருக்கான ஸ்ரீஸ்ரீ யோகா
(உடல் மனம் சார்ந்த உன்னத பயிற்சி)
ஏப்ரல் 7,8,9,10,11 ஆம் திகதிகள் மாலை 5.30-7.30

ஆசிரியர்- சாயிராம்ஜி (வாழும் கலை ஆச்சிரமம், பெங்களூர்,இந்தியா)

இடம்- திவ்ய ஜீவன சங்க மண்டபம், சட்டநாதன் சிவன் கோயில், நல்லூர்.

077 918 6343,077 323 3187, 077 760 7008

வாழ்வில் ஒளி வீச...

நம்பிக்கையோடு வாருங்கள் உங்களுக்கு வெற்றி நிச்சயம். உள்நாட்டில் பல வேலை வாய்ப்புக்கள். இன்றே தொடர்பு கொள்ளுங்கள். சம்பளம் 18000/=- 45000/= (தொழில் அடிப்படையில்) கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகள் (ஜாம், ரொபி, கோடியல், பிளாஸ்ரிக், பால்மா... ) தனியார் துறைமுகம், விமான நிலையம், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வாகன சாரதிகள், இலற்றீசியன், பெயின்ரர், தச்சு, மேசன் போன்ற பல வேலை வாய்ப்புக்கள். 17-50 வயது ஆண், பெண் உடனடியாக தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை.

077 111 6770, 077 683 8231

தேவை

உங்களது எதிர்காலத்திற்கு நல்லதோர் தொழிலைப் பெற இன்றே அழையுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம்,ரொபி,பிஸ்கட்,சோயா,ஆடை போன்ற பல தொழிற்சாலைகள் மற்றும் தனியார் துறைமுகம்,விமான நிலையம்,மேசன் இலற்றீசியன் பெயின்ரர்,தச்சு வெற்றிடங்களுக்கு 17-50 வயது ஆண் பெண் உடனடியாக தேவை. சம்பளம் 18000-40000 உணவ தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலை. 077 817 6234


# இராசி பலன்

05.04.2015
பங்குனி 22, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08மணிக்கு
பிரதமை முன்னிரவு 7.28 மணிவரை
சித்திரை பின்னிரவு 1.45 மணிவரை
இராகுகாலம் 4.39-6.09 மணிவரை
சுபநேரம் 9.09-10.39 மணிவரை
ஈஸ்டர் ஞாயிறு

வளவன்

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள்.

**இடபம்:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பணியாளர் தொல்லை அகலும், வார்த்தைகளால் மேன்மையடைவீர்கள்.

**துலாம்:** எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்:** பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** ஆடம்பர பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களால் கூடுதல் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPEED LANKA EXPRESS

# வெளிநாடுகளுக்கான

தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926, 021 2217180
www.speedlanka.net

Mangala சித்திரைப் புதுவருட அமோக மலிவு விற்பனை

அனைத்துப் பொருட்களுக்கும் 20%- 50% விலை குறைப்புக்கான காரணம்?

கம்பனிகள் தரும் விசேட விலைக்குறைப்பு+ மங்களா நிறுவனம் தரும் விலைக்குறைப்பு= அமோக விலைக்குறைப்பு
10%-25% + 10%-25% = 20%-50%

DAMRO ARPICO
Iron Boar
1680 /= 1100 /=

Double Door Steal Cupboard
6x3 14500 /= 8900 /=
6x4 16000 /= 9900 /=
6x5 19500 /= 14900 /=

LCD TV Stand
16500 /= 10900 /=
19500 /= 12000 /=
22000 /= 16500 /=

Nilkamal
Steal Cupboard
6x3 Office 14500 /= 8500 /=
6x3 Library 19500 /= 12000 /=
4x3 University 9500 /= 6900 /=

Piyestra
Rolling Chair
M- 6000 /= 3000 /=
L- 10500/= 4000 /=
XL-12500/= 6250 /=

Kitchen Rack
2500/= 2800/=
1900/= 2200/=

Open: 8am-8pm

20%-50% தள்ளுபடி முந்துங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!
மங்களா காட்சியறை
இல. 536, கே.கே.எஸ்.வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 8366, 021 2228367, 077 728 8069

## 50 வீதமான மாணவர்கள் கணிதம், ஆங்கிலத்தில் சித்தியடையவில்லையாம்

### பரீட்சைகள் திணைக்களம்

பாடசாலைகள் ஊடாக கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 50 வீதமானோர் கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் சித்தியடையவில்லை என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் ஊடாக பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 602 பேர் கணிதப் பாடத்தில் சித்தியடைந்துள்ளதுடன், ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 198 பேர் அந்த பாடத்தில் சித்தியடையவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

அத்துடன் ஆங்கிலத்தில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் சித்தியடையவில்லை.

ஆங்கிலப் பாடத்தில் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 701 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 943 மாணவர்கள் சித்தியடையவில்லை.

பாடசாலைகள் ஊடாக முதல் முறையாக சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய இ2 லட்சத்து 57 ஆயிரத்து 322 மாணவர்களில் ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 612 மாணவர்கள் உயர் தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## மணவாளக்கோல உற்சவம் இன்று

வடமராட்சி கரணவாய் உச்சில் புவனேஸ்வரி சொருப பகவதி மாரியம்பாள் திருக்கோயில் மணவாளக்கோல உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஶ்ரீ தி. சம்பந தக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது. (இ-3-60)

## ராஜித மறுப்பு

முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவின் கூற்றை அமைச்சர் ராஜித சேனாரட்ன மறுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் ஒருவரே தம்மை பதவி விலகுமாறு கோரியதாக கரலியத்த தெரிவித்திருந்தார்.

எனினும் இது உண்மையல்ல என்று ராஜித தெரிவித்தார்.

உண்மையில் முன்னாள் சிரேஷ்ட அமைச்சரான அவர் தமக்கு வழங்கப்பட்டிருந்த பௌத்த சாசன பிரதி அமைச்சு தொடர்பில் திருப்திகொண்டிருக்கவில்லை.

எனவேதான் அவர் தமது பதவியை இராஜினாமா செய்தார் என்று ராஜித மேலும் தெரிவித்தார். (இ-5)

www.sdb.lk

வட்டியும் அதிகம் - பணமும் சேமித்து
பரிசையும் பெற்றிட



| சாதாரண சேமிப்புக்கள் | பரிசில்கள் |
|---|---|
| ரூ. 5,000/= | பேனை ஒன்று மற்றும் கீ டெக் ஒன்று |
| ரூ. 10,000/= | லன்ச் பேக் ஒன்று |
| ரூ. 50,000/= | ட்ரெவலிங் பேக் ஒன்று மற்றும் லன்ச் பேக் ஒன்று |
| ரூ. 100,000/= அல்லது அதற்கு மேலதிகமாக | SINGER Plus பரிசு வவுச்சர்கள் |
| நிலையான வைப்புக்கள் | பரிசில்கள் |
| ரூ. 50,000/= | லன்ச் பேக் ஒன்று |
| ரூ. 250,000/= | ட்ரெவலிங் பேக் ஒன்று மற்றும் லன்ச் பேக் ஒன்று |
| ரூ. 500,000/= அல்லது அதற்கு மேலதிகமாக | SINGER Plus பரிசு வவுச்சர்கள் |

- குறைவின்றிய வட்டியில் சந்தையில் அதிகூடிய வட்டி விகிதத்துடன் பெறுமதிமிக்க பரிசில்கள்.
- சிறுவர் கணக்குகள் உட்பட சகல கணக்குகளிலும் ரூ. 5000 அல்லது மேலதிகமான சேமிப்புக்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.
- SINGER Plus உத்தரவாதத்துடன் நீங்கள் விரும்பிய பொருட்களை பரிசு வவுச்சர்கள் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள் அல்லது
0242 227 928
அழைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

SDBL
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால், விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
Fitch Rating BB+ (stable), RAM Rating BBB & P3, Reg. No: PB62PQ
*நிபந்தனைக்குட்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே மேடையில் சந்திக்கும் மைத்திரி, மகிந்த, சந்திரிகா

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரை எதிர்வரும் 10 ஆம் திகதி ஒரே மேடையில் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஹொரணையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்கவினால் இந்த கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையை விரும்பும் அனைவரும் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்திற்கான ஒருங்கிணைப்பு பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க மேற்கொண்டு வருகின்றார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஹொரணை நகரில் பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், இந்தக் கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பில் மைத்திரி, மகிந்த மற்றும் சந்திரிகா தரப்பிலிருந்து எவ்வித கருத்தும் இதுவரையில் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம். (C-342)
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.
வட்டாரம்:- 14 , ஆதன இலக்கம்: 74/124, மடத்தடி ஒழுங்கை.

வட்டாரம் 14, மடத்தடி ஒழுங்கை ஆதன இலக்கம் 74/124 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் ,கோவில்பற்று, சண்டிலிப்பாய் இறை "குப்பையாண்டி சீமா" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 1/4 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த சண்முகவடிவேலு பெண் பரமேஸ்வரி ஆகிய இவர்களால் சீதன உறுதி மூலம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த மோகனகிருஸ்ணன் பெண் தேவிகா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா. தியாகராசா முகதாவில் நிறைவேறிய 7791 ஆம் இலக்க 25.01.2005 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "குப்பையாண்டி சீமா" நிலப்பரப்பு 03 1/4 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் மோகனகிருஸ்ணன் பெண் தேவிகா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (சி-571)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### சித்தன்கேணி எரிபொருள் நிலையத்திற்கு ஓடுபாதை, மலசலகூடம் அமைப்பதற்குமான கூறுவிலைகள் கோரல்

சித்தன்கேணியில் அமைந்துள்ள எமது எரிபொருள் நிலையத்திற்கு ஓடுபாதை, மலசலகூடம் அமைப்பதற்குமான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்**

01. சித்தன்கேணி எரிபொருள் நிலையத்தில் ஓடுபாதை அமைப்பதற்கும் மலசல கூடம் அமைப்பதற்கும் கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை தலைமைக் காரியாலயத்தில் பெற்று 20.04.2015 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக " பொதுமுகாமையாளர் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை "என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

02. விண்ணப்பங்களை 50.00 ரூபா செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

03. கேள்விகளை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

04.கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஓடுபாதையின் கூறுவிலையாயின் அதனைக் குறிப்பிடுதல் வேண்டும். அல்லது மலசல கூடம் அமைப்பதற்கான கூறுவிலையாயின் அதனைக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. கூறுவிலை சமர்ப்பிப்போர் சங்கத்தில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 செலுத்துதல் வேண்டும்.

06. மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாட்களில் முற்பகல் 10.00 தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாம். (சி/545)

பொது முகாமையாளர்
சங்கானை பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## மகாதேவ ஆச்சிரமம்
MAHADEVA ASHRAMAM
Regd.No:SVP 104/44 of 29.10.1976
TP: 024 324 3443

### விசேட பொதுக்கூட்டம்

இடம்:- ஆச்சிரம பிராத்தனை மண்டபம்

காலம்:- 11.04.2015 சனிக்கிழமை மாலை 3.30 மணி.

விடயம்:- ஆச்சிரம ஆன்மீக வளர்ச்சி, உறுதித்தன்மை, இடர்பாடுகள் பற்றி ஆராய்ந்து தீர்வு காணல்.

பழைய, புதிய அங்கத்தவர்களையும் அரச அதிகாரிகளையும் நலன் விரும்பிகளையும் அன்பர்கள் யாவரையும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

(தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக் கொள்ளவும்)

குறிப்பு:- அங்கத்துவம் இல்லாத அன்பர்கள் அங்கத்தவர்களாகி ஆன்மீகம் வளர்ப்போம். (9972)

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.
இறைபணியில்
ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள்,
குருபீடாதிபதி.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 64<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4363 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 13<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.A/ அரச தொழில்<br>தொ.இ: G/762 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 29.25<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/ பிரான்ஸ் PR<br>தொ.இ: B/4364 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 26.5<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: B.Com/ கனடா<br>எதிர்பார்ப்பு: விவாகரத்துப் பெற்ற வரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/766 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 40 செவ் 8 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L/ சொந்தத் தொழில்<br>தொ.இ: B/4365 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23.5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/788 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 36.25 செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ லண்டன் Not PR<br>தொ.இ: B/4366 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 34 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/791 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





KUMARAN SILKS
புத்தாண்டின் புரட்சி!
குமரன் சில்க்ஸ்
இல. 788, பருத்தித்துறை வீதி,
நல்லூர் , யாழ்ப்பாணம்.
021 205 4075 (C-573)
Discount 10% to 50% வரை
கடை இடமாற்றம் செய்யப்பட இருப்பதால் மலிவு விலையில் அனைத்து ஆடைகளும் விற்பனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட்டை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

வேலணை பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்தும் நோக்கில், வர்த்தக சங்கத்தின் நிதியுதவியுடன் இரவு காவல் கடமைக்கு இரண்டு காவலாளிகள் நியமிக்கவுள்ளதாக வேலணை பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வாரத்துக்குள் வேலணை சந்தியில் 10 மின்விளக்குகள் பொருத்துவதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் திருட்டுக்களை கட்டுப்படுத்த முடியும். இதற்காக ஊர்காவற்றுறை பொலிஸார் முழுமையான உதவிகளை செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

அண்மைக்காலமாக வேலணை பகுதியில் ஆலய விக்கிரகங்கள், உண்டியல்கள் என்பன திருடப்பட்டுள்ளன. ஒரு வாரத்துக்கு முன்னர் வேலணை வங்களாவடி சந்தி பகுதியில் தொடர்ச்சியாக ஏழு கடைகள் உடைக்கப்பட்டு திருட்டு போயுள்ளன.

இவ்வாறான சம்பவங்களினால் வர்த்தகர்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)




## நிர்வாகத் தெரிவு

(கரணவாய்)

உடுப்பிட்டி நாவலர் சனசமுக நிலையத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளதும் நிலையத்தின் புதிய தலைவராக கி. இராஜதுரை, செயலாளராக கொ. குணசிங்கம், பொருளாளராக அ. தயானேஸ்வரன் மற்றும் 8 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3-60)

✦ ✦ ✦ ✦ ✦

(கரணவாய்)

கரணவாய் செல்வாபுரம் இளங்கோ சன சமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிலையத்தின் புதிய தலைவராக கு.மகாலிங்கம், செயலாளராக இ.இரத்தினேஸ்வரன், பொருளாராக நா.றஜிந்தன், உப செயலாளராக ஜெ.சந்திரகலா, உபதலைவராக க.சந்திரமோகன், விளையாட்டுத் துறைத் தலைவராக இ.குணராசா ஆகியோரும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-3-60)

## பொங்கல் விழா

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5மணியளவில் திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகும் பொங்கல் விழா இரவு 7 மணியளவில் அர்த்தசாமப் பூசையுடன் நிறைவு பெறும். (இ)

## க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்-2014

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

**ஆங்கில மொழி மூலம்**

இ.கஜாரணி 9ஏ, உ.ரம்மியா 9ஏ

**தமிழ்மொழி மூலம்**

பா.மாதங்கி-9ஏ, பி.பிரேமி 8ஏபி, புதுவாரகா-8ஏசி, செ.அனோஜா-7ஏபிசி, ப.கோஜிகா- 7ஏபிசி, சி.கஜாணா-7ஏ2சி, சூ.மெலனி- 6ஏபி2சி, சி.சாமினி- 6ஏ2சி எஸ், ப.பபிசாளினி- 5ஏபி2சிஎஸ், ர.நளாயினி- 5ஏபி2 சிஎஸ், ஜெ.சஸ்மிதா- 5ஏபிசி 2எஸ், ஜெ.துலக்சியா- 5ஏபிசி 2எஸ், சு.யனுஜா- 5ஏபி3எஸ், பி.பபித்திரா- 5ஏபிசிஎஸ்.

யாழ்/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

ச.அஜிந்தன்-4ஏபி3சி, வதக்சனா- 2ஏ2பி2சி2எஸ், ஜெ. ஜெஸ்மி- ஏ3பி 2சிஎஸ், தி. வேனுசா- ஏபி4 சிஎஸ், க. உமைப்பிரியா- ஏ5சிஎஸ், சி. தனுசியா- ஏ2சி3எஸ், க. மேனன்- 2பிசி 5எஸ், சி. திவ்யராம்- பி3சி3எஸ். (இ)

## உடைமைகள் திருட்டுப்போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(கரணவாய்)

கரவெட்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொழும்பிலிருந்து ரயில் மூலம் யாழ்ப்பாணம்திரும்பும்பொழுதுதனது உடைமைகளை பறிகொடுத்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக நேற்று நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து இரவு ரயில் மூலம் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பிரஸ்தாப நபர் கிளிநொச்சி ரயில் நிலையம் வரை தனது உடைமைகள் பாதுகாப்பாக இருப்பதை அவதானித்துள்ளார்.

இந்நிலையில் கொடிகாமத்தை வந்தடைந்தபோது உடைமைகள் காணாமற் போயிருப்பதை அவதானித்துள்ளார்.

காணாமற்போன உடைமைகளில் இரண்டு சூட்கேஸ், ஒரு தொகைப் பணம், கடவுச் சீட்டு மற்றும் இதர பொருட்கள் அடங்குவதாக பிரஸ்தாப நபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபர் சவுதியிலிருந்து நாடுதிரும்பிய நிலையில்தனது உடைமைகளை பறிகொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)

## தாய்ப்பால் புரையேறியதால் ஆண் குழந்தை உயிரிழப்பு!

கரவெட்டி கிழக்கு நெல்லியடி பகுதியில், தாய்ப்பால் புரையேறியதால் சிசுவொன்று பலியான சம்பவம், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். நிஸான் இந்துஜன் என்ற 51 நாட்களேயான ஆண் சிசுவே இவ் வாறு பரிதாபமாக உயிரிழநதுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இரவு 8 மணியளவில், குழந்தைக்கு பால் கொடுத்து விட்டு குழந்தை நித்திரையில் உள்ளதாக நினைத்த தாய், வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளார். பின்னர், இரவு 9 மணியளவில் குழந்தையை தூக்கியபோது சிசு அசைவற்று காணப்பட்டுள்ளது.

உடனடியாக குழந்தையினை வைத்தியசாலைகு கொண்டு சென்றபோது, குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)




# கைதான 37 இந்திய மீனவர்களும் 17-ம் திகதிவரை விளக்கமறியலில்

## பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு

**(கரணவாய்)**

**நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எம்.கணேசராஜா உத்தர விட்டுள்ளார். கைது செய்யப்பட்ட 37 மீனவர்களும் பொலிஸாரினால் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.**

இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட மேற்படி 37 இந்திய மீனவர்களும் நேற்றைய தினம் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ்.குடாநாட்டின் நெடுந்தீவு கடற்பகுதியில் வைத்து எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் கீழ் 5 இந்திய இழுவைப் படகுகளையும். 37 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

குறித்த இந்திய மீனவர்கள் 37 பேரும் தமிழகத்தின் நாகப்பட்டினம் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்றுமுன்தினம் கொழும்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பினருக்கும், ஜனாதிபதிக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பில், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைது செய்யுமாறு ஜனாதிபதி கடற்படைக்கு பணிப்புரை விடுத்திருந்ததனால், உடனடியாக இந்தக் கைது இடம்பெற்றிருக்கின்றது.

இதேவேளை கைதான இந்திய மீனவர்கள ஊடகவியலாளர்களுடன் பேசுகையில்,

வழமை போன்றே தாம் திசை மாறி இலங்கை கடற்பகுதிக்குள் வந்துவிட்டதாக தெரிவித்ததுடன், கைது செய்தபோது இலங்கை கடற்படை தம்மை தாக்கியதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-3-4-60)

## காணாமற்போயிருந்த மூதாட்டி சடலமாக மீட்பு

வட்டுக்கோட்டை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பன்னாகம் விசுவத்தேனை பகுதியில் கடந்த வியாழக்கிழமை காணாமற போன மூதாட்டி, நேற்று சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். சுப்பிரமணியம் அன்னம்மா (வயது 92) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை முதல் மேற்படி மூதாட்டி காணாமற் போயுள்ள நிலையில், அவரது உறவினர்கள், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இந்நிலையில மூதாட்டி அவரது வீட்டில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள பழைய வீடொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## பவளவிழாவினை முன்னிட்டு விளையாட்டுப்போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)


அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய பவளவிழாவை முன்னிட்டு நிலாவொளி விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் விளையாட்டுக் கழகத் தலைவர் சி. பிரதாபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறுவர் மரதன் ஓட்டம், பெரியோர், முதியோர் ஓட்டப் போட்டி, ஆண்கள் பெண்கள் சைக்கிளோட்டப்போட்டி மற்றும் மெதுவான மோட்டார் சைக்கிளோட்டம் என்பனவும் மாலை நிகழ்ச்சிகளாக கரப்பந்தாட்டப்போட்டி, கயிறிழுவைப் போட்டி என்பனவும் இடம்பெறவுள்ளன. (இ- 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கக்கடலில் தமிழக மீனவர்களின் உரிமையினை நிலைநாட்ட வேண்டும்!

## ராமதாஸ் வலியுறுத்து



இலங்கை கடற்பகுதியில் மீன் பிடிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்ற தமிழக மீனவர்களின் கோரிக்கையை ஏற்க அந்நாட்டு அரசு மறுத்து விட்டது. அதுமட்டுமன்றி, எல்லை தாண்டி மீன்பிடிக்க வரும் தமிழக மீனவர்களை கைது செய்யவும், அவர்களின் படகுகளை பறிமுதல் செய்யவும் இலங்கை கடற்படைக்கு அந்நாட்டு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஆணையிட்டிருக்கிறார்.

அதன்படி, வங்கக்கடலில் மீன் பிடித்த நாகை மீனவர்கள் 33 பேரை 5 படகுகளுடன் சிங்களப்படை நேற்று முன்தினமிரவு கைது செய்துள்ளது. இந்நிலை மாற வங்கக்கடலில் தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்ட இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியாவின் தமிழக பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை விடுத்து ள்ளார்.மேலும் இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வங்கக்கடலில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பது தொடர்பான பிரச்சினை கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்ததற்குப் பிறகு ஏற்பட்ட இச்சிக்கல் 1980 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு தீவிரம் அடைந்தது. இக்காலகட்டத்தில் வங்கக் கடலில் எல்லை தாண்டிச் சென்று மீன் பிடித்ததாகக் கூறி 800இற்கும் அதிகமான தமிழ்நாட்டு மீனவர்கள் சிங்களக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளானாரகள் .ஏராளமான மீனவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

வங்கக்கடலில் காலம் காலமாக தமிழக மீனவர்களும், இலங்கை மீனவர்களும் நட்புடன் மீன்பிடித்து வந்துள்ளனர். சர்வதேச வழக்கச் சட்டங்களின்படி (Customary international laws) பாரம்பரிய உரிமைகள் சட்டப்படி செல்லும். அந்த அடிப்படையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள வங்கக்கடலில் மீன் பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு உண்டு. இதை இந்தியா வலியுறுத்திக் கேட்கும்போது அதை இலங்கை ஜனாதிபதியாலோ, இலங்கைப் பிரதமராலோ ஒருபோதும் மறுக்க முடியாது.

ஆனால், இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இந்திய அரசு மறுப்பது தான் வேதனையான உண்மை ஆகும். ஐக்கிய நாடுகள் அமைப்பால் உருவாக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்தில் (International Court of Justice) முறையிட்டு இந்த உரிமையை நிலைநிறுத்த முடியும்.

மேலும், வங்கக்கடலில் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து இலங்கைக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்து, அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சர்வதேச காவல்துறை மூலம் மேற்கொள்வதன் மூலம் இந்த பிரச்சினையில இலங்கையை வழிக்கு கொண்டு வர முடியும்.

எனவே, இலங்கை மீது கருணை பார்வை காட்டுவதை விடுத்து, அதிரடியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வங்கக் கடலில் மீன் பிடிப்பதற்கான சட்டபூர்வ உரிமையை தமிழக மீனவர்களுக்கு மத்திய அரசு பெற்றுத் தர வேண்டும். அத்துடன் கைது செய்யப்பட்ட மீனவர்களை அவர்களின் படகுகளுடன் மீட்கவும் மத்திய அரசும், மாநில அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும என்று மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 30 | 30 | 25 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 60 | 50 | 40 |
| தக்காளி | 40 | 60 | 50 | 50 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 40 | 60 | 30 | 40 |
| கரட் | 200 | 140 | 100 | 120 | 100 | 100 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 70 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 80-100 | 40-60 | 60 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 40 | 30-50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 40 | 80 | 140 | 40 | 40 | 40 |
| லீக்ஸ் | 200 | 120 | 120 | 180 | 130-150 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 60 | 30-50 | 40 |
| கறிமிளகாய் | 200 | 140 | 130 | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 320 | 400 | 400-500 | 400 |
| போஞ்சி | 200 | 80 | 100 | 100 | 80-100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 30 | 30 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 60 | 70-90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 100 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 120 | — | — | — | 80 |
| முள்ளங்கி | 30 | 20 | 40 | 60 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 40 | 30 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 15 | 10 | 20 |

# தமிழ் மாணவன் மரணம்

நியூசிலாந்து கடலில் விழுந்து தத்தளித்த போது, இளம் பெண்களால் காப்பாற்றப்பட்ட தமிழ் மாணவன், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

நியூசிலாந்து நாட்டில் பூபேஷ் பழனி (வயது -26) என்ற தமிழ் மாணவர் படித்து வந்தார். கடந்த திங்கட்கிழமை அவர், நியூசிலாந்தில் ஈஸ்ட்போர்ன் என்ற இடத்தில் உள்ள கடலில் விழுந்து தத்தளித்தார்.

அப்போது அங்கு நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த 15 வயதான கெல்லி மெக்காவ் மற்றும் 16 வயதான பாய்கே ஓல்ட்ஸ் ஆகிய ஒன்றுவிட்ட சகோதரிகள் அவரது அலறல் சத்தத்தை கேட்டனர்.

உடனே, பாய்கே ஓல்ட்ஸ் துணிச்சலாக கடலில் குதித்தார். அவருக்கு கரையில் இருந்து இரண்டு இளைஞர்கள் டோர்ச் லைட் அடித்தபடி வழி காட்டினர்.

பாய்கே ஓல்ட்ஸ், மிகவும் ஆழத்தில் நீந்திச் சென்று, பழனியை கண்டுபிடித்தார். அப்போது, பழனி நன்றாக மூழ்கிய நிலையில கிடந்தார். அவரை பாய்கே மீட்டு கரைக்கு கொண்டு வந்தார்.

கரையில், பழனிக்கு கெல்லி மெக்காவ் முதலுதவி சிகிச்சை செய்தார். பின்னர், பழனியை வெலிங்டனில் உள்ள ஒரு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்தனர.

உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த பழனி, 5 நாட்கள் கடந்த நிலையில், நேற்று முன்தினம் மரணம் அடைந்தார். (இ)

# பண்டிகைக் காலத்தினில் பண்டங்கள் பரிசோதனை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, நாடெங்கிலும் உள்ள உணவு நிலையங்களை பரிசோதனை செய்வதற்கு ஆயிரத்து 800 அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

அரச பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

300 வலயங்களை உள்ளடக்கும் வகையில் இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளது.

அதேநேரம் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் உணவு சுகாதார வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. (இ-5)

# சுதந்திரக்கட்சியினர் தேர்தலுக்கு அச்சம்!

## ஜே.வி.பி.சாடல்

தேர்தலுக்கு முகங்கொடுக்க அஞ்சி 19ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தடையாக இருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகள் பாரிய தோல்வியை தரும் என்ற அச்சம் அந்த கட்சிக்கு காணப்படுகிறது.

இதன் காரணமாகவே 19ஆம் திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற அந்த கட்சி ஒத்துழைக்க மறுக்கிறது.

இதனை தோற்கடிப்பதற்கு மக்களைப் போல, இலங்கையின் ஜனாதிபதியினதும் பொறுப்பு என்று மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சபாபதி செல்வரட்ணம்

(முன்னாள் கொள்வனவு அலுவலர் நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட சபாபதி செல்வரட்ணம் கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10மணியளவில் Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave Markham ON L3R 5G1 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி மார்க்கண்டு சின்னம்மா

வண்ணார்பண்ணை பெரிய தம்பிரான் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 96/9,பத்திரகாளி கோயிலடி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா மார்க்கண்டு கடந்த செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப 10மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்



### திருமதி கிருபானந்தன் குமாரறூபி

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் நல்லூர்,லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபானந்தன் குமாரறூபி கடந்த 21 ஆம் திகதி அன்று காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10மணிதொடக்கம் பி.ப 1மணிவரை United Reform Church 18,Court Hill Road, Lewisham, London, SE13 6HB என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### வரதன் திலேஷா

கனடா Montreal ஐ பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வரதன் திலேஷா கடந்த 2ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிதொடக்கம் நண்பகல் 12 மணி வரை Aeteerna Funeral Complex, 55 Gince Street, Saint-Laurent, QC H4N 1J7 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாம் வாழ்வது மூடிய கல்லறையிலா அல்லது திறந்த கல்லறையிலா?



இன்று இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா. இயேசுவை பின்பற்று பவர்களின் நம்பிக்கையின் படி இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சிலுவையில் அறையப் பட்டு அடக்கம் செய்யப்பட்டு மூன் றாம் நாள் மரணத்தில் இருந்து உயிர்த்ததையே இது குறிக்கிறது. கிறிஸ்தவர்களால் கொண்டாடப்ப டும் இவ் உயிர்ப்பு பெருவிழா கிறிஸ்தவ திருவழிபாட்டுக் கால அட்டவணையில் மிக முக்கிய மான திருநாளாகும். இது ஆண் டின் பெப்ரவரியில் வருகின்ற ஒரு புதனன்று ஆரம்பமாகி ஏப்ரல் இறுதி வரையான காலப்பகுதியி லேயே வழமையாக வருகின்றது. இந்நாள் உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் எட்டு நாள் திரு விழாவாக கொண்டாடப்படுவது வழக்கமாகும்.

உலகிற்கு வர்ணிக்க இயலாத மகிழ்ச்சியையும் எதிர்நோக்கை யும் அளித்த இருநிகழ்வுகள்தான் இயேசுவின் மனுப்பிறப்பும், உயிர்ப் பும் ஆகும். மனிதரை அளவுக்க திகமாக அன்பு செய்யும் இறை வன், அவர்களை மீட்க ஒருமனித னாக பிறந்து உலக வரலாற்றில் இடம் பிடித்திருக்கிறார். பாவம் எதுவும் இல்லாத தூயவரான அவ ரது சிலுவை மரணம் அவரு டைய சீடருக்குத் தாங்கமுடியாத வேத னையாய் அமைந்தது. தங்களு டைய எதிர்நோக்கு அனைத்தும் அற்றுப் போனதாக அவர்கள் நினை த்தார்கள்.

ஆனாலும் மூடி முத திரையி டப்பட்டு போர் வீரர் காவல் வைக்கப் பட்ட அக்கல்லறை திற ந்து கொள்ள அதில் அடக்கம் செய்யப் பட்டி ருந்த இயேசு மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்தார். அதன்பின்னர் தனது சீடர்களுக்கு காட்சி கொடுத்து அவர்க ளைத் திடப்படுத்துகிறார்.

ஆம், எம் அனைவ ருக்கும் பல கல்லறை கள் உள்ளன. அவை கள் மூடிய கல்லறைக ளாகவே இருக்கப் போகி ன்றனவா அல்லது அவை திறபட நாம் வெளியே வருவோமா? என சிந்திக்க அழை ப்பதே இயேசுவின் உயி ர்ப்பு ஆகும்.

கல்லறை என்பது நாம் சந்திக் கின்ற, எம்மை சுற்றியி ருக்கின்ற போராட்டங்கள் - தீராத வலிகள்- துன்ப துயரங்கள், ஏமாற் றங்கள் - நோய்கள் - கவலைகள் - குழப் பங்கள் - சோகங்கள், பொருளா தார கஷ்டங்கள் என்ற வாழ் வின் பல்வேறு எதார்த்தங்கள் ஆகும்.

இயேசு, அனுபவித்த மறுதலிப் புக்கள், துரோகம் - அவமானங் கள்- யாருமே கணிக்க முடியா பாடுகள் - யாருமே கண்டிராத ஆணியின் வலிகள் -எவருமே இத் தனைதூரம் தாங்கியிராத குற்ற வாளி போன்ற கொடிய சிலுவை மரணம் - அந்நிய நிலத்திலே கல்லறை. இவைகள் எல்லாம் சொல்லும் செய்தி என்ன வென் றால் நம் நிலைமையில் நம் துன்பதுயர எதார்த்தத்தில் கலந்து இந்த கல லறை அனுபவங்கள் எங்களை முடக்கி வைகக்கூடாது அதிலி ருந்து வெளியே வாரு ங்கள் என்ற அழைப்பே ஆகும்.

கல்லறை காலியாக காணப் பட்ட அச்சத்தோடும் கலக்கத்தோ டும் இயேசுவின் உடலை யாரோ திரு டிச்சென்றுவிட்டனர் என கலங் கினர் சீடர்கள். இயேசுவின் உடலை திருடிமறைத்து விட்ட னர் என வருத்தப்பட்டனர்.

இயேசு உயிர்த் திருக்கலாம் என்ற எண் ணம் சிறிதளவும் அவர்களிடம் எழவில்லை. கார ணம் இயேசுவை சீடர்கள் மற் றும் உடன்இருந்தோர் யாரும் உண்மையில் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என லாம்.

இயேசுவின் போதனை-படிப் பினை-செயல்கள் அனைத்தும் ஒருபுதிய சிந்தனை மாற்றத்தை கொடுக்கவில்லை.

எனவே காலியான கல்லறை இயேசுவின் உயிர்ப்புக்கு சான் றாக அவர்களுக்குத் தெரிய வில்லை. இயேசுவின் வாழ்வு கல்லறையோடு முடிந்துவிட்டது என்பதே அவர்களது அப்போதைய நிலை. நம் வாழ்வும் மூடிய கல்ல றைபோல்தான் மீண் டும் மீன் பிடிக்க செல்ல வேண் டியது தான் என எண்ணிக் கொண்டிருக்கை யில் இயேசு உயிருள்ளவராக அவர்கள் முன் தோன்றிய போது மூடிய - மழு ங்கிய - முடங்கிய எண்ண ங்கள், மனங்கள் திறக்கப்படு கின்றன. திருத்தந்தை பிரான் சிஸ் தன்னுடைய முதல் பொது சந்திப்பிலும் மற்றும் பெரிய வியா ழன் எண்ணெய் மந்திரிப்பு சடங் கிலும் 'வெளியே வாருங்கள் பல் வேறுவகையில் துயரப்படு வோரின் வாழ்வில் வெளியே சென்று புங்கெ டுங்கள்' என்ற சவாலான அழை ப்பினை விடுத் தார். இதுவே திறந்த கல்லறையின் உயிர்த்த இயேசுவின் அழைப்பு ஆகும்.

'குறைபாடு ஒரு வாய்ப்பாகும்' என்ற நம்மை இம்மானுவேல் கெல்லியின் வீரவார்த்தைகள் சிந்திக்க அழைக்கிறது. சதாம் உசேனின் போர் வன்முறை கொடு மைகளின் பொழுது போர்க் களத் தில் கைவிடப்பட்ட வெற்று வெடி குண்டு பெட்டியில் கைகால்கள் வளர்ச்சியின்றி கண்டெடுக்கப்பட்ட வர்களே இந்த இம்மானுவேலும் அவன் சகோதரனும் ஆவர். அன் னைதெரேசா மடத்திலிருந்து மொரியா கெல்லி என்ற பெண் அவர்களை தத்துதெடுத்து அவுஸ்தி ரேலியாவிலே வளர்க்கின்றார்.

இம்மானுவேலும் அவன் சகோ தரனும் பல அறுவைசிகிச்சைக்கு ஆளாகினர். இன்னும் பல மருத்து வசிகிச்சைகள் இருக்கின்றன. ஆனால் இம்மானுவேலுக்கு அவ னது வாழ்க்கை இயல்பாக முடி யாது என்றும் மூடியகல்லறையே அவனது வாழ்க்கை என்று பலர் சொன்ன பொழுது, 'என்னுடைய குறைபாடு நான் வெளியே வரு வதற்கான ஒரு வாய்ப்பு' என கல்ல றையிலிருந்து வெளியே வந்தது. பாடலில் பிரபலமாகி எக்ஸ்பேக்டர் என்ற நிகழ்ச்சி வழியாக உலகிற்கு உயிர்த்த இயேசுவின் சக்தி மற்றும் சாட்சி நான்தான் என நிரூபி த்திரு க்கின்றான்.

நாம் வாழுவது மூடிய கல்ல றையிலா அல்லது திறபடப் போகும் கல்லறையிலா? எமது எண் ணங் கள்,மனநிலைகள் திறக்கப்பட வேண்டும்? விடைதேடுவோம்.!

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**




- 456 - சென் பாட்ரிக் அயர்லாந்துக்கு மத தூதராக வந்தார்.
- 1614 - வேர்ஜீனியாவில் அமெரிக்கப் பழங்குடியினளான போக்கஹொண்டாஸ் ஆங்கிலேய குடியேற்றவாதியான ஜோன் ரோல்ஃப் என்பவனைத் திருமணம் புரிந்தாள்.
- 1654 - ஆங்கில-டச்சுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு வெஸ்ட்மின்ஸ்டர் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1792 - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் முதற்தடவையாக வீட்டோ அதிகாரத்தைப் பயன் படுத்தினார்.
- 1804 - முதற்தடவையாக விண்கல் ஒன்று வீழ்ந்தது ஸ்கொட்லாந்தில் பதிவானது.
- 1879 - பொலிவியா மற்றும் பெரு மீது சிலி போரை அறிவித்தது. பசுபிக் போர் ஆரம்பமானது.
- 1897 - கிரேக்கத்துக்கும் ஓட்டோமான் பேரரசுக்கும் இடையில் போர் ஆரம்பமானது.
- 1930 - மகாத்மா காந்தி அரபிக் கடலின் குஜராத் கடற் கரையோரப் பகுதியான தண்டியில் உப்புச் சட்டத்தை மீறி உப்பைக் கையிலே அள்ளி எடுத்து வந்து தனது 241 மைல் நடைப் பயணத்தை முடித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் போர்க் கப்பல்கள் இலங்கையைத் தாக்கின. இரண்டு பிரித்தானியக் கப்பல்கள் தாண்டன.
- 1945 - பனிப்போர்: யோகொஸ்லாவியாவினுள் சோவியத் படைகள் தற்காலிகமாக நுழைவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி ஜோசப் டீட்டோ சோவியத் ஒன்றியத்துடன் உடன்பாடு செய்து கொண்டார்.
- 1946 - 11 மாதங்கள் ஆக்கிரமிப்பின் பின்னர் சோவியத் படைகள் டென்மார்க் தீவான போர்ன் ஹோல்மை விட்டு விலகினர்.
- 1955 - ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் பதவியிலிருந்து வின்ஸ்டன் சேர்ச்சில் விலகினார்.
- 1956 - பிடெல் காஸ்ட்ரோ கியூபாவின் ஜனாதிபதியுடன் போரை அறிவித்தார்.
- 1956 - இலங்கைப் பொதுத்தேர்தலில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தலைமையிலான கட்சி வெற்றி பெற்றது.
- 1957 - இந்தியாவின் கேரளா மாநிலத்தில் பொதுவுடமைவாதிகள் ஆட்சியைக் கைப்பற்றினர். ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் முதல மைச்சரானார.
- 1964 - பூட்டான் பிரதமர் ஜிக்மி டோர்ஜி சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1971 - இலங்கை அரசிற்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டின் தென் பகுதிகளில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- 1976 - மக்கள் சீனக் குடியரசில் தியனன்மென் சதுக்கத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட நிகழ்வு இடம் பெற்றது.
- 1998 - அக்காஷி-கைக்கியோ பாலம், உலகின் மிகப் பெரிய தொங்கு பாலம், ஜப்பானில் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டது.

**பிறப்புகள்**


- 1908 - ஜகஜீவன் ராம், இந்தியத் துணைப்பிரதமர், (இ.1986)
- 1929 - Ivar Giaever, நோபல் பரிசு பெற்ற நோர்வே இயற்பியலாளர்
- 1933 - க.கைலாசபதி, தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் (இ. 1982)

**இறப்புகள்**

- 1957 - ராம. அழகப்பச் செட்டியார், இந்திய தொழிலதிபர் (பி. 1909)
- 1967 - ஹேர்மன் முல்லர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1890)
- 1992 - சாம் வோல்ற்றன், அமெரிக்க விற்பனை நிறுவனம் வோல் மார்ட் நிறுவனர் (பி. 1918)

2005 - [illegible] (பி. [illegible])

### ராம. அழகப்பச் செட்டியார்



ராம.அழகப்பச் செட்டியார் தமிழ் நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் கோட்டையூரில் கே.வி.அழ.ராமநாதன் செட்டியார் மற்றும் உமையாள் ஆச்சி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக ஏப்ரல் 6, 1909 ஆம் ஆண்டு பிறந்தார்.

இவர் ஓர் இந்தியத் தொழிலதிபரும் வள்ளலும் ஆவார்.

விடுதலை அடைந்த நேரத்தில் தமிழ் நாட்டின் உயர்கல்வி வளர்ச்சிக்காக பல கல்விச் சாலைகளையும் ஆய்வு கூடங்களையும் தமது செலவில் நிறுவி தமிழகம் இந்தியாவில் கல்வியில் சிறந்த மாநிலமாக விளங்க வித்திட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை தொடர்பில் பா.ஜ.கட்சி தீர்மானம்

இலங்கை தொடர்பில் இந்திய பாரதீய ஜனதாக் கட்சி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பெங்களூரில் நடைபெறும் இரண்டு நாட்கள் தேசிய மாநாட்டின் போது இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் போர் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்கள் தொடர்பில் உள்நாட்டு அரசியல் கருதி முன்னைய அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இதன் காரணமாக இரண்டு நாட்டு உறவுகளிலும் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கையுடனான உறவை புதுப்பிக்க இந்திய பிரதமர் மோடி உறுதிபூண்டுள்ள்தாக அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மோடியை பொறுத்தவரை இராஜதந்திர வெற்றி என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# தமிழ்க்கூட்டமைப்புடன் இணைந்து எதிர்க்கட்சியை உருவாக்கத் தயார்!

ஜே.வி.பி.ஆதரவு



(கொழும்பு)

**நிமால் சிறிபால டி சில்வா தொடர்ந்தும் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவராக இருப்பதற்கு தகுதியற்றவர். அதேபோல தினேஷ் குணவர்த்தனவால் எதிர்க்கட்சி தலைவராக முடியாது. ஒரே கட்சி ஆளும் தரப்பாகவும் எதிர்த்தரப்பாகவும் இருந்து செயற்பட அனுமதியில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியை உருவாக்க நாம் தயார், சபாநாயகரிடமும் எமது விருப்பத்தை முன்வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.**

பிரதான இரு கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ள நிலையில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி யார் என்ற முரண்பாடு ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக வினவியபோதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தேசிய அரசாங்கத்தை சொந்தம் கொண்டாடுகின்றன .இரு கட்சிகளின் அங்கத்தவர்களும் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்றனர்.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஒரு சிலர் தம்மை எதிர்க்கட்சியாக அடையாளப்படுத்திக்கொண்டு விவாதிக்கின்றனர், பாராளுமன்றத்தில் நான்கு கட்சிகளே அங்கம் வகிக்கின்றன, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு அரசாங்கமாக இருக்கையில் அதே கட்சி எவ்வாறு எதிர்க்கட்சியாக முடியும், பாராளுமன்றத்தினை வேடிக்கையாகும் வேலையினை இவர்கள் செய்கின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சியாக நியமிக்க வேண்டும். அதேபோல் நாம் பிரதிநிதித்துவப் படுத்தும் ஜனநாயக கூட்டணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அந்தஸ்தினை பெறவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. எதிர்க்கட்சி தலைவர் யார் என்பது இரு கட்சிகளின் இணைக்கப்பாட்டின் அடிப்படையில் தெரிவுசெய்ய முடியும் ஆனால் உண்மையான எதிர்க்கட்சியாக நாம் நியமிக்கப்படவேண்டியதே இப்போதைய அவசியமாகும்.

எனவே இவ் விடயத்தினை நாம் சபாநாயகரிடம் முன்வைத்துள்ளோம் ,

பாராளுமன்ற விதிமுறைகளுக்கு அமைய சரியான முறையில் எதிர்க்கட்சியை நியமிக்க வேண்டும் . இல்லையேல் அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான போக்கினை கட்டுப்படுத்த முடியாது போய்விடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஏமனில் சிக்கியுள்ள இலங்கையர்களை விமானம் மூலம் மீட்க சீனா நடவடிக்கை

ஏமனில் இடம்பெற்று வரும் மோதல்களினால் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை சீன விமானத்தின் மூலம் பஹ்ரேனுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பஹ்ரேனுக்கு அழைத்து செல்லும் இலங்கையர்களை விமானத்தின் மூலம் தாய்நாடடிற்கு அழைத்து வர திட்டமிட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏமனில் இடம்பெறும் பதற்றநிலை காரணமாக 91 இலங்கையர்கள் நிர்க்கதியாகியுள்ளனர் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஏமன் வான்பரப்பில் சீன விமானங்கள் பயணிப்பதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படாத காரணத்தினால் இலங்கையர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையிலும் நிர்க்கதியான 3 இலங்கையர்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பியதுடன், அவர்கள் தனிப்பட்ட ரீதியில் நாட்டிற்கு திரும்பியுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார். (இ-5)

### வாக்குறுதிகளை நிறைவேற்றாமல்

## தேர்தல் நடத்தப்பட்டால் கடுமையான நடவடிக்கை

### சோபித தேரர் எச்சரிக்கை

தேர்தல் நடத்தப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கோட்டை ஸ்ரீ நாக விஹாரையின் விஹாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

100 நாட்கள் வேலைத்திட்டத்தில் அளிக்கப்பட்ட சகல வாக்குறுதிகளையும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

அரசாங்கம் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது அவசர தேர்தல் ஒன்றை நடத்த முயற்சித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கத்தின் தேர்தல் குறித்த முனைப்புக்கள் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை திருத்துதல், 17 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தல், புதிய தேர்தல் முறைமை ஒன்றை அறிமுகம் செய்தல் ஆகியன புதிய அரசாங்கம் தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளாகும். இந்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

நாட்டு மக்களும், இந்த அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த முயற்சித்தரப்புக்களும் அவசர தேர்தல் ஒன்றை எப்போதும் கோரவில்லை.

நாடாளுமன்றை கலைத்து தேர்தல் நடத்த போதியளவு கால அவகாசம் இருக்கின்ற நிலையில், அவசர அவசரமாக 100 நாட்கள் வேலைத்திட்டத்தை நிறைவேற்றாது தேர்தல் நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என மாதுலுவாவே சோபித தேரர் சிங்கள பத்திரிகையொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

## விலைமனு கோராத எந்தவொரு திட்டத்திற்கும் அனுமதியில்லையாம்

விலைமனு இல்லாத எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் அனுமதியளிப்பதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விலைமனுக் கோரல்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளிக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது குறித்த யோசனையை முன்வைத்துள்ளார்.

கடந்த காலங்களில் அபிவிருத்தி திட்டங்களை முன்வைத்த அமைச்சர்கள் விலைமனுக் கோரல்கள் எதுவுமின்றி திட்டங்களுக்கு அனுமதி பெற்றுக்கொண்டுள்ளதாக பிரதமர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் விலைமனுக்கள் கோராது அபிவிருத்தி [illegible] மதி கோரப்பட்டால் [illegible] அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### மூளை உபயோகம்

"நான் ஒரு விடயம் சொல்லுவேன் அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் தான் சொல்ல முடியும்"

"சொல்லுங்கள்"

"நமது மூளையை நாம் முழுமையாக உபயோகப்படுத்துவதில்லை என்கிறேன்"

"உண்மை தான்.... ஒரு சராசரி மனிதன் தனது மூளையில் ஒரு சிறிய பகுதியைத்தான் உபயோ கப்படுத்துகிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது"

"பார்த்தீர்களா... அப்படி இருக்கும்போது அது ஞாபக மில்லை இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக் கொண்டு இருக்கிறோம்"

"ஒரு மனிதன் தனது மூளையில் 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை பதிந்து வைத்துக்கொள்ள முடியும்"

"அப்படியா...."

"நாம் படிப்பது மனதில் பதிய வேண்டுமானால் நாம் அதை படித்த பின்னரும் மனதில் நிறுத்தி 10 நிமிடமாவது அசைபோட வேண்டும்"

"காலை நேரத்தில் படிப்பது நல்லது அல்லவா?"

"மூளையின் செயலாற்றும் திறன் ஒவ்வொரு மணிக்கும் மாறுபடுகிறது. காலையில் சுறுசுறுப்பு, மதியத்தில் மந்தம், உடம்பு சோர்ந்து போகும்போது மூளையும் சோர்ந்து விடு கிறது. அவ்வப்போது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத் வேண்டும்" "இது ஒரு மனநோய் மருத்துவமனை தானே?"

"ஆமாம்"

"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களிடம் இவ்வளவு தூரத்திற்கு கேள்வி கேட்டதனால் என்னை மனநோயாளி என்று நீங்கள் தப்பாக புரிந்து கொள்ளக்கூடாது"

"இவ்வளவு தூரத்திற்கு பதில் சொன்னதால் நீங்களும் என்னை தப்பாகப் புரிந்து கொள்ளக் கூடாது.. நான் டாக்டர் இல்லை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தொழிலதிபர்கள் இலங்கையில் முதலிடத்தயார்



இலங்கையில் தொழில் தொடங்க தமிழகத் தொழில் அதிபர்கள் தயார் ஆகி வருகிறார்கள். இலங்கை வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் இதில் ஆர்வம் காட்டிவருகிறாராம். அந்த வகையில், பி.ஜே.பியுடன் தமிழகத்தில் கூட்டணியில் உள்ள கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் 19 பேர் கொண்ட குழுவினர், போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் பகுதிக்குச் சென்று "என்னென்ன புதிய வேலை வாய்ப்புகளைத் தொடங்கலாம்?' என்று ஆய்வு செய்து திரும்பியிருக்கிறார்கள். இந்தக் குழுவில் திருப்பூர் கார்மென்ட்ஸ் தொழிலதிபர்கள், கரூரில் உள்ள பிரபல பஸ் பாடி கட்டும் உரிமையாளர், நுளம்பு வலை தயாரிக்கும் கம்பனியின் உரிமையாளர், ஈரோடு பெரு விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பட்டவர்கள் சென்றிருக்கிறார்கள்.

"தமிழகத்தைச் சேர்ந்த சிறிய அளவு முதல் பெரிய அளவு வரை தொழில் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், இலங்கைக்குத் தாராளமாகப் போகலாம். வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் இருகரம் நீட்டி அழைக்கிறார். மீன்பிடித் தொழில், விவசாயம் மட்டுமே போதாது. புதிய புதிய

## அடுத்த கட்டம் வேலை தொடங்கும் என்கிறார் ஈஸ்வரன்

தொழில்கள் மூலம் பொருளாதார ரீதியாக தற்போது சிரமப்படும் தமிழ் மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படும். இலங்கையில் நடந்த படுகொலைக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரம், போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள், ஆதரவற்ற விதவைகள் மறுவாழ்வு பெறவேண்டும். அதற்கு தமிழகப் பகுதியில் தொழில் வேலைவாய்ப்பு பெருகுவதோடு, மக்களுக்கு சம உரிமை பெற வழிவகை செய்யவேண்டும்" என்று சொல்லும் கொ.ம.தே கட்சியின் பொதுச் செயலாளர் ஈஸ்வரனிடம் சில கேள்விகளை முன்வைத்தோம்.

**"உங்கள் குழுவினரைச் சந்தித்த தமிழ் மக்கள் என்ன சொல்கிறார்கள்?"**

"நான் போகவில்லை. எனது குழுவினர்தான் இலங்கை சென்றனர். அங்குள்ள தமிழர்கள் எங்கள் குழுவிடம், "தமிழக அரசியல்வாதிகள் எங்கள் நாட்டைப் பற்றி வீணாக விமர்சனம் செய்வதை நிறுத்தச் சொல்லுங்கள். அவர்கள் அங்கே பேசினால் எங்களுக்கு இங்கே அடி விழுகிறது. மேடையில் பேசுவதை விட்டுவிட்டு, இங்கே... தொழில் வாய்ப்புகளைத் தர முன்வந்தால், நாங்கள் உழைத்துப் பிழைத்துக்கொள்வோம்' என்றார்கள். அவர்கள் சொல்வது சரிதான். இங்கேயிருக்கும் சிலர் அங்குள்ள சூழ்நிலை தெரியாமல் திட்டித் தீர்க்கிறார்கள். அதை இத்துடன் நிறுத்திக்கொண்டு தொழில் ரீதியாக இலங்கைத் தமிழர்களுக்கு உதவவேண்டும். உதாரணத்துக்கு, கிளிநொச்சியில் வட இந்திய தொழில் அதிபர் ஒருவர், கார்மென்ட்ஸ் தொழிற்சாலையை ஆறு மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்தார். 2 ஆயிரம் தமிழர்கள் அங்கே வேலை பார்க்கிறார்கள். "வடநாட்டுக்காரருக்கு தோன்றியது ஏன் நம் ஊர் தொழில் அதிபர்களுக்குத் தோன்றவில்லை' என்பதுதான் புரியவில்லை"

**"கொங்கு மண்டல தொழில் அதிபர்கள் அங்கே தொழில் தொடங்கத் தயாராக இருக்கிறார்களா?"**

"இங்கே 5 ஆயிரம் பேர்களுக்கு வேலை தரும் ஒரு தொழில் அதிபர், இலங்கையில் 200 பேருக்கு வேலை தரும் தொழிற்சாலையைத் தொடங்க முடியும். இப்படி எங்கள் கட்சியில் உள்ள தொழில் அதிபர்களால் வரும் காலங்களில் சுமார் 10 ஆயிரம் பேருக்கு நிச்சயமாக வேலை தரமுடியும். இலங்கையில் விரைவில் பிரதமர் பதவிக்கான பொதுத் தேர்தல் நடக்க உள்ளது. அதன் முடிவுக்குப் பிறகு, எங்கள் குழு அங்கே போய் தொழிற்சாலைகளைத் தொடங்கும்."

**"இலங்கையில் மத்தியில் உள்ள ஆட்சிக்கும் மாகாண ஆட்சிக்கும் சுமுகமான உறவு இருந்தால்தானே... நீங்கள் பாதுகாப்பான சூழலில் தொழில் தொடங்க முடியும். அப்படி ஒரு சூழ்நிலை தற்போது நிலவுகிறதா?"**

"நம் பிரதமர் மோடி சென்றுவிட்டு வந்த பிறகு, அங்கே நிலைமை மாறிவிட்டது. ஒன்றுபட்டுச் செயற்படத் தயாராக இருக்கிறார்கள். முதல்வர் விக்னேஸ்வரன் என்னுடன் தொலைபேசியில் பேசினார். அப்போது நான் பொள்ளாச்சியில் இருந்தேன். தென்னை விவசாயம் பற்றி விரிவாகப் பேசினார். நிச்சயமாக, பேச்சுடன் இது நிற்காது. நடைமுறையில் செய்துகாட்டுவோம்"

**"இலங்கையில் தமிழர்கள் வாழும் சில பகுதிகளில் இராணுவ முகாம்கள் இன்னமும் விலக்கப்படவில்லையே? விடுதலைப் புலிகள் அமைப்பினர் சர்வதேச அளவில் மீண்டும் உயிர்பெற்று வருவதாக இலங்கை அரசு சந்தேகத்தைக் கிளப்புகிறதே?"**

"இலங்கையில் புதிய தொழில் தொடங்கி வேலை வாய்ப்புகளை நாம் கொடுத்து, இந்திய அரசு மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து சம உரிமை கிடைக்க வைக்கலாம். அப்படி நடந்தால், இலங்கையில் உள்ள இளைஞர்கள் வெளிநாடு செல்ல மாட்டார்கள். அதேபோல, வெளிநாட்டில் உள்ள இளைஞர்கள் இலங்கைக்கே திரும்பிவிடுவார்கள். இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலை உருவாகும்போது, விடுதலைப்புலிகள் இயக்கம் உயிர்பெறும் என்கிற சந்தேகம் எங்கே வரப்போகிறது? தற்போது தமிழர்கள் பகுதிகளில் உள்ள இராணுவத்தை இனியும் தொடர்ந்து நிறுத்தவேண்டிய அவசியமும் ஏற்படாது"

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய சேவை நிலையம் அமைக்கப்படும்

## மகளிர் விவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**வன்னியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக மாற்றுத் திறனாளிகளாக்கப்பட்டோர் மற்றும் ஷெல் துகள்களை உடலில் சுமந்து கொண்டு திரிவோரின் நலன் கருதி அவர்களுக்கு சிகிச்சை வழங்கும் நோக்கில் வைத்திய சேவை நிலையம் ஒன்றை கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கவுள்ளதாக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



தேசிய மகளிர் தின வைபவம் - 2015இற்கு இசைவாக மருத்துவம் மற்றும் சட்டம் தொடர்பான நடமாடும் சேவையொன்று நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளி/மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வன்னி யுத்தம் காரணமாக மாற்றுத் திறனாளிகளாக்கப்பட்டும் ஷெல் துகள்களை உடலில் சுமந்து திரிவோரின் நலனைக் கவனத்தில் கொண்டும் யாழ்ப்பாணத்தில் வைத்திய சேவை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானித்திருந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் வேண்டுகோளுக்கமைய குறித்த வைத்திய சேவை நிலையத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கவுள்ளோம்.

அதேவேளை முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் காங்கேசன்துறையில் ஜனாதிபதிக்கான செயலகம் ஒன்று அமைக்கப்பட்டு வந்ததாகவும் நானும் நேரில் சென்று பார்வையிட்டேன்.

பல மில்லியன் ரூபா செலவில் சுயநலத் தேவைக்காக இது அமைக்கப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

இதன் மிகுதி வேலைகளையும் பல மில்லியன் ரூபா செலவில் தொடருவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

இச்செயலகத்திற்கு பதிலாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஆகியவற்றை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதமை வேதனைக்குரிய தொன்றாகும்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீள இயக்கும் பட்சத்தில் அதன் தூசுகள் குறித்த செயலக கட்டடத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நலனை கருதி வேலை வாய்ப்புக்கள் ஏனைய திட்ட நடைமுறைகளை செயற்படுத்தாமையானது சுய அரசியல் இலாபத்தை எதிர்நோக்குவதாகவே கருதப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நடமாடும் வைத்திய பரிசோதனையை நடத்துவதற்கு வேறு இடங்களில் இருந்தும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்தும் வைத்தியர்கள் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்கள் வருகை தந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருந்த வேளை திடீரென மின்சாரம் தடைப்பட்டது.

இத்தகைய மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் நடைபெறும் சமயம் மின்சாரம் வேண்டுமென்றே நிறுத்தப்பட்டதா? என பொதுமக்களாலும் சிகிச்சை அளிக்க வந்திருந்தோராலும் கேள்வி எழுப்பப்பட்டது. (2-254)




# பெண்களை மையப்படுத்தி விசேட நலத்திட்ட நிகழ்வுகள் கிளிநொச்சியில் இருதினங்கள்

(மல்லாவி)

மகளிர்விவகார அமைச்சர் திருமதி சந்திராணி பண்டார தலைமையில் வடக்கு மாகாணப் பெண்களை வலுவூட்டும் விசேட நிகழ்ச்சித் திட்ட நிகழ்வுகள் நேற்றும் இன்றும் நடை பெற்று வருவதாக மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்றைய தினம் நடைபெறும் நிகழ்வு முற்பகல் 9 மணிக்கு கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள கிளிநொச்சி ப.நோ. கூட்டுறவு சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், வன்னி யுத்தத்தால் பாதிக்கப்ப ட்ட பெண்களை மையப்படுத்தி இரு நாட்கள் கொண்ட பல்வேறு நலத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக் குடன் மகளிர் விவகார பிரதி அமைச்சர் நேற்று காலை கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

இதன்போது கிளி/இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கண் சிகிச்சை மருத்துவ முகாமில் பங்கேற்று பாதிக்கப்பட்ட பெண்களுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினார்.

இதேவேளை இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்வில் வாழ்வாதாரத்தை இழந்துள்ள 50 பெண்களுக்கு தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சுய தொழிலுக்கான உதவிப் பணத்தை வழங்கி வைக்கவுள்ளார்.

அத்தோடு தொழில் உபகரணங்களையும் கடன் அடிப்படையில் வழங்கி வைக்கவுள்ளார்.

மேலும் வன்னி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் 150 பேருக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைப்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 75 விளையாட்டுக் கழகங்களுக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும்அவர்வழங்கிவைப்பார்.

இந்நிகழ்ச்சியின் நிறைவில் கலை நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது. (2-15)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் விபத்துக்குள்ளானது

## இரு சிறுவர்கள் படுகாயம்

(மல்லாவி)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளானதில் அதில் பயணித்த இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். படுகாயமடைந்த இருவரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 2ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் பூநகரி பரந்தன் வீதியில் நடைபெற்றுள்ளது.

இதில் பூநகரியைச் சேர்ந்த எஸ்.டெனீஸ்குமார் (வயது- 17), கே. சிவநாதன் (வயது-15) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவ்விபத்தில் எஸ்.டெனீஸ்குமார் தலையில்படுகாயம்அடைந்தநிலையில் அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த இரு சிறுவர்களும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தலைக்கவசம் இன்றி வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதில் இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

# அடுத்து வரும் இரு ஞாயிற்றுக்கிழமைகள் கிளி.மாவட்டத்தில் மின்சாரம் தடைப்படும்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றும் அடுத்துவரும் இரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மின்சாரம் காலை 9 மணியிலிருந்து மாலை 5.30மணி வரைதடைப்பட்டிருக்குமென கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் தியாகு குகராஜன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் 12,19 ஆகிய இரு ஞாயிற்றுக்கிழமை களிலும் மின்சாரம் தடைப்ப ட்டிரு க்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பிரகாரம் இன்று ஞாயிற்றுக்கிழமை அமைதிபுரம், கோபுரம், கரித்தாஸ் குடியிருப்பு,அக்கராயன், ஸ்கந்தபுரம்,விநாயகர் குடியிருப்பு, யூனியன்குளம், கோணாவில், மணியன்குளம்,ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம்,ஜெயபுரம், நாகபடுவான், கிராஞ்சி,வேரவில், வலைப்பாடு,நாச்சிக்குடா, முழங்காவில், பல்லவராயன்கட்டு, வெள்ளாங்குளம், இரண்டாவது கொமோண்டோ படை முகாம்,வியாஸ் மொமட் ஐஸ் தொழிற்சாலை, முழங்காவில் கடற்படை முகாம் 651 ஆவது படைப்பிரிவு ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இதேவேளை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமைகளில் கனகபுரம், அம்பாள்குளம், ஜெயந்திநகர், செல்வாநகர், புதுமுறிப்புக்குளம், உருத்திரபுரம், சிவநகர், பன்னங்கண்டி, இரத்தினபுரம், வட்டக்கச்சி, உடைச்சகண்டி, மாயவனூர், கோவிந்தன் கடைசந்தி, இராமநாதபுரம், உருத்திரபுரம் ப.நோ.கூட்டுறவுச்சங்க அரிசி ஆலைவட்டக்கச்சி விவசாயப்பண்ணை, கிளிநொச்சி விமானப்படை முகாம்-1,விமானப்படை முகாம்-2 ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்குமென அவர் அறிவித்துள்ளார். (2-15)

## விபத்தில் வாகனம் தலைகீழானது-ஒருவர் காயம்

(பனிக்கன்குளம்)

ஏ-9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்தகன்டர் ரக வாகனம்வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் சுமார் 25மீற்றர் தூரம் வரை தூக்கி வீசப்பட்டு தலைகீழானது. இதில் பயணித்த ஒருவர் காயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.15 மணியளவில் கொக்காவில் பதினெட்டாம் போர் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் மாத்தளையைச் சேர்ந்த முகமட் ஸ்மைல் என்பவரே காயமடைந்தவராவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மாத்தளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி புடைவை வியாபாரத்தில் ஈடுபடுவதெற்கென வந்து கொண்டிருந்த வேளையிலேயே குறித்த வாகனம் வீதியை விட்டு விலகி இவ்விபத்துக்குள்ளானது.

இது தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)

# மேரிகமலாவின் இடத்திற்கு நடராஜ் நியமனம்

(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய த.தே.கூட்டமைப்பைச் சேர்ந்த திருமதி மேரிகமலா குணசீலன் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு அமைய உறுப்பினர் பதவியை விட்டுக் கொடுத்து விலகியுள்ளார்.

இவரது இடத்திற்கு வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ஈ.பி.ஆர் எல்.எப். கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.நடராஜ் த.தே.கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தகமானி பிரசுரச் செய்தி தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வடக்கு மாகாண சபை தேர்தலின் போது,த.தே.கூட்டமைப்பிற்கு இரு போனஸ் ஆசனங்கள் கிடைத்தது.

இதில் ஓர் ஆசனம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியைச் சேர்ந்த அஸ்மினுக்கு வழங்கப்பட்டது.

மற்றைய ஆசனம் சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு த.தே.கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி மேரி கமலா குணசீலன் தனது ஒரு வருட காலத்தை பூர்த்தி செய்த நிலையில் தனது பதவியினை விட்டு விலகியுள்ளார்.

இந்நிலையில் இரண்டு தடவைகள் நடைபெற்ற வடக்குமாகாண சபையின் அமர்வுகளில் தொடர்ச்சியாக இவர், பங்கேற்காத நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும்

## தமிழிசை சௌந்தரராஜன் நம்பிக்கை

**(டில்லி) இலங்கைத் தமிழர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட பிரதமர் நரேந்திர மோடியின் பயணம் உதவியாக இருக்கும் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் மீண்டும் நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் பெங்களூரில் தனியார் ஹோட்டலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பா.ஜ.க. தேசிய செயற்குழுக் கூட்டத்தில், மத்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்தியில் பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு வெளிநாடுகளுடனான இந்திய உறவை மேம்படுத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

அதன் விளைவாக இலங்கை போன்ற அண்டை நாடுகள் தவிர, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடனான இந்திய உறவு மேம்பட்டுள்ளது. இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் குறித்து தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, தமிழர்கள் அதிக அளவில் வசிக்கும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றது உலகத் தமிழர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

போரால் பாதிக்கப்பட்டு நம்பிக்கை இழந்திருந்த இலங்கைத் தமிழர்களிடையே புதிய நம்பிக்கையை விதைக்கும் வகையில் இப்பயணம் அமைந்திருந்தது. மோடியின் இலங்கைப் பயணம், இன்னல்களால் வாழ்க்கையைத் தொலைத்திருந்த தமிழர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த உதவியாக இருக்கும்.

கடந்த 2011 இல் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டு, தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட 5 தமிழக மீனவர்களை மீட்க பிரதமர் மோடி நேரடியாக மேற்கொண்ட முயற்சி மீனவர்களிடையே புதிய நம்பிக்கையை அளித்துள்ளது.

5 மீனவர்களை விடுதலை செய்து இந்தியா அழைத்து வந்தது, வெளிநாட்டில் சிக்கியிருந்த தமிழகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ மத போதகரை மீட்டது போன்ற சம்பவங்கள் மாநில மக்களிடையே பா.ஜ.கவின் செல்வாக்கை உயர்த்தியுள்ளது.

தமிழர்களின் நலன் சார்ந்த விவகாரங்களில் அக்கறையோடு செயற்பட்டால் மாநிலத்தில் பா.ஜ.கவை வளர்ப்பது எளிதாக அமையும். பா.ஜ.கவின் சாதனைகளை தமிழக மக்களிடையே கொண்டு செல்ல தொடர் முயற்சிகளில் ஈடுபடுவோம் என்றார் அவர்.

வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பேசுகையில், பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம், அங்கு வாழும தமிழர்களிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பயணம் தமிழர்களின் வாழ்வில் திருப்புமுனையாக அமையும் என மேலும் தெரிவித்தார்.

பா.ஜ.க. தேசிய செயற்குழுக் கூட்டத்தில் மத்திய இணையமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன், நிர்வா கிகள் இல.கணேசன், எச்.ராஜா, சி.பி.ராதாகிருஷ்ணன், கேசவவி நாயகம், மோகன்ராஜுலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மீனவர்களின் பிரச்சினைக்கு உடனடித்தீர்வு காணவேண்டும்

## கருணாநிதி வேண்டுகோள்

இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் பாரபட்சமின்றி கைது செய்யப்படுவார்கள் என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள நிலையில் தமிழக மீனவர் பிரச்சினைக்கு மத்திய அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என இந்தியாவின் தமிழகத்திலுள்ள கட்சியான தி.மு.கவின் தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை மீனவர்களோடு நமது மீனவர்கள் எத்தனை முறை பேச்சுவார்த்தை நடத்தினாலும், பேசும் போது பிரச்சினை சுமூகமாக முடிவுக்கு வரும் என்று தோன்றிய போதிலும், நமது மீனவர்களின் துன்பங்கள் தொடர்கதையாகவே நீடிக்கின்றன.

ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது, படகுகளுடன் சிறைபிடிக்கப்படுவது, மீனவர்களின் விலையுயர்ந்த மீன்பிடிக் கருவிகளையும், வலைகளையும் பறிமுதல் செய்வது போன்ற மனிதாபிமானமற்ற செயல்கள் நின்றபாடில்லை.

இருநாட்டு மீனவர்களுக்கிடையே நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, பிரச்சினைக்கு தீர்வு ஒன்றினை எட்டி விடும் என்று எண்ணியிருந்த வேளையில், தமிழக மீனவர்களை அச்சுறுத்தும் வகையில், இலங்கை ஜனாதிபதி அந்த நாட்டுக் கடற்படைக்கு புதிய உத்தரவு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அதில், இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மனவர்களை பாரபட்சமின்றி கைது செய்ய வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்.

எனவே பிரதமர் நரேந்திர மோடி நமது மீனவர்களின் நெடுங்கால பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்தி, உடனடியாக இந்திய மீனவர்களின் பிரதிநிதிகளையும், தமிழக அரசினரையும், அழைத்து கோரிக்கைகளைக் கேட்டறிந்து, அதன் தொடர்ச்சியாக, இலங்கை ஜனாதிபதியிடம் நேரடியாகப் பேசி, தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைக் கண்டு, மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடும் வழி வகைகளுக்கான முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன என கருணாநிதி மேலும் கோரிக்கை விடுத்துள்ளாா. (இ-5)

# கென்யாவிற்கு செல்வதில் எந்தவித மாற்றமுமில்லை

## ஒபாமா உறுதி

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது தந்தையின் பூர்விக நாடான கென்யாவிற்கு செல்வதில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவித்துள்ளார்.



கென்யா பல்கலைக்கழகத்தின் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 147 மாணவர்கள் கொல்லப்பட்டனர். இதனால் இந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி ஒபாமா மேற்கொள்ளவிருந்த பயணம் இரத்து செய்யப்படலாம் என கூறப்பட்டது. ஆனால்நேற்றுமுன்தினம் கென்யா ஜனாதிபதி உகுரு கென்யாட்டேவிடம் தொலைபேசியல் பேசிய ஒபாமா அந்நாட்டிற்கு தனது ஆதரவையும், இரங்கலையும் தெரிவித்தார். அப்போது தனது கென்யா பயணத்தையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பல்கலைக்கழகத்தின் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு எந்த வார்த்தைகளாலும் ஆறுதல் சொல்ல முடியாது. தீவிரவாதத்திற்கு எதிரான போரில் கென்யாவுடன் அமெரிக்கா கைகோர்த்து செயற்படும் என தெரிவித்துள்ளார். (இ-5)

# ஜனாதிபதி மாளிகையிலிருந்து கிளர்ச்சியாளர்கள் வெளியேற்றம்

சவுதி அரேபிய வான்வழித் தாக்குதலுக்கு பின்னர், ஏமன் ஜனாதிபதி மன்சூர்ஹாதியின்மாளிகை உள்ள ஏடனிலிருந்து கிளர்ச்சியாளர்கள் வெளியேறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதி மன்சூர் ஹதியின் அரசை முடக்கி சண்டையிட்டு வருவதால் அவர்களுக்கு எதிராக சவுதி அரேபியப் படை போர் நடத்தி வருகிறது. முக்கிய துறைமுக நகரான ஏடன், அங்கிருக்கும் ஜனாதிபதி மாளிகையை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் சிறைபிடித்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி ஹதி ஆதரவாளர்களுடன் சவுதி அரேபியா நடத்திவரும் இரவு நேர வான் வழித் தாக்குதலைத் தொடர் ந்து அங்கிருந்து கிளர்ச்சியாளர்கள் வெளியேறியதாக தகவல் வெளியானது.

இது குறித்து பெயர் குறிப் பிடாமல் பேசிய ஏடன் நகர அதிகாரி, அல்-மாஷிகி மாளிகையிலிருந்து நேற்று அதிகாலை அளவில் ஹவுத்தி கிளர்ச்சிப்படை போராளிகள் வெளியேறினர் என்றார்.

உள்நாட்டு பாதுகாப்புப் படையும சுவுதி அரேபிய செய்தி நிறுவனங்களும் கிளர்ச்சியாளர்கள் பிடியிலிருந்து மாளிகை மீட்கப்பட்டதாக தெரிவித்துள்ளன.

ஷியாப் பிரிவு ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து சவுதி அரேபிய படையுடன் முன்னாள் ஏமன் ஜனாதிபதி அலி அப்துல்லாவின் ஆதரவுப் படைகள் கடந்த மாரச் மாதம் 26ஆம் திகதி ஏமனில போரை தொடங்கியது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அமெரிக்க நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

அமெரிக்காவில் பாடசாலை மாணவர்களுக்கு யோகாவை கற்றுத் தரலாம். யோகாவிற்கும் மதத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என அமெரிக்க நீதிமன்றம் நேற்று தீர்ப் பளித்துள்ளது.

கலிபோர்னியா மாகாணத்தின் சான் டியாகோ நகரம் அருகில் உள்ள பாடசாலையில் படிக்கும் தங்கள் குழந்தைகளின் மத சுதந்திரத்தை பறிக்கும் வகையில் அவர்களுக்கு தொடக்கப்பாடசாலையில் யோகா பயிற்றுவிக்கப்படுவதாக, இரண்டு மாணவர்களின் பெற்றோர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தார்கள். இது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும் குற்றஞ் சாட்டியிருந்தார்கள்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் யோகா மதசார்பற்றது. மேலும் எந்த மத நம்பிக்கைகளையும் திணிக்கவோ, அல்லது மாணவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தவோ இல்லை. இது அரசியல் சாசனத்திற்கு எதிரானதும் இல்லை என்றும் தீர்ப்பளித்துள்ளது.

தற்போது யோகா வெறும் உடற் பயிற்சியாகவும், மனதை ஒருமுகப்படுத்துவதற்கும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் உலகத்திற்கு கிழக்காசியாவின் மாபெரும் கொடைதான் யோகா என்பதை புலர் இன்னும் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் எனத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித தியாகமுமின்றி எந்தவித நன்மையையும் பெறமுடியாது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பை சந்திரிகா செய்வாரா?

நல்லிணக்கம் இல்லாவிட்டால் அரசின் முயற்சிகள் தோல்வியடையும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கம் என்பது எதைக் குறிக்கிறது என்ற தெளிவான வரையறையை சிங்களத் தலைமைகள் புரிந்துள்ளனவா? என்பது சந்தேகத்துக்குரியது.

இலங்கையில் இப்போது தேசிய அரசு அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தேசிய அரசு மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற கருத்து நிலையும் உண்டு.

இலங்கையில் தேசிய அரசை அமைப்பதென்பது சாத்தியப்படாத விடயம் என எண்ணப்பட்டிருந்த போதிலும் இப்போது அது சாத்தியமாகியுள்ளது.

தேசிய அரசு என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கவில்லையாயினும் கூட்டமைப்பு ஆதரித்த ஒருவர் ஜனாதிபதியாக இருப்பதன் காரணமாக தேசிய அரசு அமைவதில் கூட்டமைப்பின் வகிபங்கும் உண்டு என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதிலேயே நல்லிணக்கம் ஏற்பட முடியும் என்பது இங்கு தெளிவாகிறது. தனித்து சிங்களக் கட்சிகள் சந்தர்ப்பவசமாக ஒன்றிணைந்து தேசிய அரசை அமைத்து விடுவதன் மூலம் நல்லிணக்கம் ஏற்பட்டு விடாது.

மாறாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமே இந்த நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இங்கு வாழும் சகல இனங்களுக்கும் இந்த நாடு சொந்தமானது என்ற பிரசாரத்தை தேசிய அரசு முன்னெடுப்பது அவசியம். இதைச் செய்யாத விடத்து தேசிய அரசு அமைந்து விட்டது எனப் பெருமிதம் கொள்வதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டா.

மாறாக பேரினவாதம் ஒழிக்கப்படுவதுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற கருத்து நிலை தென்பகுதியில் இருந்து வலியுறுத்தப்படுவதாக நிலைமை மாற்றியமைக்கப்படவேண்டும். இதன்போதே நல்லிணக்கம் என்பது சாத்தியமாகும். எனினும் தென்பகுதி இன்று வரை தமிழர்களின் பிரச்சினையை உணர்ந்து கொண்டதாகவோ, உள்வாங்கியதாகவோ தெரியவில்லை.

மாறாக மகிந்த ராஜபக்ஷ எந்தத் தவறு செய்தாலும் அதுபற்றிப் பரவாயில்லை. அவரை மீண்டும் நாட்டின் தலைவர் ஆக்க வேண்டும் என்பதில் இப்போது அமைச்சர்களாக இருக்கின்ற பலர் உறுதியாக உள்ளனர்.

புதிய அரசின் தகவலின்படி, கோடிக்கணக்கான பணம் முன்னைய அரசால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது. அரச நிதியில் நடக்கும் மோசடிகள் ராஜதுரோகத்திற்குரிய குற்றத்தைக் கொண்டவை.

நிலைமை இதுவாக இருக்கின்ற போதிலும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியே இந்த நாட்டில் பௌத்த சிங்கள ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் என்ற மனநிலை இருக்கும் வரை சந்திரிகா கூறும் நல்லிணக்கம் என்பது ஒருபோதும் சாத்தியப்படமாட்டாது.

ஆக, தேசிய அரசின் முதற்பணி தேசிய ஒற்றுமையைக் கட்டிக் காப்பதாகும். தேசிய ஒற்றுமை கட்டிக் காக்கப்படவேண்டும் எனில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதற்கு முன்னதாக இலங்கை எல்லா இனமக்களுக்குமானது என்ற பிரசாரம் நாட்டின் மூலைமுடுக்கெங்கும் ஒலிப்பது அவசியம். இந்தப் பணியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னின்று செய்வாராயின் அவர் எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் வெகு தூரத்தில் இல்லை.

## யாழ்.ஆயரின் ஈஸ்டர் வாழ்த்துச் செய்தி

கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசம் பயனற்றதே. (1கொரி 15:17) என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தமது உயிர்ப்பு ஞாயிறு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும்,

இறைவன் எமது நம்பிக்கை வாழ்வைத் திடப்படுத்தி நாம்புத்துயிர் பெற்றவர்களாய் முன்னோக்கிச் செல்லத் துணையாகத்தான் ஒவ்வொரு வருடமும் ஈஸ்டர் விழாவை நாம் கொண்டாட அருள் கூர்ந்துள்ளார்.

மரணத்தை வென்றவரான, தீமைகளை, அநீதிகளை அழித்தவராக இயேசு மரித்து 3 ஆம் நாள் உயிர்த் தெழுந்ததை இன்று நாம் மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம். கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக இந்த விழா அமைகின்றது.

உலகம் எங்கும் இன்றும் பல துன்ப துயரங்கள், மனித வாழ்வில் சலிப்புத் தன்மைகள், வேதனைகள், இடர்கள் பெருகிவரும் வேளையில் உயிர்த்த இயேசுவின் உங்களுக்கு அமைதி உரித்தாகுக (யோகா 20:21) என்ற நம்பிக்கையின் வார்த்தை எமக்கு ஆறுதலைத் தருவதாக உள்ளது.

இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு துன்பங்களை, மரணத்தை வென்ற அவரின் வழியில் நாமும் நடந்து எமது துன்ப, துயர இருள் நிறைந்த வாழ்வில் இருந்து விடுபட்டு உள்ளத்திலும் உலகிலும் இறை அமைதி பெருகிட உயிர்த்த ஆண்டவரை வேண்டுவோம்.

உங்கள் எல்லோரினதும் மனங்களில் உயிர்த்த கிறிஸ்து நிறை அமைதியைஅருள ஆசிக்கின்றேன். உங்களுக்கு எனது ஈஸ்டர் வாழ்த்துக்கள் உரித்தாகுக என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## அரசிலிருந்து ஊழல்வாதிகளை பாதுகாக்கிற நபர் யார்?

### தேர்தலில் தெரியப்படுத்துவோம்-ஹெல உறுமய

(கொழும்பு)

ஊழல், மோசடியாளர்களை சட்டத்திற்கு முன்கொண்டு வரும் நடவடிக்கைக்கு அரசாங்கத்தில் இருந்து தடையேற்படுத்தும் நபர் யார் என்பதை எதிர் வரும் நாடாளுமன்ற தேர்தலில் நாட்டுக்கு தெரியப்படுத்த போவதாக ஜாதிக ஹெல உறுமய தேசிய அமைப்பாளரான மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த காலத்தில் எவராலும் மறைந்திருந்து எதனையும் செய்ய முடியாது. சகல தகவல்களும் வெளியில் வரும். இதனால், கண்ணாடி மாளிகைக்குள் இருந்து ஆடைகளை அவிழ்க்க வேண்டாம் எனவும் வர்ணசிங்க கூறியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜாதிக ஹெல உறுமயவின் பிரதான அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் எதிர்ப்பு போராட்டத்திற்கு என்ன நடந்தது? ஊழல் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து செல்ல முடியாத படி அவமான சம்பவம் ஒன்று இந்த அரசாங்கத்தில் நடந்தது.

இதற்கு யார் பொறுப்புக் கூறவேண்டும்? மைத்திரிபால சிறிசேனவா? இல்லை, ரணில் விக்கிரமசிங்கவே இதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

மத்திய வங்கியில் பாரிய நிதி குற்றம் நடந்துள்ளது. அந்த குற்றத்திற்கான பொறுப்பை யார் ஏற்பது?

இது இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அகௌரவம், அவப்பெயர். நல்லாட்சி பால் குடத்தில் சாணத்தை போட்டது போல் இந்த சம்பவம் நடந்துள்ளது.

ஒரு புறம் தமது குறுகிய அரசியல் தந்திரத்திற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிளவுப்படுத்தும் நோக்கத்தில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களுக்கு சட்டத்தை செயற்படுத்த இடமளிக்கப்படுவதில்லை.

இதற்கு தடையேற்படுத்தும், அழுத்தம் கொடுக்கும் நபர்கள் இருக்கின்றனர். ஊழல் எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பதிலாக தமது அரசியல் தந்திரத்திற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்துவது நல்லது என அவர்கள் எண்ணுகின்றனர் எனவும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஊழல்வாதிகளை பிடித்த பின்னரே அடுத்த வேலையை பார்ப்பேன்-தில்ருக்ஷி

ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்ட அனைவரையும் இனங்கண்ட பின்னரே அடுத்த வேலையை பார்க்க போவதாக இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தில்ருக்ஷி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர்கள் சிலர் அவருக்கு எதிராக செய்துள்ள முறைப்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை எனவும்; எவ்வாறான போலி குற்றச்சாட்டுக்களை சுமத்தினாலும், சகல திருடர்களையும் பிடிக்காமல் திரும்பி பார்க்க போவதில்லை எனவும் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

2002-ம் ஆண்டு இரண்டு நிறுவனங்களில் தில்ருக்ஷி விக்கிரமசிங்க சம்பளம் பெற்று அரச பணத்தை மோசடி செய்துள்ளதாக 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவருக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட தில்ருக்ஷி, பண ரீதியாக என்னை வீழ்த்தவே சிலர் எனக்கு எதிராக பொய்யான முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

சதிகாரர்களின் இவ்வாறான மோசடிகளினால் நான் ஒருபோதும் தளர்ந்து போக மாட்டேன்.

எனக்கு எதிராக எந்த சதிமுயற்சியில் ஈடுபட்டாலும் உண்மையான திருடர்களை பிடித்து விட்டே மறுவேலை பார்ப்பேன்.

நான் இரண்டு சம்பளங்களை பெற்றதாக கூறுவது பச்சை பொய். எவரது தூண்டுதலிலோ எனக்கு எதிராக சேறு பூசி வருகின்றனர்.

நான் அரச பணத்தை மோசடி செய்தவள் அல்ல மாறாக அரசாங்கத்திற்கு பணத்தை சம்பாதித்து கொடுத்தவள்.

எனக்கு எதிராக செய்துள்ள இந்த முறைப்பாடு குறித்து துரிதமாக விசாரணை நடத்துமாறு நான் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டேன்.

குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க நான் எப்போதும் தயாராகவே இருக்கின்றேன்.

நான் சரியானதை சரியாக செய்யும் பெண். எடுத்து கொண்ட பணியை செவ்வனே செய்வேனே ஒழிய இடைநடுவில் விட்டு செல்லும் கோழையல்ல.

இதனால், எந்த நேரத்திலும் கடவுள் என்னை காப்பார் என தில்ருக்ஷி விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## புண்ணிய கிராம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பிரதேச அறநெறிப் பாடசாலைகளும் இணைந்து நடத்தும் புண்ணிய கிராம நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கரணவாய் கிழக்கு அருள்மிகு வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர ஆலயத்தில் இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சசிகுமார் ஜெயசெல்வி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் ச. சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினராக வட இலங்கை சைவபரிபாலன சபை செயலாளர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## ஜனாதிபதி ஆணைக்குழு அம்பாறையில் விசாரணை

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நாளை திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிழமை வரை தொடர்ந்து 4 நாட்கள் அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ளன. முதன்முறையாக அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமையும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலாளர் பிரிவிலும், 8ஆம் திகதி புதன்கிழமையும், 9ஆம் திகதி வியாழக்கிழமையும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்த அமர்வுகள் நடைபெறவுள்ளன.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழு கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் பகிரங்க அமர்வுகளை நடத்த ஆரம்பித்தது. வடக்கு, கிழக்கில் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு ஆணைக்குழு இதுவரை சென்று சாட்சிகளைப் பதிவுசெய்திருந்தது. தற்போது முதன்முறையாக அம்பாறை மாவட்டத்திற்கு ஆணைக்குழு செல்லவுள்ளது.

அதேவேளை, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகளை புறக்கணிக்குமாறு தமிழ் சிவில் சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (செ-11)

## தாட்சி சுற்று போட்டி இன்று

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின் (வளர்ச்சி நிதிக்காக) யாழ்.மாவட்ட தாட்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட தாட்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 3.30 மணிக்கு உடுவில் உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கண்ணகி விளையாட்டுக் கழகம் (மயிலிட்டி), காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் (கொக்குவில்) என்பன கலந்து போட்டியிடவுள்ளன.

ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் து.யோகராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனோட் கலந்த கொள்ளவுள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்னா திருமண விழாவில் அனுஷ்காவுடன் வந்த கோலி





இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான சுரேஷ் ரெய்னா, சிறு வயதிலிருந்தே தனது நண்பராக விளங்கிய பிரியங்கா சவுத்ரியை நேற்றுமுன்தினம் திருமணம் செய்து கொண்டார்.

இத்திருமண விழாவிற்கு பி.சி.சி.ஐ. முன்னாள் தலைவர் சீனிவாசன், இந்திய கிரிக்கெட் அணி கப்டன் டோனி, அவரது மனைவி சாக்ஷி, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் ரெய்னாவுடன் இணைந்து விளையாடிய மேற்கிந்திய தீவு வீரர் டுவெய்ன் பிராவோ மற்றும் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளம்மிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய அணியின் விராட கோலி தனது காதலி அனுஷ்கா சர்மாவுடன் கலந்துகொண்டார். இவர்கள தவிர இந்திய அணியின் ஒட்டு மொத்த வீரர்களும் இவ்விழாவில் பங்கேற்றனர். திருமணத்தை முன்னிட்டு ரெய்னாவுக்கு பிரதமர் மோடி வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார். (க)

# டெஸ்ட் அணியில் மீண்டும் குப்தில்




நியூசிலாந்து கிரிக்கெட் அணி மே மற்றும் ஜூன் மாதங்களில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்த டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலககோப்பை போட்டியில் சிறப்பாக விளையாடியதால் தொடக்க வீரர் மார்ட்டின் குப்தில் டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் பெற்றுள்ளார். 28 வயதான அவர் 2 ஆண்டு இடைவெளிக்கு பிறகு டெஸ்டில் விளையாடுகிறார்.

கடைசியாக இங்கிலாந்துக்கு எதிராக 2013 ஆம் ஆண்டு விளையாடினார். குப்தில் 31 டெஸ்டில் விளையாடி 1718 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 2 சதமும், 12 அரை சதமும் எடுத்துள்ளார். 189 ஓட்டங்கள் குவித்ததே அதிக பட்சமாகும்.

சமீபத்தில் நடந்து முடிந்த உலக கோப்பை போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்தவர் குப்தில். மேலும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக இரட்டை சதம் (237 ஓட்டங்கள்) அடித்தும் சாதனை புரிந்தார். இதேபோல மேட் ஹென்றியும் டெஸ்ட் அணியில் இடம் பெற்றுள்ளார்.

நியூசிலாந்து- இங்கிலாந்து மோதும் முதல் டெஸ்ட் மே 21ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை லார்ட்ஸ் மைதானத்திலும், 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் மே மாதம் 29 ஆம் திகதி முதல் ஜூன் 2 ஆம் திகதி வரை லீட்ஸ் மைதானத்திலும் நடக்கிறது. (க)


# மியாமி ஓபன் டென்னிஸ் போட்டி இறுதிப்போட்டியில் ஜோகோவிச்-முர்ரே


மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. உலகின் 'நம்பர்1' வீரரான ஜோகோவிச் (செர்பியா) அரை இறுதியில் ஜான் இஸ்னெரை (அமெரிக்கா) எதிர் கொண்டார். இதில் ஜோகோவில் 7-6 (7-3), 6-2 என்ற நேர்செட் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார்.

ஜோகோவிச் இறுதிப் போட்டியல் இங்கிலாந்தை சேர்ந்த ஆண்டி முர்ரேயை சந்திக்கிறார். 3 ஆம் நிலை வீரரர்ன முர்ரே அரை இறுதியில் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் 6 ஆம் நிலை வீரரான தாம் பெர்டிச்சை தோற்கடித்தார்.

ஜோகோவிச் முர்ரே மோதும் இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நடைபெறும் பெண்கள் இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)- சுராஸ் நவரோ (ஸ்பெயின்) மோதுகிறார்கள். (க)





# மலேசியன் ஓபன் பட்மின்டன் அரையிறுதியில் சாய்னா தோல்வி





மலேசியன் ஓபன் பட்மின்டன் போட்டி கோலாலம்பூரில் நடைபெற்று வருகிறது. பெண்களுக்கான ஒற்றையர் அரையிறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால், ஒலிம்பிக் சம்பியனான சீனாவின் லீ சூய்ருய்யை எதிர்கொண்டார்.

இதில் சாய்னா முதல் செட்டை 21-13 என எளிதில் வென்றார். இதனால் சாய்னா இறுதி போட்டிக்கு முன்னேறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சுதாகரித்துக் கொண்டு விளையாடிய சீன வீராங்கனை லீ இரண்டாவது செட்டை 21-17 என கைப்பற்றினார்.

இதனால் வெற்றியை தீர்மானிக்கும் 3 ஆவது செட்டில் இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினார்கள். இதனால் இருவரும் மாறிமாறி புள்ளிகள் எடுத்தார்கள். இதனால் யார் ஜெயிப்பார்கள் என்பது புரியாத புதிராக இருந்தது. இறுதியில் கடும் போராட்டத்திற்குப்பின் லீ 22-20 என்ற செட் கணக்கில் சாய்னாவை வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றார். 11 முறை லீ உடன் மோதிய சாய்[illegible] அதில் தோல்விய[illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# குறுந்தகவல் மூலமாக காதலை ஆரம்பித்த டோனி




இந்திய அணித்தலைவர் டோனியை அவரது மனைவி சாக்ஷி ஒரே ஒரு பொன் சிரிப்பில் காதல் வயப்பட வைத்திருக்கிறார்.

முன்னதாக இருவரும் ஒரே பாடசாலையில் படித்தவர்கள் என்பதோடு இருவர் குடும்பங்களும் நண்பர்கள். ஆனால் அப்போதெல்லாம் இருவருக்குமிடையே ஆழமான பிணைப்பு இல்லை.

கொல்கத்தாவின் தாஜ் ஹோட்டலில் சாக்ஷி கேட்டரிங் படித்து கொண்டே வேலைபார்த்து கொண்டிருந்தார்.

அப்போது அங்கு கிரிக்கெட் போட்டிகளுக்காக சென்ற டோனி, அங்கு சாக்ஷியைச் சந்தித்திருக்கிறார். அவரைப் பார்த்தவுடனேயே டோனிக்கு பிடித்துவிட்டது.

அதன் பிறகு டோனி தனது சகோதரர் மூலம் சாக்ஷி போன் நம்பரை வாங்கி குறுந்தகவல் அனுப்பியிருக்கிறார். முதலில் சாக்ஷியால் அதை நம்பவே முடியவில்லையாம்.

பிறகு தன் பிறந்த நாளுக்கு சாக்ஷியை மும்பைக்கு அழைத்த டோனி, அங்கே வைத்து தன்னை திருமணம் செய்ய சொல்லி கேட்டிருக்கிறார்.

தற்போது இருவருக்கும் ஜிவா (பெர்ஷியன் மொழியில் அழகு) என்ற அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தத்திற்கு...

கும் அவர்கள் சார்ந்த மத உரிமை மத சுதந்திரமுண்டு.

அவர்கள் தமது மதத்தை பின் பற்றுவதற்கான அனைத்து உரிமைகளும் உண்டு. ஒரு நாட்டை கட்டியெழுப்புவதற்கு மதக் கோட்பாடும் முக்கியமாகும்.

பல மொழி பேசுகின்ற பல விதமான மக்களையும் பின்பற்றுகின்ற அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து அவர்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையை எமது அரசாங்கம் செய்து வருகின்றது.

சகவாழ்வையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். நல்ல சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

நீண்ட கால யுத்தத்தினால் நாம அனைவரும் பல கஷ்டங்களை அனுபவித்தோம். மீண்டும் அவ்வாறான ஒரு யுத்தம் வருவதற்கு நாம் இடமளிக்ககூடாது.

மத நம்பிக்கையின் மூலமும் நியாயமான நிலைமையை ஏற்படுத்தல், வறுமையை இல்லாதொழித்தல், கல்வி வளத்தை அதிகரித்தல், எல்லா பிரஜைகளுக்கும் கௌரவத்தை ஏற்படுத்தல், நல்ல பொருளாதார நிலையை ஏற்படுத்தல் போன்றவற்றால் மூலமுமே நாம் மீண்டும் இந்த நாட்டில் யுத்தம் ஏற்படுவதை தடுக்கமுடியும் என ஜனாதிபதி தெரிவித்தார். (செ-11)

## ஜனாதிபதி...

களில் ஈடுபட்ட அனைத்து தரப்பினரையும் பாரபட்சம் பார்க்காது தண்டனை வழங்குவதில் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்.

சமுர்த்தி அமைச்சின் ஊடாக சமுர்த்தி வங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள 72 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதியை திவிநெகும, சமுர்த்தி சலுகைகளை பெறுவோருக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 200 சதவீத சலுகைகளை வழங்குவதாக நாம் அளித்த வாக்குறுதிக்கமைய இம் மாத ஆரம்பத்திலேயே 14 இலட்சத்து 78 ஆயிரத்து 14 பேருக்கு சலுகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அரசியல் மயப்படுத்தலிலிருந்து சமுர்த்தி துறை நீக்கப்பட்டுள்ளதுடன், திறமையின் அடிப்படையில் பதவியுயர்வு மற்றும் இட மாற்றம் வழங்கப்படவுள்ளது.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் ஜனாதிபதியின் அதிகாரங்களை நீக்கி பாராளுமன்றத்திற்கு வலுச் சேர்க்கும் கட்டமைப்பை உருவாக்கப்படவுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினால் நாட்டிற்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை நீக்கி இலங்கையில் புதிய அரசியல் கலாசாரமொன்றை ஏற்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என அமைச்சர் தெரிவித்தார்.

இருந்த போதிலும், மக்களின் நன்மதிப்பினால் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவை அதிகாரங்களற்ற பொம்மையாக்க முற்படவில்லை எனவும், நடைமுறையிலுள்ள ஜனாதிபதி முறைமையில் காணப்படுகின்ற எல்லை மீறிய அதிகாரங்களை நீக்குவதற்கே தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## வடக்கு கிழக்கிற்கு...

வேறு எந்த அரசாங்கமும் முன்னெடுக்கவில்லை.

நாட்டில் தற்போது நல்லாட்சி ஏற்பட்டுள்ள நிலையில் உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதில் பெருமளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனால் கடந்த காலங்களில் உலக தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதை நிராகரித்து வந்தனர்.

இதேவேளை அடுத்த மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்பட உள்ளது எனவும்,

தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைக்கப்படும். தேசிய அரசாங்கம் என்பது அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்வதல்ல, மாறாக அனைத்து கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டில் இருந்து நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதே என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனைத்து கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் இருந்து செயற்பட தவறினால், எதிர் காலத்தில் நாடு பாரிய பிரச்சினைகளை எதிர் கொள்ள நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட, கிழக்கு பிரச்சினை இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது எனவும், இரு பிரதான கட்சிகள் இணைந்து வடக்கு கிழக்குக்கு நியாயமான அதிகார பரவலாக்கத்தை வழங்குவது தொடர்பில் இணக்கம் காணவேண்டும்.

அதேபோல் யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இரு பிரதான கட்சிகளும் இணைந்து முகம் கொடுக்க வேண்டும் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மகிந்த அரசிற்கு...

கம்புறுப்பிட்டிய மாபலானே பகுதியில் கட்சி அலுவலகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் சுனில் அந்துன்நெத்தி தெரிவித்ததாவது,

அந்த மக்கள் நல்லாட்சியை எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் தம்மை தோற்கடிக்க முயற்சித்த எஸ்.பி. திசாநாயக்க போன்றவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை தாரைவார்ப்பது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடமையல்ல.

மக்களும் அதனை எதிர்பார்க்கவில்லை. கடந்த ஆட்சியின் போது ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை தாலாட்டாது அவர்களுக்கு தண்டனை விதிக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தற்போதைய ஆட்சியில் மத்திய வங்கியின் ஆளுநருக்கு சலுகைகள் வழங்கப்படுமானால் அதுவே தற்போதைய ஆட்சியாளர்களினதும் முடிவாக அமைந்துவிடும்.

ஆனால் தற்போது ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவதாக தெரியவில்லை.

ஊழல்வாதிகளை இனம் கண்டு அரசாங்கம் தண்டனை வழங்காவிட்டால், மகிந்தவிற்கு நிகழ்ந்ததைப்போன்று இந்த அரசாங்கத்திற்கும் நிகழும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## மகிந்தவின் பிடியிலிருந்து...

தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மூன்றாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷ அழிக்க முயற்சிக்கின்றார்.

முதல் தடவையாக சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட போது, பிரஜா உரிமை பறிக்கப்பட்ட பெண் ஒருவரை கட்சியின் தலைவியாக ஏற்றுக் கொள்ள முடியாது என நாடு முழுவதிலும் மகிந்த கூட்டங்களை நடத்தினார்.

தற்போது எவ்வாறு கூட்டங்களை நடத்துகின்றாரோ அதே போன்று கட்சி உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு சிறிமாவோவை விரட்டியடிக்க முயற்சித்தார்.

2001-ம் ஆண்டிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சிக்கவிழ்க்கப்பட்டது.

தற்போது மூன்றாவது தடவையாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்ய மகிந்த தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

மூன்றாவது தடவையாக தேர்தலில் போட்டியிடுமாறு பலர் என்னை வற்புறுத்திய போதிலும் ஜனநாயக ரீதியில் நான் நடந்து கொண்டேன். அதனால் தான் அப்போது மகிநத ராஜபக்ஷவை கையில் பிடித்துக் கொண்டு சென்று பதவியில் அமர்த்தியனேன்.

ஆனால் மகிந்த மற்றும் ராஜ பக்ஷக்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டனர், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டனர்.

இதனை நீதிமன்றில் சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கும் வரையில் நான் காத்திருக்கிறேன வெறுமனே குற்றச்சாட்டுக்களை சுமத்தப் போவதில்லை.

நாட்டுக்காக ஏற்கெனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் ஓய்வு பெற்றுக் கொண்டதன் பின்னர் நடந்து கொண்டதனைப் போன்று மகிந்த ராஜபக்ஷவும் நடந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மகிந்த, அவரது சகோதரர்கள், மகன்மார், மனைவி, மனைவியின் உறவினர்கள் மற்றும் ஏனைய நண்பர்கள், உறவினர்கள் ஆட்சி நிர்வாகப் பணிகளை குடும்பமாக மேற்கொண்டதாகவும் சந்திரிகா தெரிவித்தார்.

மேலும் தோல்வியைத் தழுவினால் ஓரமாக சென்று ஓய்வு எடுக்க வேண்டுமே தவிர, நாட்டை அழிக்க முயற்சிக்கக் கூடாது என சந்திரிகா மீண்டும் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். (செ-11)

## மின்சாரம் தாக்கி...

தெரியவருவதாவது, இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நேற்றுக்காலை அச்சகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது மின்சாரம் பெறுவதற்காக மின்சாரச் செருகியில் (பிளக்) பாதுகாப்பற்ற முறையில் இணைப்பினை ஏற்படுத்த முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் திடீரென மின்சாரம் தாக்கியதாக சத்தம் கேட்டு பக்கத்திலிருந்த கடைக்காரர்கள் சென்று பார்த்தபோது குறித்த நபர் சுயநினைவற்றுக் கிடந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து குறித்த நபர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி குறித்த நபர் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் உயிரிழந்துள்ளார். இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)


**தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்/பெண் வேலை ஆட்கள் தேவை. (யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதி விரும்பத்தக்கது)

T.P :- 077 202 6295

(007)

**வீடு விற்பனைக்கு**

மாநகர எல்லைக்குள் தட்டா தெரு சந்திக்கு அண்மையாக 2 1/4 பரப்பில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0776165155

(9998)


## மரண அறிவித்தல்

## சதாசிவம் பராசக்தி



வேலணை சரவணையினை பிறப்பிடமாகவும் தொண்டமான்நகர் கிளிநொச்சியினை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் பராசக்தி அவர்கள் 04.04.2015 சனிக்கிழமை நேற்று சிவ பதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-வள்ளியம்மையின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சதாசிவம் அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தசிவம், கருணானந்தசிவம், யோகானந்தசிவம் மற்றும் பரமானந்தசிவம் (லண்டன்), தருமானந்த சிவம் (வவுனியா), சீதாதேவி (பிரான்ஸ்), அருளானந்தசிவம் (வவுனியா), சதானந்தசிவம் (சாவகச்சேரி), மகானந்தசிவம் (கிளிநொச்சி), தேவானந்தசிவம் (பிரான்ஸ்), இராமானந்தசிவம் (ராமு-கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரஞ்சிதமலர் (கிளிநொச்சி), வரதலட்சுமி (வவுனியா), நித்தியா (லண்டன்) தவமணிதேவி (வவுனியா), காலஞ்சென்ற நல்லையா மற்றும் பரிமளாதேவி (வவுனியா), சறோயினி (சாவகச்சேரி), உசாமதி (கிளிநொச்சி), சுசீலா (பிரான்ஸ்), கிருபாலச்சுமி (கிருபா-கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இல.50, தொண்டமான்நகர், கிளிநொச்சி இல்லத்தில் இன்று 05.04.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். அவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்- குடும்பத்தினர்

(சி-584)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவானவேலை நிறைவான இலாபம்

ஜூஸ் பக்கெட் மெசின்




1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கும் திறன்

ரூ.2 /= Winrich
ரூ.5 /= Winrich
ரூ.10 /= Winrich

பக்கட்டுகளை தயாரிக்கலாம்

- 1 வருட உத்தரவாதம்
- இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
- விற்பனைக்கு பின் சேவையுண்டு
- இலவச விநியோகம்

தமிழில் தொடர்பு கொள்ள

**077 391 8870**

WINRICH INTERNATIONAL(PVT)LTD

No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03

WINRICH

max adz



ரலண்ட் அக்கடமி — மல்லாகம் (சந்திக்கு கிழக்குப்புறம்) — ஏழாலை மேற்கு (சைவ சன்மார்க்க வித்தியாசாலை)

பண விரயத்தினைத் தவிருங்கள். உயர்தரத்தில் இலவசமாக பின்வரும் நெறிகளை மேற்கொள்ளலாம்.

**O/L Day class** (004)

- சிங்களம்
- கணனிக் கல்வி
- English Spoken with Gammer

இம்முறை 3 பிரிவு ஆரம்பம் :- 10.04.2015

முதலில் இணையும் 100 பேருக்கு. இலவசம்

(முற் பதிவுகளை மேற்கொள்ளவும்) தொடர்பு : 0772140675



## விநியோகஸ்தர்களுக்காக பதவி வெற்றிடம் (50 பேர்)

- புனர்வாழ்வு முகாம்களில் இருந்தவர்களுக்கும் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கணவன், மனைவியை இழந்தவர்களுக்கு முன்னுரிமை.

குறிப்பு :- கல்வியறிவு அவசியமில்லை.
வயது :- 18 - 40 வரை
தங்குமிட வசதி இலவசம் தூர இடத்தில் இருந்து வருபவர்களுக்கு.

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**
**08, 6-ம் குறுக்குத் தெரு ,யாழ்ப்பாணம்.** (9992)

தொடர்பு :- 0776219536, 0774301972, 0770516480



## நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப்பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய 'றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து, தலைச் சருமத்திற்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலை கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து, முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

இன்றே நாடுங்கள்!
சிவா நறுமணப் பூங்கா
இல. 288,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பே. 021 222 2567
(C-565)

Quality Royal Akasthiya Hair Oil Guaranteed

அனைத்துப் பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured by:- Royal Industries Colombo-13



## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC (C-566)



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



## தேவை

அமில் இன்டஸ்ரீஸின் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட கிளைகளுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. சம்பளம் 15000/= + கமிஷன் + மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

0771020447 (9999)



## புதிய நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்.

**O/L Day Class** (C-572)

ஆரம்பம் : 06.04.2015 திங்கள் 8.00 மணி



# மக்கள் சேவைக்கோர் மகத்தான உதயம்!

# ரூபின்ஸ் மருத்துவமனை

- வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் -




(C-570)

FACILITIES

OPD with ETU 24 hrs | Channeling | Laboratory | Pharmacy | Dental | ECG | Ultrasound Scan

*We will be expanding other services and facilities in the near future*

Ruhbins Hospital

இல. 160, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. தொ.பேசி 021 226 1500


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்


Sankunatham


வள்ளுவர் ஆண்டு 2046 05.04.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 09




# வலுவடையும் சீன உறவு





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தர் நம்புகிறார் மைத்திரி இடறுகிறார்

## சீனாவுடனான உறவில் எந்தக் குறையும் இல்லை






ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு.

இந்த நம்பிக்கை ஜனாதிபதி மைத்திரியின் வாக்குறுதிகளால் ஏற்பட்டதல்ல. மாறாக எவரையும் நம்புகின்ற சம்பந்தரின் இயல்பால் ஏற்பட்டதாகும்.

ஜனாதிபதி மைத்திரிக்கு முன்னதாக மகிந்த ராஜபக்ஷ மீது சம்பந்தர் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார். மகிந்தவுடன் ஒத்துப் போவது தவிர்க்கமுடியாது என்று நினைத்த சம்பந்தர் அதனைப் பல இடங்களில் செயலில் காட்டினார். இருந்தும் மகிந்த இம்மியும் அசையவில்லை. ஆகக்குறைந்தது வடக்கின் ஆளுநராக இருந்த ஜீ.ஏ.சந்திரசிறியை நீக்குதல் என்பதைக்கூட மகிந்த செய்ய மறுத்தார்.

இதன்போதுதான் மகிந்த மீதான நம்பிக்கை அர்த்தமற்றது என்ற முடிவுக்கு சம்பந்தர் வந்திருந்தார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, மைத்திரிக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற சம்பந்தரின் அறிவிப்பும் அதன்வழி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி வெற்றியீட்டியதும் தன்னை ஏமாற்றிய மகிந்தருக்கு நல்ல பாடம் என்று சம்பந்தர் கருதினார்.

அதேநேரம் மைத்திரியின் ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் என்பதால் அதுவும் தமக்குச் சாதகம் என்பது சம்பந்தப் பெருமானின் கணிப்பு.

அதாவது 2012 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மேதினக் கூட்டத்தை நடத்தியிருந்தது. அத்துடன் மேதினக் கூட்டத்தில் வைத்து தேசியக் கொடியைச் சம்பந்தர் தூக்கிப்பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தவரும் ரணில் விக்கிர மசிங்க என்பதால், ரணிலுடன் ஒரு நெருக்கமான உறவு சம்பந்தருக்கு உண்டு.

ஆக, ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் என்ற ஒருவலுவான உறவு இருப்பதன் காரணமாகவும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பது சம்பந்தரின் நம்பிக்கை.

நம்பிக்கை இல்லாவிட்டால் எதுவும் சரிவராது என்ற அடிப்படையில் சம்பந்தரின் நம்பிக்கை நியாயமானது என்று கருதிக் கொள்ளலாம்.

ஆனால் அப்படியானதொரு கருத்தியலுக்கு அமைவாக ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோர் செயற்படுகின்றனரா? என்பது குறித்து ஆராய்வது இங்கு அவசியம்.

இந்த அடிப்படையில் நோக்கினால், ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் தமிழ் அரசியல் தரப்பின் உதவியோடு இலங்கையைக் காப்பாற்றுதல் என்ற முயற்சியில் கடுமையாக ஈடுபட்டிருப்பதுடன்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீட்டிய திட்டங்கள்- அவர் கொண்டிருந்த சர்வதேச நாடுகளுடனான உறவுகள் என்பவற்றை இம்மியும் பிசகாமல் பாதுகாத்தல் என்ற நிலைப்பாட்டிலும் உறுதியாக இருப்பது தெரிகிறது.

### சீனாவுடனான உறவு வலுக்கிறது

இந்தியாவில் மன்மோகன்சிங் பிரதமராக இருந்த போது மகிந்த ராஜபக்ஷ சீனாவுடன் மிக நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருந்தார். சீனாவுடனான இலங்கையின் உறவில் இந்தியாவுக்கு உடன்பாடில்லையாயினும் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் ஐ.நா. விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்த போது அதனை இந்தியா விரும்பவில்லை.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த கொடும் யுத்தம், அதில் இடம்பெற்ற பேரழிவு தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெற்றால், அது இந்தியாவுக்கும் ஆபத்தாகும். ஏனெனில் வன்னிப்போரின் போது சோனியா காந்தியின் மத்திய அரசு இலங்கை அரசுக்கு பேருதவி புரிந்தது.

இந்நிலையில் சர்வதேச விசாரணை என்பது நடைபெற்றால் வன்னியில் நடந்த மனிதப் படுகொலைக்கு - தமிழின அழிப்புக்கு இந்திய மத்திய அரசும் காரணம் என்ற உண்மை வெளிவந்து விடும் என்ற அச்சம் காரணமாக இலங்கை அரசுடன் முரண்படுவதைத் தவிர்த்தல் என்ற முடிபை மன்மோகன் அரசு எடுத்திருந்தது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு சீனாவுடனான உறவைப் பலமாகக் கட்டியெழுப்புவதற்கு மகிந்தவுக்கு உதவிற்று எனலாம்.

இந்நிலையில்தான் இந்தியாவிலும் இலங்கையிலும் சம காலத்தில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றது.

ஆட்சி மாற்றம் காரணமாக இலங்கை - இந்திய உறவு வலுவடைவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஜனாதிபதி மைத்திரி இந்தியாவுக்கு விஜயம் செய்ததும்; இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வருகை தந்ததும் இலங்கை- இந்திய உறவில் நடந்த நேர்க்கணியத் திருப்புமுனை எனலாம்.

இலங்கை- இந்திய உறவு பலமாக இருக்கவேண்டும் என்பதில் இருநாட்டிற்கும் ஏக விருப்பம் இருந்தாலும் சீனாவுடனான இலங்கை உறவு கந்தறுந்து போக வேண்டும் என்ற விருப்பம் இந்தியாவிடம் மேலதிகமாக இருந்தது என்பதை ஏற்றுத் தானாக வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் அடிப்படை சீனாவுடனான இலங்கையின் உறவைக் கட்டுப்படுத்துவது என்ற கருத்துக்களும் வெளிவந்தமை உண்டு.

இந்தியாவைப் பொறுத்தவரை தனக்கு எதிரியாக இருக்கக்கூடிய சீனாவுடன் இலங்கை உறவு கொள்ளக் கூடாது என்பதாக இருந்தாலும் இலங்கை-சீன உறவை முழுமையாக வேரறுப்பது முடியாத காரியம் என்பதும் இந்தியாவுக்குத் தெரியாமல் இல்லை.

ஆக, இந்திய இறைமைக்கு எந்தப் பாத கத்தையும் ஏற்படுத்தாமல் இலங்கை-சீன உறவு இருப்பதில் தனக்கு ஆட்சேபம் இல்லை என்ற நிலைப்பாட்டையே பிரதமர் நரேந்திரமோடி கொண்டிருந்தார்.

பிரதமர் மோடியின் இந்த நல்லெண்ணத்தை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட ஜனாதிபதி மைத்திரி பிரதமர் மோடியின் இலங்கை விஜயத்தை அடுத்து சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டார்.

சீனப்பயணம் இலங்கைக்கு வெற்றியைக் கொடுத்தது. போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை இலங்கை முறியடிப்பதற்கு சீனா உதவும் என்ற அடிப்படையில் சீனாவுடனான உறவைக் கைவிட ஜனாதிபதி மைத்திரி தயாரில்லை என்பதே இதன் பொருள்.

ஜனாதிபதி மைத்திரிமீது இரா.சம்பந்தர் அதீத நம்பிக்கை கொண்டிருக்க; மைத்திரியோ சீனாவுடனான உறவைப் பலப்படுத்தி சர்வதேச விசாரணையை தோற்கடிக்கும் முயற்சியை கனகச்சிதமாக மேற்கொண்டு வருகிறார்.

சீனாவுடனான பயணத்தை முடித்துக்கொண்ட ஜனாதிபதி மைத்திரியின் அடுத்த வெளிக்கிடுகை பாகிஸ்தானுக்கானது. ஆக, இந்தியா, சீனா, பாகிஸ்தான் என்ற நாடுகளுடனான உறவைப் பேணுவதில் மகிந்தவைவிட மைத்திரி ஒருபடி மேல் என்று சொல்லுமளவிலேயே நிலைமையுள்ளது.

இவை ஒருபுறம் நடந்து கொண்டிருக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைக்கும் உள்நோக்கத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளும ன்ற உறுப்பினர்கள் வேறு, வடக்கு மாகாண அரசு வேறுஎன்றதொரு சூழமைவை தோற்றுவித்து வடக்கு மாகாண அரசுடன் தான் தொடர்பு கொள்ள மாட்டேன் என உறுதிபடத் தெரிவித்து வருகிறார்.

ரணிலின் வியூகத்திற்கு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் உடந்தை என்பது மறுக்க முடியாத உண்மையே.

இங்குதான் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் யாரை நம்பியிருக்கிறாரோ அவர்கள் இருவரும் சர்வதேச விசாரணையைத் தோற்கடித்தல்; முன்னாள் ஜனாதிபதி மகிந்தவைக் காப்பாற்றுதல்; தமிழர்களின் அரசியல் தலைமையை உடைத்தல் என்ற பணியை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றனர் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வழமை போல் ஆலடி மாநாட்டிற்கு எல்லோரும் வந்திருந்தனர். வாத்தியார் வைத்திலிங்கம் நாட்டு நடப்புகள் தொடர்பில் மாநாட்டிற்குத் தகவல் தெரிவிக்கும் பணியைச் செய்து வந்தார். அவரின் தகவல்களில் இருந்துதான் மாநாடு ஆரம்பிக்கும். அந்த ஒழுங்கு முறையில் வாத்தியார் தனது பணியை ஆரம்பித்தார்.

**வாத்தியார்:** இலங்கையின்ர அரசியலில ஒரு சுமுகமான போக்கு ஏற்படுவதைக் காணமுடியல்ல. பிரதமர் ரணிலும் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனும் முரண்படுவது அவ்வளவு நல்லதல்ல.

**கங்காணி:** ரணிலும் விக்கியும் முரண்பட்டால் அதை முடிவுக்குக் கொண்டு வாற கடமை ஜனாதிபதி மைத்திரிக்கல்லோ உண்டு. ஆனால் அதை அவர் செய்யவில்லை.

**மூப்பர்:** அந்தாள் என்ன செய்யமுடியும். தன்ர சொந்தத் தம்பியை இழந்து போய்ச்சுது. அந்தச் சோகம் ஒருபுறம்.

**விதானையார்:** அதிகாரம் உள்ள பதவியில் இருந்து கொண்டு அதிகாரம் எதுவுமில்லாத மாதிரி இருப்பதும் இப்படியான ஆபத்தைக் கொண்டு வரும்.

முந்தியிருந்த ஜனாதிபதியின்ர சகோதரர் எவருக்கும் யாரும் கைவைக்கமுடியுமோ!

**கங்காணி:** சகோதரர் என்ன? மகிந்தவின்ர தூரத்துச் சொந்தக்காரனோட கூட முரண்பட முடியாது. ஆனால் ஜனாதிபதி மைத்திரியின்ர சொந்தச் சகோதரனையே ஒருத்தன் அடித்துச் சாக்காட்டிப் போட்டான் என்டால் நிலைமை எப்படியிருக்குது.

**மூப்பர்:** இப்படியொரு சம்பவம் மகிந்தவின்ர குடும்பத்தில நடந்திருந்தால், செய்தவன்ர குடும்பம் குலையோட பிடுங்கப் பட்டிருக்கும். அப்படியொரு பயம் இருக்கவேணும் பாருங்கோ.

**பண்டிதர்:** மூப்பர், ஜனாதிபதி மைத்திரி ஒரு நல்ல மனுசர், என்ன செய்வது விதியும் விளையாடுதல்லோ! ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரி இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது, திருப்பதியானிட்டையும் போனவர். திருப்பதியில இருக்கிற மூலவரைத் தரிசிக்க அந்த ஆலய நிர்வாகம் ஏற்பாடு செய்தது.

ஜனாதிபதி மைத்திரி மூலவற்ற வாசலில வழிபடுவதற்காக நிற்கிறார். ஆலய பிரதம குரு மூலஸ்தான அறையைத் திறக்கிறார்.

என்ன காலப்பிழையோ தெரியல்ல அந்தத் திறப்பு உடைஞ்சு போச்சுது. தங்கத்தால் செய்யப்பட்ட திறப்பு உடைந்து போக, ஆலய நிர்வாகம் பதறியடித்து ஒரு மாதிரியாக மூலஸ்தானக் கதவைத் திறந்து மைத்திரியர் ஏழுமலையான வழிபட



## திருப்பதியானின் திறப்பு உடைந்தது
## மைத்திரிக்கு துக்குறியாயிற்று

வழிசெய்தனர்.

அப்பவே நினைச்சனான் திருப்பதியான்ர கதவுத்திறப்பு உடைஞ்சது ஏதோ துக்குறி எண்டு. பார்த்தியளோ! மைத்திரி தம்பியை இழக்க வேண்டியதாய்ப் போச்சுது.

**விதானையார்:** அப்ப பண்டிதர் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு முன்னதாக, மகிந்த ராஜபக்ஷவும் திருப்பதிக்குப் போனவர். அப்ப ஏதாவது துக்குறி காட்டியிருக்குமோ!

**வாத்தியார்:** அதுக்கேன் துக்குறி காட்டவேணும். சாத்திரி குணதாசவே சொல்லிப் போட்டார். மகிந்த வெல்லமுடியாதபடி தான் நேரம் எடுத்துக் கொடுத்தது எண்டு. பிறகென்ன துக்குறி.

**கங்காணி:** ஏன்? வாத்தியார் திரும்பவும் மகிந்த வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறதாகச் சனம் பேசிக் கொள்ளுது. அதாலதான் மகிந்தவுக்குத் திருப்பதியில ஒரு அறிகுறியும் காட்டவில்லை என்று எடுத்துக் கொள்ளலாமோ!

**மூப்பர்:** இருக்கும்... இருக்கும் சிங்களச் சனத்தில ஒரு பகுதி மகிந்தவை மீண்டும் மன்னராக்க வேணுமெண்டெல்லோ நிற்கினம்.

**கங்காணி:** திருப்பதியில திறப்பு உடைஞ்ச சம்பவத்தைப் பண்டிதர் சொல்லத்தான் எனக்கும் ஞாபகம் வருகுது.

ஆலயங்கள் கடவுள் இருக்கிற தலங்கள். ஆகை யால் எங்கட மனங்களைக் கட்டுப்படுத்தி இறைவனை உள்ளத்தில் ஏத்த ஆலய வழிபாடு மிகவும் அவசியம் என்பதை நாங்கள்எங்கட பிள்ளையளுக்கு வலியுறுத்த வேணும்.

இப்ப என்னடா எண்டால்கோயில்கள் கட்டுப்படுகின்றன. ஆனால் வழிபடுகிறதுக்கு ஆட்கள் இல்லை.

வெளிநாட்டிற்குப் போன நம்மட உறவுகள் கோயில் கட்டுவன் என்று நேர்த்தி வைச்சிருப்பினம். அதை இப்ப நிறைவேற்றுகினம். எல்லாக் கோயில்களும் புதுப்பொலிவு. ஆனால் ஆட்கள் இல்லாக்குறை. சுவாமி காவுவதற்கு உள் வீதிக்குள் ஒரு வண்டில். வெளிவீதிக்கு வேறொரு ஏற்பாடு. சுவாமி சுற்றி வரும்போது நாதஸ்வரக்காரரும் இல்லையென்றால் அந்தோ கதிதான்.

**பண்டிதர்:** கோயிலில ஆட்கள் இல்லாக்குறையை போக்குவதில தங்கட பங்களிப்பும் இருக்குது என்பதாலதானோ! நாதஸ்வரக்காரர் கோயிலில மங்கல வாத்தியம் இசைக்க ஏகப்பட்ட காசு கேட்கினம்.

**விதானையார்:** மங்கல வாத்தியத்திற்கு ஏகப்பட்ட காசை பணக்காரக் கோயில்கள் கொடுக்கிறத்தாலதான் சாதாரண கோயில்கள் மிகப் பெரிய கஷ்டத்தை அனுபவிக்கின்றன. சில கோயில்கள் மின்சாரத்தில இயங்குகிற மேளத்த ஆலயத்தூணில பொருத்தி அந்தந்த நேரத்தில ஒரு சத்தத்த போடுவிப்பினம். எங்கட கலை பண்பாடு எப்படி எல்லாம் மாறிப் போச்சு.

**வாத்தியார்:** அதுசரி கங்காணியார் ஆலயங்களைப் புனரமைக்கிற போது ஆலயத்தின்ர புனிதம் இம்மியும் குறையாமல் பாதுகாத்துக் கொள்ள வேணும்.

வேலணையில உள்ள ஒரு பிரபல்யமான கோயிலில் புனரமைப்புப் போல நடக்குதாம். அங்க கட்டுமானப் பணியில ஈடுபட்டிருக்கிறவர்கள், ஆலய உள் வீதியில் செருப்போடு நடமாடுகினம் எண்டு கேள்வி.

**பண்டிதர்:** என்ர முத்துமாரித்தாயே! இதென்ன நாசமறுந்த கதை. ஆலய உள் வீதியில செருப்போட நடமாடுகினமோ! அபத்தம், அபத்தம்.

**வாத்தியார்:** ஆலய கட்டுமானப் பணியில ஈடுபடுகிறவியள் மட்டுமல்ல, அந்த ஆலயத்தின்ர அறங்காவலர் சபையில இருக்கிற முக்கியமானவர்களும் செருப்போட தான் உள்வீதிக்குள்ள போகினமாம்.

**விதானையார்:** ஏன் வாத்தியார்? திருக்காளத்தியில இருந்த கண்ணப்பர் தன்ர காலை சிவனின் முகத்தில வைத்தவரெல்லோ!

**கங்காணி:** எப்ப பார்த்தாலும் விதானையாருக்கு இந்தக் குறுக்கு மூளை வேலை செய்து போடும்.

(விதானையாரின் கேள்வி வாத்தியாருக்குக் கடுங் கோபத்தைக் கொடுத்தது)

**வாத்தியார்:** இஞ்சபாரும் விதானையார் கண்ணப்பர் தன்ர கண்களைக் கொடுத்தார். இவையள் அப்படிச் செய்வினமோ!

கண்ணப்பன்ர அளவு கடந்த அன்போட வேறு யாரையும் நாங்கள் ஒப்பிடக் கூடாது.

**பண்டிதர்:** எதுவா இருந்தாலும் ஆலயத்தின்ர புனிதத்தைப் பேணவேணும். புனரமைப்பு என்பதால ஆலய உள்வீதியில செருப்போட நடக்கலாமெண்டு எவரும் நினைக்கக்கூடாது. அது மட்டுமல்ல ஆலயத்தின்ர தர்மகர்த்தா சபையில இருக்கிறவையள் முன்மாதிரியாக நடந்து காட்ட வேணும். அப்பதான் மற்றவர்களும் அதைப் பின்பற்றுவினம்.


**விதானையார்:** பண்டிதர் சொல்லுறதில நூறு வீதம் உண்மை இருக்கு. எனக்கும் நீண்ட காலம் ஒரு குறை தெரியுது. ஆலய மூலஸ்தானத்தில பஞ்சாலாத்தி தீபம் காட்டுகிறபோது அந்தத் தீபத்தை ஏற்றிக் கொடுத்த அர்ச்சகர் மூலஸ்தானத்த மறைத்தபடி வெளிய வருவார். இதால மூலஸ்தானத்தில காட்டுகிற பஞ்சாலாத்தி தீபாராதனையை கண்ணாரக் கண்டு வழிபட முடியாமல் இருக்கு. பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் இந்தக் குறைபாடு இருக்கவே செய்யுது.

ஒரு சில நிமிடங்கள் அர்ச்சகர் மூலஸ்தானத்தின் ஓரத்தில் நின்று கொண்டால் எல்லாரும் அந்தத் தீபாராதனையை பார்த்து வழிபடலாமல்லோ.

(இப்படி விதானையார் கூற, அதற்குக் கட்டியம் கூறுவது போல பிள்ளையார் கோயில் மணியும் ஒலித்தது. மாநாட்டில் இருந்தவர்கள் பிள்ளையாரை தரிசிக்க எழுந்து சென்றனர்)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்



# வெற்றியின் இரகசியம்

பழனி ஒரு பழ வியாபாரி. இவன் சிறு வயதிலிருந்தே பழ வியாபாரத்தை விரும்பி செய்து வந்தான்.

தன் சொந்த ஊரான பழமுதிர் சோலை என்னும் பெயருடைய கிராமத்திலிருந்து அயற் கிராமத்திலிருந்தும் பல வகையான பழங்களை வாங்கி வெளியூர்களுக்கு அனுப்பி வியாபாரத்தை நன்கு நடத்தி வந்தான்.

நாட்கள் சில நகர வியாபாரத்தை மேலும் விருத்தி செய்வதற்காக சில வாகனங்களையும் வாங்கிக் கொண்டான். பல வேலையாட்களையும் வேலைக்கு அமர்த்தினான்.

பெட்டிபெட்டியாக பழங்களை வாகனங்களில் ஏற்றி வெளியூரிலுள்ள கடைகளுக்கு அனுப்புவான். மாதத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை சென்று பணத்தை அறவீடு செய்வான். கொடுக்கல் வாங்கல் கணக்குகளையும் சரியாகவே எழுத்துமூலம் உறுதிப்படுத்தி வைத்திருந்தான்.

இடையிடையே இலாப நட்டக் கணக்குகளையும் பார்த்துக் கொள்வான். பல மாதங்களில் அதிக இலாபமும் சில மாதங்களில் சொற்ப நட்டமும் வரவே செய்தன. ஆனால் ஒரு வருடக் கணக்கை கூட்டிக் கழித்துப் பார்த்தால் இலாபம்தான் தேறியது. வியாபாரம்என்றால்இப்படித் தான் என நினைத்த பழனி தொடர்ந்தும் வியாபாரத்தை விருத்தி செய்து அவ்வூரில் ஒரு ஆடம்பரமான பணக்காரனாகத் திகழ்ந்தான்.

பழனியின் முன்னேற்றத்தைக் கண்ட சிலர் தாங்களும் பணக்காரனாக வர ஆசைப்பட்டு பழ வியாபாரத்தைத் தொடங்கினார்கள். இவர்களுள் சுதாகர் என்பவன் இலட்சக் கணக்கில் முதலீடு செய்து பழங்களை வாங்கி வெளியூர்களுக்கு அனுப்பினான். வாகனங்கள் அதற்குரிய கூலியாட்கள் என பெரிய எடுப்பில் வியாபாரம் நடந்தன.

ஒவ்வொரு வாகனத்திலும் பழங்களை அனுப்பிவிட்டு பலத்த யோசனையிலிருப்பான். இப்ப போற வாகனங்களில் ஒன்று எங்காவது பழுதடைந்தால் அல்லது விபத்துக்குள்ளானால் அதிலுள்ள கனிந்த பழங்களெல்லாம் பழுதடைந்து போகும். பழுதடைந்தால் எத்தனை ஆயிரம் நட்டம் வரும்? நட்டம் வந்தால் எப்படி மீட்சியடைவது? என்றெல்லாம் எண்ணிக்கொண்டே நடந்து திரிவான். இரவிலே புறப்படும் வாகனங்களுக்கு என்னென்ன நடக்குமோ? என்று எண்ணி தூக்கமின்றியே படுத்திருப்பான்.

வாகனங்கள் வியாபாரத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்த பின்புதான் ஓரளவு திருப்தியடைவான்.

இப்படியே ஒரு வருடம் முடிந்த பின் இலாப நட்டக் கணக்குகளைப் பார்த்தான். பல மாதங்களில் குறைந்தளவு இலாபமும் சில மாதங்களில் அதிகளவு நட்டமுமே தேறியது. இதைத்தான் கற்றுக்கொண்ட பாடமாகக் கொண்டு நட்டம் வந்த மாதங்களில் பழ வியாபாரத்தை நிறுத்தினான். இச்செயற்பாடு வாடிக்கையாளரைக் குறைத்தது. இதன் விளைவு மேலும் நட்டத்திற்கு வழி வகுத்தது.

இதனால் மனம் வருந்திய சுதாகர் பிரபல பழ வியாபாரியான பழனியிடம் போய் நடந்தவற்றையெல்லாம் ஒன்றும் விடாமற் சொல்லி, தான் இப்பழ வியாபாரத்தில் ஏற்பட்ட நட்டத்திலிருந்து மீட்சியடைய ஆலோசனை கூறுமாறு கெஞ்சினான்.

இதைக் கேட்டதும் நல்ல மனம் படைத்த பழனி, பழ வியாபாரத்தில் கையாள வேண்டிய பல விதிமுறைகளை ஒவ்வொன்றாக விளக்கிவிட்டு இறுதியில் வியாபாரம் மட்டுமல்ல மனித வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் தன்னம்பிக்கையுடன் கூடிய விடா முயற்சியே வெற்றிக்கு வழி வகுக்கும்என்று சொன்னான்.

இதைக் கேட்ட சுதாகருக்கு அது முற்றிலும் சரியாகவே தெரிந்ததுடன் தன் தவறுகளையும் உணர்ந்து கொண்டான்.



## ஏழையின் தாலாட்டு

முத்துச் சிரிப்பழகா!
முல்லைப்பூ பல்லழகா!

வெத்து குடிசையிலே
விளையாட வந்தாயோ?

ஏழைக் குடிசையிலே
ஈரத் தரைமேலே

தாழம்பாய் போட்டுத்
தவழ்ந்தாட வந்தாயோ

தரையெல்லாம் மேடுபள்ள
தவழ்ந்தால் உறுத்தாதோ?

## பொது அறிவுகள்

1.கையில் வைத்தாலே உருகும் உலோகம் எது? சீலியம்

2.நாணயம் தயாரிக்க உதவும் உலோகம் எது? நிக்கல்

3.புத்தரின் பிச்சைப் பாத்திரம் எந்த நாட்டில் உள்ளது? ஆப்கானிஸ்தான்

4.உல்கில் கஸ்தூரி மான் அதிகம் காணப்படும் பகுதி எது? இமயமலை

5.உலகின் மிகப் பெரிய அணை எது?
அமெரிக்காவில் உள்ள கிராண்ட் கௌல் அணை.

6.நம் இதயம் ஒரு நாளைக்கு எத்தனை தடவை துடிக்கிறது? 1.03.689


7. உலகின் மிக நீண்ட மலைத் தொடர் எது?
மிட் அட்லாண்டிக்

8.உலகின் முதல் புகைப்படத்தை உருவாக்கியவர் யார்? ஜோசப் நைஸ் போர் நீப்ஸே

9.எய்ட்ஸ் வைரசை முதன் முதலில் கண்டறிந்த நாடு எது? அமெரிக்கா

10. எவரெஸ்ட் சிகரத்திற்கு 'எவரெஸ்ட்' என்று பெயர் சூட்டியவர் யார்? எத்தனை ஆம் ஆண்டு?
பெயர் சூட்டியவர்:- ஜார்ஜ் எவரெஸ்ட்
பெயர் சூட்டப்பட்ட ஆண்டு:- 1865 ஆம் ஆண்டு

த.றஜீபன், தரம்–10 B



ரா.அபிநயன், தரம் -6 யா.புனித பத்திரிசியார் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



## சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ க்வான் யூ அவர்களின் மறைவு குறித்து?

**மயூரன் அல்வாய்**

**பேரானந்தம் என்பது எதுங்க?**

திருமணம் ஆகவில்லையே என்ற வருத்தத்தில் இருப்பவர்களுக்கும் திருமணம் ஆகிவிட்டதே என்ற வருத்தத்தில் இருப்பவர்களுக்கும் இடையில் திருமணம் ஆகப் போகிறது எனும் நினைவில் இருக்கிறார்களே அவர்களிடம் கேட்டால் புரியும். பேரானந்தத்தைப் பற்றி.

**அரவிந் கல்வியங்காடு**

**சமீபகாலமாக ஒரே விமான விபத்து நடக்கிறதே என்ன செய்யலாம்?**

ஐந்தாமாண்டு படிக்கும் சிறுவன் ஒருவன் தனது தந்தையிடம் ஓடிப்போய் கேட்கிறான். அப்பா அப்பா விமானம் எவ்வளவு பலமா வெடித்தாலும் கறுப்புப் பெட்டிக்கு ஒன்றும் ஆகாதாமே? அப்படியென்றால் கறுப்புப் பெட்டியிலேயே விமானத்தைச் செய்தால் என்ன? என தகப்பன் வாயடைத்துப்போய் நின்றார் சொல்வதறியாது.

**வே.வே. அகிலேஸ்வரன் மருதங்கேணி.**

**வீடு அழகாக இருக்க என்ன செய்ய வேண்டும்?**

பிள்ளைகள் எல்லோரையும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு வருடா வருடம் வீட்டிற்கு வர்ணம் பூசும் வேலையைப் பார்க்கும் பெற்றோரிடம் கேட்டுப்பாருங்கள் மயான அனுபவத்தைப் கூறுவார்கள். அழகு வர்ணத்திலும் பூச்செடி நடுவதிலும் இல்லை. எல்லோரும் ஒன்றாய் அன்பாய் வாழ்வதில் தான் இருக்கிறது.

**பிரியங்கா மீசாலை.**

**குற்றம் செய்தவர்கள் பலர் வெளியில் இருக்கிறார்களே?**

கௌரவம் படத்தில் ஒருவன் தன் மனைவியைக் கொன்று விட்டு அந்த வழக்கில் இருந்து நிரபராதி என்று தப்பித்து விடுகிறான். மறுபடி அவன் செய்யாத கொலைக்காக சிறைக்குச் செல்கிறான். இங்கேயும் அதே நிலை இருக்கிறது. பலர் செய்த குற்றத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த செய்யாத குற்றங்கள் அவர்களை மரணக்குழிக்கு கொண்டு செல்லும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன. எல்லாம் அவன் செயல்.

**கே.ஆர்த்திகன் கரணவாய்.**

**இலங்கைக்கு மோடி வந்ததன் நோக்கம் என்ன?**

இலங்கை என்ற சிறிய நாட்டை இன்று பலரும் அறிந்திருக்கக் காரணம் அது தமிழர் உரிமைசார் பிரச்சினை தான். இது இப்படி இருக்கையில் இந்தியப் பிரதமர் அவர்கள் இலங்கைக்கான விஜயத்தில் தமிழர் உரிமைப் பிரச்சினை தொடர்பில் இறுக்கமான முடிபுகள் எதனையும் இலங்கை அரசுக்கு தெரிவிக்கவில்லை. "சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்..." என்று தமிழில் பாடியதனூடே எம் சிற்றறிவுக்கு புரிவதென்னவன்றால் சீனாவிடம் இருந்து இந்தியாவைக் பாதுகாப்போம் என்பதே ஆகும்.

## சமீபகாலமாக ஒரே விமான விபத்து நடக்கிறதே என்ன செய்யலாம்?

**ஜி.கோபி மந்திகை**

**ஒரு நல்ல அம்மாவைப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஒரு குன்றுமணியை விழுங்கிவிட்டு நீபடும் பாடு. ஆனால் பத்துமாதம் தன் வயிற்றில் அற்புதமாய் உன்னை தாங்கியவள். தன் இருப்பு முதல் செருப்பு வரை உனக்காய் மாற்றியவள். நீ வயிற்றில் உதைப்பாய் அந்த வலியைவிட நீ வயிற்றில் உதைக்கிறாய் என்ற சந்தோசத்தை பிறருடன் பகிர்ந்து மகிழ்பவள். தாய் என்பதற்கு இந்த உலகில் உவமை இல்லை.

**குருபரந்தாமன் அல்வாய்.**

**கல்வியா செல்வமா வீரமா இன்றைய காலத்தில் முக்கியமானது?**

இந்தக் கேள்வியை மூவரிடம் கேட்டால். மூன்றாய் பதில் கிடைக்கும்.

ஆசிரியர்- கல்வி
காவலாளி- வீரம்
அரசியல்வாதி-செல்வம்




**நந்த் நெல்லியடி.**

**திருமணம் ஆன பின்பும் கவர்ச்சி காட்டும் பெண்கள் பற்றி?**

அப்படி என்றால் திருமணத்திற்கு முன்பு கவர்ச்சி காட்டலாமா? நீர் கவர்ச்சி என்று கூறியது எதை? அது எப்படி இருக்கும்?

**எஸ்.ஆர்.கரன் சுழிபுரம்.**

**Thamil என்பதை Tamil என்று பலர் கூறுவது ஏன்?**

Thamil என கூறும் போது தமிழர் பெரும்பான்மையாக இருந்தனர். இப்போது தமிழர் சிறுபான்மையினர். அதனால் Tamil என குறுக்கி விட்டார்கள் போலும்.

**கௌரிசன் அல்வாய்.**

**பெண்கள் சின்ன விடயத்திற்கு எல்லாம் சந்தேகப்படுகிறார்களே?**

ஒரு சின்ன விடயத்தைக் கூட சந்தேகப்படும் படி ஆண்கள் செய்கிறார்களே. இதற்கு என்ன செய்ய?

## இலங்கைக்கு மோடி வந்ததன் நோக்கம் என்ன?

**கவி மீசாலை**

**இது தேவையில்லையே என்று எதையாவது நினைத்ததுண்டா?**

எல்லா சலூன் கடைகளிலும் சேவ் எடுக்கப் பயன்படுத்தும் பிளேட்டை இரண்டாக உடைத்தே பயன்படுத்துகிறார்கள். அப்படியென்றால் பிளேட்டை தயாரிக்கும் போதே பாதியாக தயாரிக்கலாமே?

**கிருஷ்ணா யாழ்ப்பாணம்.**

**எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் மனம் அலைபாயுதே என்ன பண்ண?**

ஓ... அப்படியா! அப்படி என்றால் உனக்கு ஆபிரிக்கா தான் சரி என்று எனக்குப்படுகிறது.

**குமரன் அச்சுவேலி.**

**விராட் கோலி ஒரு ரன்னுடன் ஆட்டமிழந்ததற்கு அவர் காதலி அனுஷ்கா சர்மா காரணமா?**

அனுஸ்கா சர்மா அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் என்றால் இது ஓரளவு சாத்தியப்படும். அனுஷ்கா சர்மா மைதானத்தில் இருக்கும் போது விராட் கோலி சதம் அடித்தால் பிளேன் முத்தம் அனுப்பும் ப(வ)ழக்கத்தைக் கொண்டிருந்தார் கோலி. காதலனிடம் முத்தம் வாங்கப் பிடிக்காத காதலி எங்கும் உண்டோ?

**பிராணா பருத்தித்துறை.**

**பெண்ணைப் பெண் காதலிப்பது தப்பா?**

ஆண் நாயும் ஆண் நாயும் காதலித்துப் பார்த்திருக்கிறீர்களா?

இல்லை ஆண் ஆடும் ஆண் ஆடும் ஒன்று சேர்ந்து தான் பார்த்திருக்கிறீர்களா? எதிர்ப்பால் ஈர்ப்பைத் தானே இறைவன் படைத்திருக்கிறான். அப்படி எனில் இறைவன் படைப்பே தவறாகி விடுமே.

**ராஜேஸ் அரியாலை**

**சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீ க்வான் யூ அவர்களின் மறைவு குறித்து?**

ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றதும் இன்னும் பத்து வருடங்களில் இலங்கையைப் போல சிங்கப்பூரையும் மாற்றுவேன் என சபதம் இட்டு சிங்கப்பூரை உச்சத்துக்கு கொண்டு சென்றார். 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது இலங்கை தற்போது ஒரு மகிழ்வான நாடல்ல. சிங்களவர் இருந்த காலம் முதல் தமிழரும் இலங்கையில் வாழ்கின்றனர். எனவே அவர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என எமக்காய் குரல் கொடுத்த உத்தமர்.

**ஜெபநேசன் அல்வாய்**

**பெண்கள் காதலிக்கத் தகுதியானவர்களா?**

ஜந்துக்கள் முதல் ஐந்தறிவு ஜீவன்கள், ஆறறிவு படைத்த மனிதன் வரை பெண் பின்னால் ஆண் அலைவதே நியதி. ஆண் காதலிக்கத் தகுதியுடையவனா? என்று கேட்பது தானே முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## செவ்வாய்க்கிழமை

'அம்மா...'
பசியோடு ஒரு பரிதாபக்குரல்
'என்ன...'
எட்டிப்பார்த்து
இரக்கமாய்க் கேட்டாள்
இந்த வீட்டம்மா
உள்ளே ஓடினாள்
உள்ளம் கரைந்தாள்
தட்டு நிறைய சாதம் இட்டாள்
விறாந்தை இருந்த
கலண்டர் காட்டியது
இன்றையநாள்
செவ்வாய் என்று
இல்லம் வரும் எவர்க்கும்
செவ்வாய் என்றால்
தண்ணீரும் கொடுக்காத
கண்ணிய பரம்பரை இது
சாதத்தை சமையலறையில் வைத்தாள்
செவ்வாயில் எதுவும் குடுத்தா
சிறக்காது வீடு
நாளைக்கு வாங்க
தாராளமாய்த் தாறன்
அம்மா சொன்னாள்
அழுதபடி நடந்தான்
அந்தப் பிச்சைக்காரன்

**யோ.புரட்சி**
**வள்ளுவர்புரம்**

## தாய்மை

கண்களால் பார்க்காத
கருவறையில் துயில் கொண்டு
எண்களால் நாள் எண்ணி
முடிந்தநாள் வரும்போது
புண்ணிய பூமி தன்னில்
புது ஜனனம் கண்ட பின்னர்
ஆண் என்றும் பெண் என்றும்
பேதங்கள் சொல்லி நிதம்
விண்ணுயர மகிழ்வு கொண்டு
நெஞ்சோடு அணைத்த போது
எண்ணிலா மகிழ்ச்சி பொங்க
என்மகனே என்றணைத்தாள்
மண்ணினில் வந்தபோது
தந்திட்ட மகிழ்ச்சியெல்லாம்
பண்ணிய விரதமாகி
பயன்தர வந்ததென்றாள்
மண்ணினில் வாழும் மாந்தர்
வசைபாடும் மலடி நாமம்
இல்லாது தந்துவிட்ட
சித்திரப் பூங்கொடியே தேனே
சீர்பெற்று வாழ நீயும்
சிந்தை தனில் தாய்மை பெற்று
சிறப்புடனே வாழ்க வாழ்க

**குலனையூர் பாவரன்**
**வவுனியா**

## உரிமைகளை இழக்காதே

உன் உரிமைகளை இழக்காதே!
உன் உறவுகள் கூட உன்னைமதிக்காது
பாரினில் உயர மற்றவர் பார்த்து உன்னை மதிக்க
உன் உரிமைகளை இழக்காதே!
நீ ஊனமுற்றுப்போனாலும்
உன் உரிமைகளை இழக்காதே!
ஊர் உலகம் போற்ற உத்தமமாய் வாழ
உன் உரிமைகளை இழக்காதே!
யானைக்குத் தும்பிக்கை பலம்
உனக்கு உன் உரிமைதான் பலம்
பிறருக்கு அடிமையாக இருக்காதே!
ஆத்திரம் கொண்டும் எழும்பாதே!
உன் உரிமையைப் பெற்றுக்கொண்டால்
இந்த சூத்திரங்கள் உனக்கேது
நீ பாத்திரம் கொண்டு பிச்சையெடுத்தாலும்
உன் உரிமைகளை இழக்காதே
உரிமையை உயிராய் நினை
உத்தமமாய் வாழ்வில் உயர்ந்துவிடு

**அ.அச்சுதன்**
**கோண்டாவில்**

## இமயம் தொட

அழிவுகளை எண்ணி
வருந்தாதே
ஆக்கம் ஒன்று உண்டெனில்
அழிவு நிச்சயம்
பள்ளத்தை நோக்கி
வெள்ளம் பாய்வது போல்தான்
வாழ்க்கையும்
ஓடிக்கொண்டேயிருக்கும்
அந்த ஓட்டத்தில் நீ ஓடு
ஆனால்
பள்ளத்தை நோக்கியல்ல
வெள்ளத்தை எதிர்த்து...

மாவை. நா.கஜேந்திரன்

## காதல் அல்ல

இனந்தெரியாத இதம்
தருகிறது உன்உறவு
அன்பான உன் பேச்சு
தினமுமான நலவிசாரிப்பு
கனிவான வழிகாட்டல்,
எல்லாம் பிடிச்சிருக்கு
உதவிகள் செய்யக்காத்திருக்கும்
தாராள குணம்
என் விடயங்களில் எல்லையுடன்
உரிமையிடும் மனம்
ரொம்பப் பிடிச்சிருக்கு
இடையில் கிடைத்த
இமயமான உன் உறவு
இறுதிவரை மாறாது, மாறவும் கூடாது
நிச்சயம் இது காதல் அல்ல

**த.தனுஜா**
**அல்வாய்**



## நீ

சத்தியத்தின் சோதனையோ
யுத்தத்தின் வேதனையோ
உணவின்றி உடல் மெலிந்தாய்
உடல் உறுப்புக்கள்
ஒவ்வொன்றும் இழந்தாய்
உறவுகளில்லை உடைமைகளில்லை
ஒருகரத்தில் கனம் சுமந்த– உன்
மனபலத்தால்
நாளை நீ சாதனை
படைத்திடுவாயே!

*ச.அகல்யா*
*சண்டிலிப்பாய்*

## நிர்ப்பந்திக்கப்பட்ட சுமை

உரிமைச் சமர் சக்கரத்தில்
சிக்கி மடிந்த
குடும்பத் தலைவர்களின்
சுமை சுமக்க
நிர்ப்பந்திக்கப்பட்ட
வாரிசுகளின்
நிர்க்கதியான கல்வி
நிவர்த்தியாக்க
யாருளர்?

*அராலியூர்*
*சோ.சிவகுமாரன்*

## விடிவொன்று கிட்டாதா?

ஒட்டி உலர்ந்து
வாடிப்போய்க்கிடக்கும்
இச்சிறுவன் தோள்மீது
வெட்டிய மரத்துண்டுகளைக்
கட்டாகச் சுமக்கவைக்கும்
சீர்கெட்ட சமுதாயம்
எப்பதான் திருந்தப்போகிறது?
விடிவொன்று கிட்டும் நிச்சயம்
ஏழைச்சிறுவர் நிமிர்வதற்கு

*துரை*
*தென்மட்டுவில்*

# மௌனத்தின் தேடல்– 244

## ஏனிந்தக் கோலம்

பட்டினியால் விளைந்த
கோலமா! அன்றி
பாழும் நோய் காட்டிவிட்ட
ஜாலமா!
எட்டிப் பார்க்கிறதே
எல்லைமீறி
என்பெல்லாம்
எழுந்திருக்க முடியாமல்
உன்னை மீறி சுமை தூக்கி
மழுங்கி உடல் மடிந்து
மாள்வதற்கா? ஏனிந்தக்கோலம்!

*பொ.புனிதன்*
*வரியப்புலம்*

## சுமைகள்

சுமைதாங்க முடியாததால்
கைபேசி கையிலிருந்தும்
தகவலை அனுப்பி வைக்க
இளவலால் முடியவில்லை
சுமைதாங்கி கட்டியன்று
வாழ்வைச் சுலபமாக்கினார்
இவற்றிலீடுபடுவதற்கு
இக்காலத்தவருக்கு
நேரமில்லை
வசதி வாய்ப்புக்களுடன்
வழிகாட்டுதலும் கிடைத்திடின்
வருங்காலத்தில் புகழ்பூத்த
புறாசிலி போல் ஆகியிருப்பாய்

*க.நாகராசா*
*நுணாவில்*

## சுமை

புத்தக சுமைதாங்கி
பள்ளி செல்லும் பருவமதில்
விறகு சுமைதாங்கி உழைப்பது ஏன்?
யுத்தத்தின் தாக்கமா
பசியின் கொடுமையா
புரியவில்லை மகனே...!

*ந.பிரிந்தா*
*யா/ மகாஜனக் கல்லூரி*

## பார்ப்பார்களா?

தமிழினத்தின் தலைவிதியை
சர்வதேசமே பார்க்கவில்லை
உன் பாரச்சுமையை இனி
யார்தான் பார்ப்பார்கள்?

*அ.அன்பரசன்*
*யா/ வரணி மத்திய கல்லூரி*

## போராடு

தமிழனாய்ப் பிறந்துவிட்டாய்
எத்தனை சுமை வந்தாலும்
உறுதியுடன் போராடு!
வெற்றி நிச்சயம் என்பதை
ஒருபோதும் மறந்து விடாதே!

*அ.அன்புமாறன்*
*யா/ சைவப்பிரகாச.வி., வரணி*

## சுமையல்ல கல்வி

தோளிலே சுமைதாங்கி
தோல்வியின் வலி தாங்கி
வியர்வையோ வழிந்தோட
விதியென்றே விழியோடு
கலவரம் செய்கின்ற
கண்ணீர்த்துளிகள்
இளமையில் வறுமை போராட்டம்தான்
சற்றே கொஞ்சம் சிந்தித்துப் போ
புத்தகங்களை சுமந்து நில்
நாளை அவை உன்னை சுமக்கும்

*பு.பிரசாந், அல்லைப்பிட்டி*

## காலத்தின் கோலம்

உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
எலும்பும் தோலுமாக
ஒருசாண் வயிற்றை
வளர்ப்பதற்கு
யுத்த காலம்– தந்த
கோலம் இதுவோ?

*எம்.சற்குணம்*
*சங்கானை*

## நம்பிக்கை

ஊன் உருக உடல் வலிக்க
உத்தமனாய் வாழ்ந்திட
சுமைதாங்கி வீரமுடன்
எழுந்திரு மகனே

*வீ.சுகுமார்*
*மந்துவில் கிழக்கு*

# மௌனத்தின் தேடல் –245



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 08.04.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் உன்னுடைய முன்மாதிரி?

வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற மனிதர்கள் நமக்கு ஏராளமான விடயங்களைச் சொல்லித் தருவார்கள். எத்தனையோ நோக்கங்களுக்காக, காரணங்களுக்காக, செயல்களுக்காக பல மனிதர்களைச் சந்திக்கின்றோம். அதில் பலவகையான குணங்களையுடையவர்கள் இருக்கின்றனர். அவர்களிடமிருந்து சில விடயங்களை நாம் கற்றுக் கொள்ள பார்க்கின்றோம். அவர்களின் சிறப்பு மிக்க குணங்களை கற்றுக் கொள்ளப் பார்க்கின்றோம். சில வேளைகளில் அவர்களிடமிருக்கின்ற தீய விடயங்களை கற்றுக் கொள்ளப் பார்க்கின்றோம். நண்பா! உனக்கு முன்மாதிரி யார்?

எத்தனை தடைகள், கஷடங்கள், துன்பங்கள் வந்தாலும் தன்னுடைய தோளில் குடும்பச்சுமையைச் சுமந்து கொண்டு நாம் நிமிர்ந்து வாழவேண்டும், எங்கள் சந்ததியே நிமிர்ந்து ஊர் போற்ற வாழவேண்டும் என்று பாடுபடும் உன் தந்தையா? அல்லது, வீட்டின் பொறுப்புக்களை தானாகவே ஏற்றுக் கொண்டு தன்னுடைய கிராமத்திலும் பெருமை மிக்க பையன் என்று போற்ற மற்றவர்களுக்கு உதாரணமாக இருக்கின்ற உன் மூத்த சகோதரனா? அடிக்கு மேல் அடியாக குடும்ப வாழ்வில் புயல்காற்று வீசினாலும் வளைந்து விட்டு மீண்டும் நிமிர்ந்து நின்று மறு வேலை பார்க்கும் உன் தாயா? சிறுவயதிலிருந்தே தனியாக வளர்ந்தாலும் மற்றவர்கள் மூக்கில் விரல் வைக்குமளவுக்கு வளர்ந்து மிகப்பெரிய மேலதிகாரியாக இருக்கின்ற உன்னுடைய மாமாவா? யார் உன்னுடைய முன்மாதிரி.

கல்வி கற்கும் காலத்தில் எங்களை அடிக்காமல் திருத்தி, ஒரு நிலைக்கு கொண்டு வருவதற்குப் பாடுபட்ட மறக்கமுடியாத ஆசிரியரா? வீதியில் அடிபட்டுக் கொணடு நின்ற குழுவில் இருந்த உன்னிடம் வந்து, அமைதியாகவும் ஆறுதலாகவும் பேசி, உங்களுடன் சிறிது நேரம்பேச வேண்டும், எனக்கு நீங்கள் எனக்கு சிறிது நேரம் ஒதுக்குவீர்களா? என்று கேட்டு உன் கைகளைப் பிடித்துக் குலுக்கிய வணக்கத்துக்குரிய பாதிரியாரா? படிக்கின்ற காலத்தில் காதல் மயக்கத்தில் அவளை மறக்க முடியாமல் வீதிகளில் விழுந்து கிடந்த உன்னை, அன்பாகப் பேசி, அடித்துப் பேசி, அறியாமையைப் புரிய வைக்கப் பேசி ஒரு வழிக்குக் கொண்டு வந்து கடைசி வரை உன்னோடு இருக்கின்ற உன்னுடைய நண்பனா? இதில் யார் உன்னுடைய முன்மாதிரி. சற்று நேரம் சிந்தித்துப்பார்.


இவர்களில் யாராவது ஒருவர் உன் வாழ்வில் முன்னுதாரணமாக இருந்திருப்பார். நான் ஒன்றும் அவரைப் போல வாழ விரும்பவில்லை. நான் நானாக இருக்க விரும்புகின்றேன் என்று நீ சொல்வது எனக்குக் கேட்கின்றது.

ஆனாலும் நண்பா, உனக்குள் ஒளிந்திருக்கின்ற அற்புதமான இயல்புகளைத் தான் நீ மற்றவர்களிடம் கண்டு பிடிக்கின்றாய். அவற்றைப் பின்னர் உன்னுடையதாக்கிக் கொள்கின்றாய். அதற்குப் பல முன் மாதிரிகள் தேவைதான்.

ரஷ்யாவின் ஒரு கிராமத்தில் துஷ்ட சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுடைய செயற்பாடுகளால் ஊரில் இருக்கின்ற எல்லோரும் அவனை வெறுத்தொதுக்கினர்.

களவுச்செயல், அதீத குழப்படி என்று எல்லோருடைய கண்டனத்துக்கும் ஆளாகினான். அவனை மக்கள் அனைவரும் ஒதுக்கி வைத்தனர். கவலையடைந்த அவனுடைய தந்தையார் அவனை, பாதிரியார் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு தன்னால் அவனை வளர்க்க முடியாதென்று கூறிவிட்டு வந்துவிட்டார். சில காலம் கழித்து பாதிரியாரைத் தேடிப்போனார்.

தன்னுடைய மகனின் செயற்பாடுகளால் பாதிரியார் தன்னைத் திட்டக்கூடும் என்று பயந்து கொண்டே சென்றார். ஆனால் அவனுடைய புத்திக்கூர்மையைப் பற்றி வியந்து பாராட்டிய பாதிரியார், அவனை நல்ல நிலைக்கு கொண்டு வருவதாகக் கூறி வாக்குக் கொடுத்தார். அவன்தான் பின்னர் ரஷ்ய நாட்டின் இரும்பு மனிதன் என்றழைக்கப்பட்ட மிகப் பெருமை வாய்ந்த தலைவரான ஸ்டாலின்.



முன்னொரு காலத்தில் குருவானவரை முன்மாதிரியாகக் கொண்டு, அவரை மிஞ்சி நாம் முன்னுக்கு வந்து காட்ட வேண்டும் என்ற வெறித்தனமான இளைஞர் கூட்டம் இருந்தது. இதிகாச கதாபாத்திரங்கள் ஒன்றும் இதற்குக் குறைவில்லை. ஆனால் இப்போதெல்லாம், குருவுக்கு என்ன தெரியும்? என்று கேட்கின்ற இளைஞர் கூட்டமே அதிகம் இருக்கின்றது. முன்னொரு காலத்தில் பிரசங்கம் செய்த ஒருவர் யார் எல்லாம் சொர்க்கம் போவதற்கு விருப்பமானவர்கள்? என்று கூட்டத்திலிருந்தவர்களிடம் கேட்டபோது அனைவரும் கைகளைத் தூக்க, ஒரு சிறுவன் மட்டும் தான் தங்களுடைய நாட்டின் ஜனாதிபதியாகப் போகின்றேன் என்று பதிலளித்தான்.

அவன் தான் பெருமை மிக்க ஆபிரகாம் லிங்கன். அந்தச்சிறுவனிடமிருந்தளவு மனஉறுதி எங்களிடமிருக்கின்றதா? உறுதி கொண்ட ஒருவனால் தன்னுடைய முன் மாதிரியை இலகுவில் கண்டறிய முடியும். மாறாக நடிகர் விஜய், ரஜினிகாந்த், தல அஜித் அவர்கள் தான் என்னுடைய முன்மாதி ரிகள் (ரோல் மொடல்), (கோட் பாதர்) என்று சொல்லிக் கொண்டு திரிபவனாக நீ இருந்தால் நாளைக்கு நீ உன்னுடைய பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்க முடியாது.

எங்களுடைய தந்தை எங்களைவிட்டுப் பிரிந்த பின்னரும் நாங்கள், அவருடைய வாழ்க்கை முறையை, அவர்விட்டுச் சென்ற நல்லவிடயங்களைத் தொடர நினைக்கின்றோமாயின் அதுவே எங்களுடைய முதலாவது முன் மாதிரி பின்தொடரலாகவிருக்கும்.

நல்லதொரு முன்மாதிரி கிடைத்திருந்தால் நீ இப்படிக் கெட்டுக் குட்டிச்சுவராகியிருக்கமாட்டாய். என்று பலரும் சொல்வார்கள். ஆனாலும் எங்கள் சமூகத்தில், நாளாந்தம் நாம் படிக்கின்ற கல்லூரிகளில் பல முன்மாதிரிகளைக்காண்கின்றோம். ஆசிரியர்களும் ஒருவகையில் சிறந்த முன்மாதிரிகள் தான். அவர்களுடைய சரியான வழிகாட்டல் எங்களைச் சிறந்த நிலைக்கு

**யாழ்.தர்ஷி**

கொண்டுவருமாயின் அதுவும் ஒருவகை உதாரணம்தான். யாரை முன்மாதிரியாகக் கொள்வது என்பது உன்கையில் தான் இருக்கின்றது.

செம்மறி ஆடுகள் தங்களுக்கு முன் செல்லும் ஆட் டைப்பின்பற்றி அப்படியே செல்வது போல, உங்கள் முன்மாதிரிகள் செய்வது போல அப்படியே செய்ய வேண்டுமென்பது கிடையாது. நீங்கள் உங்கள் வழிகள்ளத் தீர்மானிக்கலாம். ஆனால் வழியொன்று கிடைக்க வேண்டும்.

ஒருசிலர் படிப்பு, பட்டம், பதவி என்று பெரிதாக சொல்லத்தக்க விதத்தில் இல்லாவிட்டாலும் சிறந்த மனப்பாங்கும், மற்றவர்களோடு நல்லுறவு வைப்பவராகவும், எப்போதும் எதையும் அமைதியாக அனுகுபவராகவும், அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பவராகவும் இருப்பார். அவர் உங்கள் வீடுகளிலும் இருப்பார். ஆனால் அவரை நாம் மதிக்கின்றோமா, அவரிடமிருந்து ஏதாவது கற்றுக் கொள்ள விரும்புகின்றோமா என்றால் அது பல வேளைகளில் கேள்விக்குறியாகின்றது.

அவர் வேறு யாருமல்ல உங்கள தாத்தாவாக, பாட்டியாக இருக்கலாம் பழைமை என்று பலராலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம். அவர்கள் சேர்த்து வைத்திருக்கின்ற அனுபவங்களை பின்பற்றினால் வாழ்வில் சில கடினமான நேரங்களில் நாம் தப்பிக் கொள்ளலாம்.

உன்னுடைய முன்மாதிரிகளை தெரிவு செய்து, உன் இலக்குகளை சரியாக அடையாளங் கண்டு, அவற்றின் வழியிலே பயணம் செய்வாயாக இருந்தால் நண்பா உன் வாழ்வில் மற்றவர்கள் மதிக்கும் புதிய பரிணாமங்கள் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**சென்றவாரம் வெளிவந்த *"அம்மான்ரை கடைசி ஆசை"* சம்பவ விபரிப்பின் அடிப்படைப் பிரச்சினையாக குடிப்பிரச்சினை காணப்பட்டது. குடும்பத் தலைவனின் குடியால் பல குடும்பங்கள் பல்வேறுபட்ட உளசமூகப்பிரச்சினைகளை எதிர் கொண்டுவருகின்றனர். ஆனாலும் குடியிலிருந்து விடுபடுவதற்கான பல்வேறு வழிமுறைகள் தற்போது காணப்படுகின்றன. தன்னுடைய குடிப்பிரச்சினையால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை தானாகவே உணர்ந்து அப்பிரச்சினையிலிருந்து விடுபட நினைக்கும் நபர் ஒருவர், முற்றாக குடிப்பிரச்சினையிலிருந்து விடுபடலாம். பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு சிகிச்சை முறைகள் பல இருக்கின்றன என்பது பலருக்குத் தெரிவதில்லை. எனவேதான் இவ்வாரம் குடிப்பிரச்சினையுடன் வருவோருக்கு மறுவாழ்வளிக்கும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள *"குருந்தம்"* நிலையத்தின் பொறுப்பாளர், திரு ச.ரவீந்திரன் (உளமருத்துவ சமூகப்பணியாளர்) அவர்களிடம் நேர்காணலை மேற்கொண்டோம்.**




குருந்தம் - முகப்புத் தோற்றம்

அங்கு பலர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். அங்கிருந்து மறுவாழ்வு பெற்றவர்கள் **"குருநதம் எங்களுக்கு வீடு போன்றது""எங்களுக்கு கோயில் போன்றது" "எங்கடை வாழ்வைத்திருப்பித் தந்த கடவுள்"**என்றெல்லாம் வாணித்த விதமும், குருந்தம் அமைக்கப்பட்டிருந்த அமைப்பும், அங்கு செல்வோரின் உள்ளத்தை தொடும வகையில் இருந்தன. அங்கிருக்கின்ற உளச்சிகிச்சையாளர்கள், உளவளத்துணையாளர்கள் மற்றும வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் பலரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர். குருந்தத்திலிருந்து மறுவாழ்வு பெற்று குடிப்பிரச்சினையிலிருந்து விடுபட்டவர்கள் மீண்டும அங்கு வருகை தந்து விருந்தினர் போல உரையாடிச்சென்றதைக் காணும்போது மனதுக்கு மகிழ்வாக இருந்தது.

பசுமையான இயற்கை சூழலில் **"குருந்தம்"** என்று மனதில் நிம்மதி தரக்கூடிய பெயரையும் கொண்டு, மக்களுக்கு அளப்பரிய சேவையை மிகவும் அமைதியாகச் செய்து வருகின்றது.

நாங்கள் அங்கு சென்றிருந்த வேளை ஒருவர் தொடர்ச்சியாக 18 நாட்கள் சிகிச்சை பெற்று, குடும்பத்தவர் சூழ, வீடு செல்ல தயாராக விருந்தார். அங்குள்ள நடைமுறைப்படி இறுதியாக சத்தியப்பிரமாணம் எடுக்கும் வைபவம் இடம்பெற்றது. **"இறைவா! மாற்றமுடியாதவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும், மாற்றக்கூடியதை மாற்றியமைக்கும் மனத்தைரியமும், இவ்விரண்டையும் பாகுபடுத்தியறியும் ஞானமும் தருவாயாக."** என்ற அந்த வார்த்தை உண்மையில எல்லோர் மனதிலும் ஆழமாகபதிந்திருக்கும். வீடு செல்வதற்கு மனமின்றி தன்சகநண்பர்களைப பிரிந்து அவர் சென்ற காட்சிநம்கண்களில்நின்றது. அப்படி என்ன தான் செய்கிறார்கள்??? பார்ப்போம்.

அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை தொடர்பாக குருந்தத்தின் பிரதான பொறுப்பாளர் திரு ச. ரவீந்திரன்(உளமருத்துவ சமூகப்பணியாளர்) அவர்களிடம் நேர்கண்ட போது..

**1.இவ்வாறாக தாமாகவே விரும்பி குடிப்பிரச்சினையி லிருந்து தம்மை விடுவிப்பதற்காக வருபவர்களுக்கு நீங்கள் முதலில் எவ்வாறான சேவையை வழங்குகின்றீர்கள்?**

நாங்கள், தாமாக விரும்பி குடியிலிருந்து விடுபடுபவர்களுக்கான சிகச்சை முறைகளைத்தான் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இங்கு வரவிரும்புபவர்கள் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைக்கு வந்து, வெளிநோயாளர் பிரிவில் தங்கள் பிரச்சினையை சொல்லி, ஐந்தாம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்படுவார்கள். 5ஆம் இலக்க விடுதிக்கு வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டால், அனுமதிக்கப்பட்ட நாளுக்கு முந்திய பத்து நாட்களோ, சில குறிப்பிட்ட நாட்களோ, குடிக்கவில்லை என்றால் அவரை அடுத்து வரும்,திங்கட்கிழமையே குருந்தத்துககு அனுப்பிவைப்பார்கள். ஆனால் வைத்தியசாலைக்கு வருவதற்கு முதல்நாளும் குடித்துவிட்டு வருபவராக இருந்தால், 5ஆம் இலக்க விடுதியில் தங்கவைக்கப்பட்டு, நஞ்சகற்றல் செயன்முறை நடைபெறும். அதன் பின்பே குருந்தத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார். குடிப்பவர்கள் எல்லோரும் நோயாளிகள் ஆவதில்லை. 100,பேருக்கு 20 பேர் குடி நோயாளராக மாறுகின்றனர். முதலில் தொடர்ச்சியாகக் குடிப்பதனால் தான் குடிநோயாளி யாகின்றனர் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதன் பின்னரே சிகிச்சையை ஆரம்பிப்போம்.

**2.உங்களுடைய (குருந்தத்தின்) சிகிச்சை முறைகள் பற்றி சொல்ல முடியுமா?**

எமது சமுதாயத்தில்மதுபாவனையின் அளவு வருடாவருடம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. அத்துடன் மதுபாவிப்பவர்களில் கணிச மானோர் மதுவுக்கு அடிமையாகிவிடுகின்றனர். மது பாவனையாளர்கள் முதலில், பல்வேறு காரணங்களைச் சாக்காகச் சொல்லிக் கொண்டு குடிக்கத் தொடங்குவார்கள். பின்னர், அவர்கள் மெல்ல மெல்ல, மதுவுக்கு அடிமையாகி விடுகின்றார்கள். ஆரம்பத்தில் சந்தோஷமாக, மிகவும் சாதாரணமாகத் தோன்றும் குடிப்பழக்கம், பின்பு மாறாத நோயாகிக் கஷடங்களைக் கொடுக்கின்றது. இவ்வாறான ஒரு நோய் நிலையில் ஒருவருடைய உடலும் மனமும் மது இல்லாமல் தொழிற்படக் கஷடப்படுகின்றன. இன்னுமொரு வகையில் சொல்வதென்றால், மது பாவனையாளர்கள்உடலளவிலும்மனதளவிலும் மதுவிற்கு அடிமையாகின்றனர்.

. குடிநோய்பேதம்பார்ப்பதில்லை, ஏழை பணக்காரன், படித்தவர் படிக்காதவர், தொழிலாளி, முதலாளி யாருக்கு வேண்டுமென்றாலும் இந்நோய் வரலாம். குடிநோயானது ஒரு நாட்பட்ட, தொடர்ந்து வளர்ந்து கொண்டு செல்லும் நோய் போன்றது. இதற்கு தகுந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். சிகிச்சையின் பின்பு ஒருவர் தனது வாழ்நாள் முழுவதும் குடிக்காமல் இருப்பது தான் இந்த நோயிலிருந்து விடுபடுவதற்கு சிறந்த வழியாக இருக்கும்.

முதலில் வைத்தியர்களால் பரிசோதிக்கப்பட்டு தேவையான மருத்துவ உதவிகள் செய்யப்பட்ட பின்னர் குருந்தத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றவர்களுக்கு நாங்கள் பலமுறைகளில் உதவி செய்கின்றோம்.

குழுச்சிகிச்சை

- குடும்ப உளவளத்துணை
- தனியாள்உளவளத்துணை
- சிந்தனையைத் தூண்டி குடியிலிருந்து விடுபடுவதற்கான ஊக்கம் கொடுக்கும் உளவளத் துணை (MTC)
- குடும்பத்தவின்அனுபவப்பகிவு [illegible]

குடிப்பிரச்சினை தனித்து ஒரு நபரைச்சார்ந்த பிரச்சினை அல்ல. இன்றைக்கு இப்பிரச்சினையால் எத்தனையோ குடும்பங்கள், பிள்ளைகள் பல பாதிப்புக்களை எதிர் கொள்கின்றனர். அதேவேளை, குடிப்பவர்கள் தாமாக குடிப்பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு நினைத்தாலும் சில காரணங்கள் அவாகளை, மறுபடியும்குடிப்பிரச்சினைகுள்கொண்டுசெலுத்தி விடும். அதனால் நாங்கள் அதிகளவில் அவர்களுடைய குடும்பத்தவர்களோடு பேசவேண்டியிருக்கும். குறிப்பாக, வீட்டிலுள்ள குடும்பத் தலைவர் குடிப்பிரச்சினையுடன் வந்தால், அவருடைய மனைவி,



**திரு ச. ரவீந்திரன் அவர்கள் சிகிச்சை முறைகள் பற்றி விளக்குகின்றார்...(*குருந்தம், பயிற்சி மண்டபம*)**

பிளளைகள் ஆகியோருடைய ஆதரவையும் நாங்கள் பெறவேண்டும். நாம் நிறைய சேர்ந்து கலந்துரையாட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் எல்லாம் பொதுவாக, உரையாடல்சிகிச்சை முறைச் செயற்பாட்டின் மூலமாக நடைபெறும்.

அடுத்து நச்சு நீக்கல் சிகிச்சையானது மிக முக்கியமான ஒரு சிகிச்சையாகும். இச்சிகிச்சை பொது மருத்துவ வடுதியில்வைத்துச்செய்யப்படும்.

- மதுவை விடுவதனால், உடலிலும் உள்ளத்திலும் ஏற்படக் கூடிய அறிகுறிகளைக் கட்டுப்படுத்தக கூடிய மருந்துகள் மாத்திரைகளாகவோ, ஊசிமூலமோ உடலில் சேர்க்கப்படும்.
- மதுவைத் தொடர்ந்து பாவிப்பதனாலும், சாப்பாடுகளில் கவனமின்றி இருப்பதனாலும் ஏற்படக் கூடிய விற்றமின் குறைபாடுகளை நீக்க, சக்தி வாய்ந்த விற்றமின் மருந்துகள் கொடுக்கப்படும்.
- ஏற்கனவே நித்திரையின்மையும், ஏனைய குழப்பமான மனநிலைமையும் தோன்றியிருந்தால் அவற்றைச் சீர்செய்வதற்கான மருந்துகள் பாவிக்கப்படும்.
- இவற்றைவிட மதுவினால்ஏற்பட்ட ஏனைய உடல்சார்ந்த பிரச்சினைகளான ஈரல்பாதிப்பு, இதயம் சம்பந்தமான பிரச்சினைகள், கிருமித் தொற்றுக்கள் போன்றன இருப்பின் அவையும் முறையாகப் பரிசோதிக்கப்பட்டு தேவையான சிகிச்சைகள் வழங்கப்படும்.

நச்சு நீக்கல் சிகிச்சையைத் தொடர்ந்து பெறுகின்ற ஒருவர், சாதாரணமாக மூன்று தொடக்கம் ஏழு நாட்களுக்குள் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபட்டுச் சுகம் பெறலாம்.

**தொடர்ந்து வருகின்ற வாரம், குறித்த நேர்காணலின் தொடர்ச்சியும், குருந்தம் - (மதுபாவனைக் கெதிரான மறுவாழ்வு நிலையத்தில்) சிகிச்சை பெற்று இன்று முற்றாகக் குடிப்பிரச்சினையிலிருந்து விடுபட்டு, நல்ல நிலையில், குடும்பத்தவர்களுடன் மகிழ்வாக வாழ்கின்ற நபர்களின் உண்மைச் சம்பவ விபரிப்புக்கள வெளிவரும்.**

**"குருந்தம்" தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை.**

**தொலைபேசி இல: 021 227 0661**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு, 8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனக்குத் தானே குழிபறிக்கும் 'UNP' தலைவரின் நிலை

**"Ranil Kicks into His Own Goal" எனும் தலைப்பில் சண்டே லீடர் ஆசிரியர் தலையங்கத்தில் 22.03.2015 இல் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கையின் ஊடகத்துறையானது, மதிப்பிற்குரியதும் மதிகேடானதுமான இருவித முரண்பாட்டு நோக்கங்களுக்குரிய ஒரு குறியிலக்காகவே கடந்த பல வருடங்களாக இருந்து வருவதுடன் தொடர்ந்தும் அதே நிலைப்பாடு நிலவி வருவதும் வெளிப்படையானதே. பிரபல அரசியல்வாதிகள் தமது கஷ்டகாலங்களினூடாக கடந்து செல்வதற்கு ஊடகங்கள் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றபோது, அவை பயபக்திக்குரியவையாகப் போற்றிப் புகழப்படுவதும் மாற்றுக் கொள்கை அரசியல்வாதிகளால் திட்டித் தீர்க்கவும் பந்தாடப்படுவதுமாக மாறிமாறி அதே விதம் தொடர்ந்தும் இடம்பெறும் நிலையே உள்ளது.

அதாவது, இந்த 'பாசம்/பகைமை' என்ற இந்த பந்தப் பிணைப்பானது அரசியல்வாதிகளுக்கும் ஊடகங்களுக்குமிடையில் எந்தவொரு காலகட்டத்திலும் காணப்படக் கூடிய பிரதான மாறுபாட்டு நிலைகளேயாகும்.

மூன்று தடவைகள் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்தவரான ரணில் விக்ரமசிங்க அவர்கள் இலங்கை ஊடகங்களை சிறப்பான முறையில் நன்கு அறிந்து வைத்திருக்கும் ஒரு அரசியல்வாதியாகவே இருக்கவேண்டும்.

முன்னர் இலங்கையின் இணையற்ற சிறந்த பத்திரிகையாளராகத் திகழ்ந்த டீ.ஆர். விஜேயவர்த்தனவின் பேரனும், 1960களின் போது இலங்கையின் பத்திரிகைச் சுதந்திர பாதுகாப்பிற்கு அளித்திருந்த பங்காற்றலுக்கான 'தங்கப் பேனா' விருதினை ('Golden pen' award) சர்வதேச பத்திரிகை நிறுவனத்திடமிருந்து பெற்றவரான **எஸ்மொண்ட் விக்ரமசிங்கவின்** மகனுமான ரணில் விக்ரமசிங்க அவர்கள் மேற்படி குடும்பத் தொழிலையே தொடராதபோதிலும் தனது மாணவப் பராயத்திலிருந்தே இலங்கை ஊடகத்துறையை நன்கு அறிந்தவராகவேயிருந்தார். 2 ஆவது தடவையாக அவர் தனது பதவியிலிருந்த காலத்தில் இலங்கை பத்திரிகையாளர் ஒழுக்கநெறி ஆணைக் குழுவினை உருவாக்கியதுடன் இலங்கையின் தகவல் சுதந்திர சட்டத்தினையும் உருவாக்கியதன்மூலம் இலங்கை சுதந்திர ஊடகத்துறையின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியிருந்தார்.

இந்த விதத்தில், கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஊடகத்திற்கெதிராக அவரிடமிருந்து வெடித்துக் கிளம்பியிருந்த எதிர்மறையான கருத்துக்கள் ஊடகத்துறையுடன், விசேடமாக பத்திரிகைத்துறையுடன் அவருக்கிருக்கும் உறவுகள் பற்றி நன்கு அறிந்திருக்கும் அனைவருக்கும் அதிர்ச்சியான ஒன்றாகவே இருந்தது.

நீண்ட வருடங்களாகவே அரசின் எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்த அவர் மீது, விசேடமாக அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஊடகங்களுடன் தனியார்துறை ஊடகங்களுங்கூட அவ்வப்போது பல்வேறு கருத்துக்கள் மூலம் தாக்குதல்களை மேற்கொண்டே வந்தன. பொதுவாகவே ஊடகத்துறையினரின் கடுமையான தாக்குதல்களுக்கும் அவர் முகங்கொடுத்துவந்த போதிலும் அனைத்து சந்தர்ப்பங்களிலுமே தனது இயல்பான மென்போக்கினையே அவர் தொடர்ந்தும் பேணி வந்தார். ஆனாலும், 'SLFP' யின் செயலரும் முன்னைய அரசில் சுகாதார அமைச்சராகவுமிருந்த மைத்திரிபால சிறிசேனா அவர்கள் ராஜபக்ச அரசுடனான தனது தொடர்புகளை முறித்துக்கொண்டபோது மனித வளத்திலும் தொழில்நுட்பத்திலும் மேம்பட்ட நிலையிலிருந்த தனியார் ஊடகத்துறையானது மைத்திரிபால சிறிசேனாவுக்கும் ரணில் தலைமையிலான 'UNP' க்கும் முழு அளவிலான ஆதரவினை வழங்கும் நிலைப்பாட்டினை எடுத்திருந்தது. ராஜபக்ச அரசிற்கு எதிரான அணியானது தனியார் ஊடகங்களின், குறிப்பாக பத்திரிகையாளர்களின் முற்றிலும் இதயபூர்வமான ஆதரவின்றி எவ்விதம் வெற்றி பெற்றிருக்கக்கூடும் என்பதை கிஞ்சித்தும் நினைத்து பார்த்திருக்கவே முடியாது.

மைத்திரிபால சிறிசேனாவின் ஜனாதிபதிக்கான தேர்தல் வெற்றியிலிருந்து அரசியல் தேன்நிலவில் வெற்றிகரமாக இறங்கிய விக்ரசிங்க தனது கட்சிக்கு பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மைபலம் இல்லாதிருந்தும் பிரதம மந்திரியாக நியமனம் பெற்றுக் கொண்டார். ஆனாலும் தற்போது தேர்தலுக்கான நாள் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் அதற்கென திட்டமிடப்பட்டிருந்த அந்த நூறு நாள் சாதனைக் காலவரையறை மிக வேகமாகவே ஓடிக்கொண்டிருக்கிறது. பிரிவு ஒன்று ஏற்படக்கூடிய சாத்தியப்பாட்டிற்கான அறிகுறிகளும் தென்படுவதாயுள்ளது. இவற்றுக்கிடையே அரசியல் கடலின் புயல்காற்றுக்கு முகங்கொடுத்தபடி சமாளித்துக்கொண்டிருந்த 'UNP' அரசானது மத்திய வங்கியின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட அர்ச்சுனா மகேந்திரன் 'விவகாரம்' என்ற கற்பாறையில் மோதுண்ட நிலையில் அதே இடத்தில் தடுமாறிக் கொண்டிருக்கிறது. அதாவது, 'அரசமுறிகளை' ('Govt. bonds') தனது நெருங்கிய உறவினரொருவருக்கு முறையற்ற விதத்தில் விற்பனை செய்ததாக எழுந்துள்ள 'பெருங் குற்ற- விவகார'மே அதுவாகும். குற்றச்சாட்டுக்கள் நியாயப்படுத்தப்படுகிறதோ இல்லையோ, எதிர்த்தரப்புக்களிடமிருந்து எதிர்ப்பலைகள் ஏற்கனவே எழுந்திருப்பதுடன் ஆளுநரது இராஜிநாமாவோ அல்லது விடுப்பில் அவர் அனுப்பப்படுவதோ அல்லது அதுமட்டில் எவ்வித உடன்நடவடிக்கையோகூட எடுக்கப்படவுமில்லை என்பதுபோன்ற விடயங்கள் குறித்து 'UNP'யின் நிலையான உறுதிமிக்க உறுப்பினர்களுங்கூட மிகுந்த அக்கறை கொண்டவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இந்த விடயமானது முன்னைய ராஜபக்ச ஆட்சியின் போதிருந்த அரச தலைவர்கள் போன்றோர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றி எதிரணித் தரப்புக்கள் மற்றும் பொது மக்கள் தரப்பிலிருந்தும் வந்திருந்த பெரும் எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் மத்தியிலும் நீதியை நிலை நிறுத்த அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கத் தவறியதைத் தொடர்ந்தே பெரும் விவகாரமாக வெடித்துக் கிளம்பியிருக்கிறது. எப்படியும் பொதுமக்கள் ஆவேசம் அடையும் விதத்தில் பெரும் அவசரம் காட்டப்படுகிறது என்பது வெளிப்படையாக. இருப்பினும் நடவடிக்கைகள் மட்டில் சட்டவிதிமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டியிருப்பதால் அதற்குப்போதிய கால அவகாசம் அரசுக்குத் தேவைப்படும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே.

இங்குதான் ரணில் விக்ரமசிங்க தவறிழைத்தவராகிறார். அதாவது, இது மட்டில் விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட சபையானது, குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை மேற்கொள்வதற்கு வசதியாக மத்திய வங்கி ஆளுநர் விடுப்பில் சென்றிருப்பது பற்றியும் நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர்கள் மூவரும் இவ்விடயத்தில் மிகுந்த அனுபவம் வாய்ந்த சட்டவல்லுநர்கள் என்பது போன்ற தகவல்களை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க நீண்ட காலத்தை அவர் எடுத்துக்கொண்டவராகவே இருக்கிறார். இவ்விடயமானது பாராளுமன்றத்தின் தீர்மானத்திற்கான ஒன்றென்பதுடன் வெளியாருக்கு இதில் சம்பந்தமில்லையென்பதால் அது பற்றிய அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காகவே தான் காத்திருந்தார் என்பதே அவரது வாதமாக இருந்தது. இந்த விவகாரம் சூடுபிடிப்பதற்கு முன்னரே அவர் தனது இந்த அறிவித்தலை விடுத்திருப்பாரேயாகில் இது அரசுக்கு எவ்வளவோ தூரம் அனுகூலமான ஒன்றாகவே இருந்திருக்கும்.

அவர் தனது பாராளுமன்ற உரையின் போது ஏற்கனவே மத்திய வங்கி ஆளுநரை இராஜினாமா செய்யும்படி கேட்டிருந்த பத்திரிகையாளர் ஒருவர் மீது குற்றங்கண்டு அவரைச் சாடிய இவரது செய்கை, நிச்சயம் முட்டாள் தனமான ஒன்றாகவேயிருந்தது. இதே பத்திரிகையாளர் முன்னருங்கூட 'UNP'யின் தலைவரான தன்னையும் இராஜிநாமா செய்யும் படி கேட்டது பற்றி அதன் போது இவர் தமாஷாகவே கூறி நினைவுகூர்ந்தது பெரிதாக எடுபடவில்லை எனலாம்.

அதனைத் தொடர்ந்து தனக்கெதிராக செயற்பட்டு வந்த 'இலத்திரனியல் ஊடக நிறுவனம்' ஒன்றையும் அவர் சாடியதுடன் வெளியீட்டுத்துறையில் முதலீட்டாளராக இருக்கும் ஒருவரது நிதியிருப்பு மற்றும் வருமானங்களுக்கான நிதிமூல வளங்கள் பற்றியும் விசாரணை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் கூறினார். தனது நடத்தை குறித்து பத்திரிகையாளர்களால் மேற்கொள்ளப்படும் நேரடியான குற்றச்சாட்டுக்களை நன்கு புரிந்துகொள்ளக்கூடியவரும் அவர்களை ராஜபக்சவின் ஆட்சிக்கால அடிவருடிகள் என அழைக்காதவருமான நன்கு பண்பட்ட ஓர் ஜனநாயகவாதியாகவே விக்ரமசிங்கவை நாம் எண்ணியிருந்தோம். தமது விருப்பிற்கான அரசியல் பாதைகள் விக்ரமசிங்கவுக்கு எதிரான விதமாக இருப்பினுங்கூட தமது விருப்பிற்கேற்ப அவற்றை தெரிந்துகொள்ளும் உரிமை சுதந்திர ஊடக நிறுவனங்களுக்கு என்றென்றும் உரித்தான ஒன்றேயாகும்.

அடுத்த பாராளுமன்ற தேர்தலில் வெற்றியீட்டுவதென்பது ரணில் விக்ரமசிங்க எதிர்கொள்ளும் பாரியதொரு சவாலாகவே இருக்கும். விமர்சனைக்குரிய பத்திரிகையாளர் எவரையும் வெறுப்புக்குரியவராக குறைகண்டு சாடுவதென்பது தேர்தலை வெற்றிகொள்வதற்கான கலை அல்ல என்பதை அரசியலில் கற்றுக்குட்டியான ஒருவரேகூட நன்கு தெரிந்து கொண்டவராகவே இருப்பார். இந்தவகையில் இதனைத் தெரிந்து கொண்டிருப்பவரான ரணில் அவர்களின் தற்போதைய போக்கு 'தனக்குத்தானே குழிபறிப்பது' என்பதுதானா?

-தமிழில் யோகர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினி

சிறுகதை

தமிழினி ஒரு சிறிய கிராமத்திலுள்ள பின்தங்கிய பாடசாலையில் தரம் 5 இல் கல்வி கற்று



வந்தாள் அவளது தந்தை எரிகணை வீச்சில் பாதிக்கப்பட்டு கால் ஒன்றையும் கண் ஒன்றையும் இழந்த நிலையில் வீட்டுடன் துவிச்சக்கர வண்டி திருத்தம் செய்யும் ஒரு சிறிய கடையை நடத்தி வந்தார்.

தாய் தோட்டங்களில் ஏதும் கூலி வேலை வந்தால் வேலைக்குப் போவாள். தமிழினிக்கு ஒரு தங்கையும் ஒரு தம்பியும் என இரண்டு சகோதரர்கள் இருக்கின்றனர்.

பெரும்பாலும் அந்த வீட்டில் ஒரு நேர சமையல் தான் நடக்கும். அதே உணவைத்தான் இரவும் வைத்து உண்பார்கள். தமிழினிக்கும் அவளுடைய சகோதரர்களுக்கும் ஒரே ஒரு பாடசாலை சீருடை தான் உள்ளது.

அதையே துவைத்து அணிவார்கள். அதில் ஏதும் சிறிய கிழியல் வந்தால் அதையே அவர்கள் தைத்து அணிவார்கள். அவர்களது வீட்டில் மண்ணெண்ணெய் விளக்குத்தான். அதுவும் மண்ணெண்ணெய் இருந்தால் தான் விளக்கெரியும். இல்லை என்றால் இருள்சூழ்வதற்குள்எல்லா வேலைகளையும் முடித்து 7 மணிக்கே நித்திரைக்குச் சென்று விடுவார்கள்.

தமிழினி பாடசாலையில் படிக்கும் கல்வி மட்டும் தான். மாலை நேரங்களில் வீட்டிலிருந்து தானாகவே படிப்பாள். தமிழினியின் வகுப்பாசிரியர் தேவராணி ரீச்சர் மிகவும் நல்லவர். மிகவும் திறமையாக பாடம் சொல்லிக் கொடுப்பார்.

அவளது பாடசாலை வீட்டிலிருநது 1 km தூரத்திலுள்ளது. கால் நடையாகத்தான் மூவரும் பாடசாலைக்குப் போய் வருவார்கள்.

தமிழினிக்கு ஒருநாள் சரியான காய்ச்சலும் சளியும் ஊரிலுள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தில் காட்டி மருந்து எடுத்தும் குணமடையவில்லை.

எனவே நகரப்புறத்திலுள்ள அரசாங்கத்தின் பெரிய வைத்தியசாலையில் கொண்டு போய் காட்டுமாறு அந்த வைத்தியசாலையில் உள்ள வைத்தியரால் சிபார்சு செய்யப்பட்டது.

நகரத்திற்கு பேருந்து வண்டியல் சென்று வருவதற்கு அன்றைய தினம் அவர்களின் கையில் காசு இருக்கவில்லை. தமிழினியின் நிலையைப் பார்த்த அருகிலுள்ள உறவினரில் ஒருவர். தான் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சம்பந்தமாக நகரிலுள்ள கச்சேரிக்கு போவதாகவும் எனவே தான் தமிழினியை நகரத்திலுள்ள பெரிய வைத்தியசாலையில் காட்டி வருவதாகவும் கூறி தமிழினியை துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றார்.

மருந்து எடுத்த பின்னர் இருவரும் கச்சேரி நோக்கி துவிச்சக்கர வண்டியில் தங்கள் பயணத்தை தொடர்ந்தார்கள். போகும் வழியில் உள்ள நகர்ப்புற பாடசாலைகளில் பாடசாலை முடிந்து அந்த மாணவர்களை அவர் களது பெற்றோர்கள் கார், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்று வாகனங்களில் வந்துஏற்றிக்கொண்டுபோவதை தமிழினி கண்ணுற்றாள்.

தன்னைப் போலவும் தன் தம்பி, தங்கையின் வயதை ஒத்த பிள்ளைகளாகவும் அவர்கள் இருந்தார்கள். அவர்களுடைய சீருடை எல்லாம் பளிச்சென்று வெண்மையாக இருந்தது. எல்லோரும் சப்பாத்து அணிந்திருந்தார்கள். அழகான புத்தகப்பைகள் அவர்களின் முதுகில் தொங்கியது.

அப்போது தமிழினிக்கு [illegible] கள் பாடசாலைக்கு [illegible] கம்வந்தது. வெண்மையற்ற சீருடையும், பழைய செருப்புகள் அணிந்த காலும் கிழிந்த புத்தகப்பையும் கால்நடையும் அவளின் மனக்கண் முன் தோன்றி மறைந்தன.

பெரிய வைத்தியசாலையில் மருந்தெடுத்த பின்னர் 3 நாட்களில் தமிழினிக்கு வருத்தம் குணமடைந்து விட்டது. சுகயீனம் காரணமாக 1 வாரமாக பாடசாலைக்கு போகாமல் இருந்த தமிழினி மீண்டும் பாடசாலை செல்ல ஆரம்பித்தாள். தரம் 5 புலமைப்பரீட்சை நெருங்குவதால் இனி இன்னும் கூடிய கவனம் எடுத்து படிக்க வேண்டும் என்று தேவராணி ரீச்சர் அவளிடம் கூறினார். அத்துடன் வீட்டுப்பாடங்களையும் கூடுதலாக வழங்குவார். தமிழினியும் மாலையிலும் காலையிலும் பாடசாலை செல்வதற்கு முன்னரும் அந்த வீட்டுப்பாடங்கள் எல்லாவற்றையும் செய்து முடித்து விடுவாள். தமிழினியின் தாயும் கூடுதலாக கவனம் எடுத்து படிக்கச் சொல்வாள். மண்ணெண்ணெய் வாங்கி விளக்கெரித்து இரவிலும் தமிழினியை படிக்கச்செய்வாள். தமிழினி படிக்கும் போது தேநீர் ஊற்றிக் கொடுப்பாள். தமிழினியும் தேநீர் குடித்து விட்டு உற்சாகமாக படிப்பாள்.

பரீட்சையும் நெருங்கி விட்டது. நாளை விடிந்தால் பரீட்சை. காலை அவளுடைய தாய் கடைக்குச் சென்று பணிசும் வாழைப்பழமும் வாங்கி வந்து தமிழினிக்கு சாப்பிடக் கொடுத்தாள். தமிழினியும் சாப்பிட்டு விட்டு பரீட்சைக்கு செல்வதற்கு தயாராகினாள். என்ன காரியம் செய்வதென்றாலும் உங்கள் பெற்றோரின் காலில் தொட்டு வணங்கி அவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கி விட்டுச் சென்றால் என்றும் உங்களிற்கு வெற்றியே கிடைக்கும்.

அம்மா, அப்பாவிற்கு பிறகு தான் நாங்கள் வணங்கும் தெய்வங்கள் எல்லாம் என்று தேவராணி ரீச்சர் அடிக்கடி வகுப்பில் சொல்வது தமிழினிக்கு நினைவிற்கு வந்தது. உடனே தந்தையினதும் தாயினதும் காலில் தொட்டு வணங்கி விட்டு அவர்களின் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு பரீட்சைக்கு செல்வதற்கு தனது செருப்பை அணிந்து கொண்டு நடக்க ஆரம்பிக்கும்போது செருப்பு ஒன்று அறுந்து விட்டது. உடனே தமிழினி செருப்பை கழற்றி விட்டு வெறும் காலுடன் நடக்க ஆரம்பித்தாள். தாய் நிற்கச்சொல்லி விட்டு சட்டை ஊசி ஒன்றை செருப்பில் குத்தி அதை சீர் செய்து அணிந்து கொண்டு செல்லக் கொடுத்தாள். தமிழினியும் அந்த செருப்பை அணிந்து கொண்டு பரீட்சை நிலையத்திற்கு வந்து சேர்ந்தாள். அவள் பரீட்சை மண்டபத்தில் ஏனைய மாணவர்களுடன் கதைக்காமல் அமைதியாக இருந்து இவ்வளவு நாளும் படித்தவற்றை மனக்கண் முன் மீட்டுப்பார்த்தாள். பரீட்சை வினாத்தாள் கையில் வந்ததும் ஒரு தடவை நிதானமாக எல்லா வினாக்களையும் வாசித்துப் பார்த்தாள். பின்னர் இவ்வளவு நாளும் படித்தவற்றை வைத்துக்கொண்டு தன்னால் முடிந்தவரை பரீட்சையை திறமையாகச் செய்தாள்.

பரீட்சை முடிந்து ஒரு மாத காலம் உருண்டோடி விட்டது. அன்றும் வழமை போல் பொழுது புலர்ந்தது. தமிழினியும் தம்பி, தங்கையும் இன்னும் நித்திரை விட்டு எழும்பவில்லை. வேலிக்கு மேலால் யாரோ கூப்பிடுவது கேட்டது. அருகே சென்று பார்த்தால் அவர்களது கிராம சேவையாளர் நின்றிருந்தார். அவர்களின் வீட்டு ஒழுங்கைக்கு அப்பால் சில வாகனங்களும் நின்றிருந்தன. கிராம சேவை யாளர் தாயைப்பார்த்து எங்கே தமிழினி என்று கேட்டார். தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. தமிழினி இன்னும் நித்திரையால் எழும்பவில்லை



வீட்டினுள் உறங்கிக் கொண்டிருக்கிறாள் என்று கூறினாள். தமிழினியை எழுப்பி விடுங்கள் என்று கூறி விட்டு கிராம சேவையாளர் அந்த வாகனங்களை நோக்கி கையசைத்து கூப்பிட்டார். வாகனங்களிலிருந்து உயரதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் என்று பலபேர் இறங்கி வந்தார்கள். தாயும் தமிழினியை எழுப்பிக்கொண்டு வெளியில் வந்து கிராம சேவையாளரிடம் என்ன ஐயா விஷயம் என்னவென்று சொல்லுங்கோ, ஏன் எல்லோரும் எங்கள் வீட்டை வந்து நிற்கினம் என்று பயந்து கொண்டே கேட்டாள். அதற்கு கிராம சேவையாளர் உங்கள் மகள் தமிழினி தான் நடந்து முடிந்த தரம் 5 புலமைப்பரீட்சையில் மாவட்டத்தில் முதலாவதாக வந்துள்ளார். அவரிற்கு பாராட்டு தெரிவிப்பதற்கும், பேட்டி எடுப்பதற்கும் தான் உயர் அதிகாரிகளும் பத்திரிகையாளர்களும் வந்துள்ளார்கள் என்றார். தாயிற்கு தலை கால் புரியாத ஆனந்தம். தமிழினியை கட்டி அணைத்து ஆனந்தக்கண்ணீர் விட்டாள். தமிழினி தாய், தந்தை இருவரினதும் கால்களை தொட்டு வணங்கினாள். அந்த நேரம் தேவராணி ரீச்சரும் வந்து விட்டார் தமிழினி உடனே ஓடிச்சென்று அவரின் காலைத்தொட்டு வணங்கினாள். ஆசிரியரும் ஆனந்தக்கண்ணீர்பொங்க அவளை கட்டி அணைத்து கன்னத்தில் முத்தமிட்டார். கல்வி அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் எல்லோரும் கை கொடுத்து வாழ்த்துக் கூறினார்கள்.

பத்திரிகையாளர்கள் அவர்களது குடிசை வீடு, துவிச்சக்கர வண்டி திருத்தும் கொட்டில் எல்லாவற்றையும் புகைபடமெடுத்துக்கொண்டார்கள். பின்னர் தாய், தந்தை, தம்பி, தங்கையுடன் தமிழினியையும் சேர்த்து புகைப்படமெடுத்தார்கள். அடுத்து பத்திரிகையாளர்கள் தமிழினியை பேட்டி எடுத்தார்கள்.

தனது இந்த வெற்றிக்கு தேவராணி ரீச்சரும் தனது தாயும், தந்தையுமே காரணம் என்று கூறினாள். அத்துடன் எதிர்காலத்தில் தானும் தேவராணி ரீச்சர் போன்று ஒரு ஆசிரியராக வந்து தங்கள் ஊரைப் போன்ற பின் தங்கிய பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பித்து அங்குள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பித்து அவர்களை கல்வியில் உயர்வடையச் செய்ய வேணடும் என்பதே எனது எதிர்கால இலட்சியம் என்றும் கூறினாள்.

தமிழினியின் வெற்றி அவளின் குடும்பப்பின்னணி பற்றிய விபரங்கள் எல்லாம் இணையங்களிலும் முக நூல்களிலும் செய்தியாக பரவின. இவர்களின் குடும்ப நிலைமையை பார்த்த புலம்பெயர் தமிழரில் ஒருவர் தமிழினியினதும் மற்றும் அவளது தம்பி, தங்கையினதும் கல்விச் செலவை முழுவதும் தானே ஏற்றுக்கொள்வதாக உறுதி அளித்தார்.

தமிழினியின் தந்தை தொழில் செய்வதற்கு முச்சக்கர வண்டி ஒன்றை இன்னுமொரு புலம்பெயர் தமிழர் கொள்வனவு செய்து வழங்கினார்.

இன்னுமொருவர் தமிழினியின் தாய் சுயதொழில் செய்வதற்காக இரண்டு கறவைப் பசுக்களை கொள்வனவு செய்து வழங்கினார். மற்றும் ஒரு தொண்டு நிறுவனம் இந்தக் குடும்பத்திற்கு ஒரு சிறிய வீட்டை கட்டித் தருவதற்கு முன்வந்தது.

இப்போது அந்தக் குடும்பம் அனுபவித்த துன்பங்கள் அனைத்தும் தமிழினியால் நீங்கி அந்தக் குடும்பம் ஒரு அமைதியான அழகான புதியதொரு வாழ்க்கையை தொடங்கியது.

ம.பகீரதன்
(பருத்தித்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் நான்...

ஒரு கேள்விக்கு பல பதில் இருந்தாலும் ஒரு பதில்மட்டுமே மிகவும்பொருத்தமாக இருக்கும். கேள்விக்குரிய பொருத்த மான விடையை ஆராயும் போது தீர்வு கிடைக்கும். எதததனையோவியங்களை எழுதி முடித்தாலும் தலை விதி எதுவோ அதுவே நடக்கும்.

இந்தமனம் இருக்குதெல்லோ அது விசித்திரமானது. ஒருநேரம் ஒன்றை விரும்பும் மறுகணம் மற்றொன்றின் மேல் ஆசை கொள்ளும். இறுதியில் இரண்டிலும் ஆவல் கொண்டு ஒன்றும் கிடைக்காமல் போய் விடும். எப்பவும் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கவேண்டும். நாம் எடுக்கும் முடிவு பல வழி அல்லாமல் ஒரு வழியில் எடுத்தால் நம்பிக்கை பிறக்கும்.

திருமணம் என்பது இரு மனம் இணைவதையே சொல்வர். அந்த இருமனமும் ஒன்றாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். ஐயர் வந்து மந்திரம் ஓதினாலும் சரி. எவன் என்ன சொன்னாலும் சரி. இருமனம் கொள்ளும் ஒத்துழைப்பே திருமணத்தில் நிலைக்கிறது. எத்தனை வாழ்வில் இத்திருமணம் நிலைக்குதென்று சொன்னால் அது மிகவும் அற்ப விடயமாக இருக்கின்றது.

ஏனென்றால்வெளிநாட்டு மோகத்திற்குள்ளும் நாகரிக வாழ்க்கைக்குள்ளும் முடங்கி மனிதர்கள் சிலர் திருமணத்தை விளையாட்டு பொருளாக கருதுவதால் கண்ட கண்ட பாட்டிலே ஒழுங்கமைப்பு ஒன்றில்லாமல் நடைபெற்று அற்ப சந்தோசங்களை அனுபவித்துவிட்டு விலகிச்செல்கின்றார்கள்.

எந்த பெரிய இயக்குநர்களையோ நடிகர், நடிகைகளையோ எடுத்துப் பார்த்தால் எத்தனை வாழ்வில் திருமணம்நிலைக்கிறது. டைவேஸ், ஹோட் என அலைந்து திருமண வாழவை நாசம் செய்து பிரிக்கின்றனர். இதற்கெல் லாம் காரணம் என்ன? அள விட முடியாத சொத்து சுகம் இருப்பது புரிந்துணர்வற்ற மனங்கள் இணைதல் இக் காரணங்களே அமைகிறது.

இருமனம்இணைந்தால் தான் மணபந்தம் நிலைக்கிறது. அது இல்லாதுவிடின் நரகத்தில் முடிகின்றது. எனவே மண வாழ்க்கையிலே எல்லாப் பொருத்தத்தையும் பார்ப்பவர்கள் மனப் பொருத்தத்தையும் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

ஆண்டவன் தரிசனம் கிடைக்க வேண்டுமென்று அல்லலுறும் பக்தர்கள் அதிகம் உண்டு. ஆண்டவன் அன்பே வடிவானவன். தெய்வம் அனைத்தும் ஒன்றாக இருந்தாலும் தமது வசதிக்கேற்ப தமக்கு பிடித்த விதத்தில் வழிபாடு நடத்துகிறார்கள்.

ஆண்டவனுக்கு அதிகம் பேர் பயப்படுபவர்களாக இருப்பதனால்தான் அடங்கிப் போய் இருக்கிறார்கள். இறைவனின் சித்து விளையாட்டுக்கள் பல இருக்கின்றன. அதனால்தான் அவன் புகழ்பாடி அடியார்கள் சரண்புகுகின்றார்கள்.

குழப்பமின்றி வாழ்பவர்கள் விசித்திரம்தான். கடவுளின் வாழ்விலே பிரச்சினையுள்ளதாக புராணங்கள், இலக்கியங்கள், வரலாறுகள் சுட்டிக்காட்டும் போது மனிதனின் வாழ்வில் பிரச்சினை இல்லாது போகாது தானே. எதனையும் உணருங்கள் வாழ்வில் உயருங்கள்.

இறைவன் யார்? யாரை எப்பப்போ சோதிப்பான் என்பது யாருக்கும் தெரி யாது. அப்படி தெரிந்தால் கவலை ஏதும் கிடையாது தானே. அதற்கேற்ற மாதிரி வாழ்வை நடத்திச் செல்லலாம். எத்தனையோ தவிப்புக்கள் துடிப்புக்கள் சில விடயங்களில் இருந்தாலும் வாழ்வதும் வீழ்வதும் அவரவர் கரங்களிலே தங்கியுள்ளது.



எந்த நிலையிலும் நல் நிலைப்படுத்தி பார்த்தல் வேண்டும். இந்த பாழாய் போன மனம் இருக்குதெல்லோ யாரை கண்டாலும் அதிக அன்பு வச்சிடும். பின்புதானே கவலைகள், பிரிவுகள் ஏற்றுக்கொள்ள முடியாமல் தத்தளிக்கும்.

வாழ்க்கையில் பல இடங்களில் அடியுண்ட நபர்தான். ஒவ்வொருவரும் எப்படி இருப்பார்கள் என்பதை சற்று புரிந்து கொள்வேன். எந்தவொரு விடயத்திலும் சிறப்பாக ஈடுபடவேண்டுமானால் திடமான நம்பிக்கை செயலில் வேண்டும். ஆண்டவன் எழுதிய பலன்படியே அனைத்தும் நடக்கும். தடுமாற்றம் ஏற்படும் போது தவறுகள் இழைக்கப்படுகின்றது. நிதான செயற்பாடே நின்று நிலைக் கிறது.

பிறர் மனம் எப்படி என்று அறியாமல் பழகுவது ஆபத்தினை கொண்டுவந்து விளைவிக்கும். மனித வலுவினை விஞ்சியதாக ஒரு சக்தி இருக்கின்றது. அதுவே தெய்வீக சக்தியாக அமைகின்றது.

மறக்கமுடியாத கணங்களிலே நினைவலைகள் நீந்துகின்றது. வாழ்க்கையில் இனிப்புக்களும் கசப்புக்களும் வந்து போவது வழமையே. தலைமைத்துவம் ஏற்கும்போது முதல் சற்று மனம் பதற்றமாகவே இருக்கும். போகப் போக அனைத்தும் சரியாக வந்து விடும்.

அப்படித்தான் வாழ்வில் காணும் ஒவ்வொரு நகர்வுகளும் ஒருபோட்டியில் பங்குபற்றும் போதுதான் அதன் அருமை பெருமை தெரிகிறது. அதேபோல் தான் வாழ்க்கையும் போட்டியும் போர்க்களமும் நிறைந்ததாகவே அமைகின்றது.

நான் நடப்பது சரி என தெரிந்தால் பிறரின் நயவஞ்சக பேச்சில் காது கொடுக்கக்கூடாது. எதனையும் சின்ன விடயமாக நினைக்கும்போது சாதனைகள் நிறைய நிலவுகின்றது. எதிரியுடன் எவ்வளவு காலம வாழ்ந்தாலும் நயவஞ்சகருடன் ஒருபொழுதும் வாழ்வது அழகல்ல. சட்டம் ஒரு இருட்டறையாக இருப்பதனால் தான் சவால்கள் நிறைவேற்ற முடியாமல் போகின்றது. எல்லா நிலைமைகளும் ஏற்றத்தாழ்வுகளிலே ஆற்றப்படுகின்றது. நிறைவுடைய எதிலும் சாதனை நிலவுகிறது. முகம் மூடும் திரைகளைப் போல மனமும் சிலவேளை மௌனம் சாதிக்கின்றது.

இலக்கியம்சோலையிலே இருளும் நிலவும் மாறி மாறி தோன்றுகின்றது. தியாக வேள்விகளே அனைத்தையும் கடந்தது. மூட மனிதன் நம்பிக்கையில் முழு மனிதன் ஆக மாட் டான்.

மாற்றான் வீடே தஞ்சமென தினமும் வாழ்பவனுக்கு மறுஉலகமும் கிடைக்காது. முழுமைத்துவம் பேணும்மனிதமனம்புதைந்துவிட்டது. எதிர்பார்புக்கள் நிறைவேறாதபோது மனதிலே கசப்புக்கள் உருவாகின்றது. சுயநலம் விரித்தாடும் குடையிலே தனி மனித சுதந்திரம் பறிக்கப்படுகின்றது. உள்ளம் மகிழும்கணங்களைவிட அழும நிலையே அதிகமாகும். படைக்கும் போது அதிகம் துனபத்தினைத்தானே ஆண்டவன் விதித்துள்ளான். விண்வாழ்க்கையும் மண் வாழ்க்கையும் வெவ் வேறுபட்டன. அதுதானே விண்ணுக்கு சென்றவர் மண்ணுக்கு திரும்பி விட்டார். ஆனால் பிறவி என்பது தொடர்ந்த வண்ணம் இருக்கும். விண்ணுக்கு சென்றவர் என்று எதை நான் குறிப்பிட்டேன் என் றால் இறைவனோடு இரண்டற கலந்தவர்களை ஆகும். இந்த உயிர் தொடர்ந்தும் பிறப்பெடுத்த வண்ணம் இருந்தாலும் ஒரு கட்டத்தில் ஏதோ செய்து அழிவற்ற இவ் உயிர் ஆண்டவனோடு கலக்கிறது. ஆண்டவன் தரிசனத்திலே ஆயுள் வரை வாழலாம்.

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

# முன்னோர் பெருமையை உலகறியச் செய்வோம்

வாகனங்களுக்கு முன்னால் எலுமிச்சம்பழம், மிளகாய் கட்டும் பழக்கம் மூட நம்பிக்கை இல்லையென்று இன்றைய விஞ்ஞானம் சொல்கிறது.

எலுமிச்சம் பழத்தில் உள்ள சிட்ரோனிக் அமில்கா (Cidronic amilga) என்னும் அமிலமானது மிளகாயில் உள்ள பென்னியோசிட் (Benniyocid) என்னும் காரத்துடன் இரசாயனப் பகுப்பாகி, மிதீரியட் (methiriyed) என்னும் ஒருவகை உந்து வாயுவை வெளியிடுகிறது.

அந்த வாயுவை வாகனத்தின் பானட்டில் இருந்து ஸ்டியரிங் வரை செல்லும் எத்ஹோயிட் (Ethgoid) என்னும் கலப்பு மூலகத்திலான உலோகக்கம்பி வாகனத்தின் உட்பகுதி வரைகடத்துகிறது. அந்த வாயுவானது ஓட்டுநரை நித்திரை கொள்ளாமலும், உற்சாகத்துடனும் இருக்கச் செய்வதுடன், பிரேக் ஒயிலையும் வற்றாமல் பாத்துக்கொள்கிறது. இதில் இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால், இந்த வாயுவானது மேற்சொன்ன இரசாயனப் பகுப்பால் ஒரு வாரம் மட்டுமே கிடைக்கிறது. அதனால்தான் வாரா வாரம் வெள்ளிக்கிழமை



களில் ஏற்கனவே கட்டப் பட்டவை அகற்றப்பட்டு புதிதாகக் கட்டப்படுகின்றது..! வெள்ளிக்கிழமைகளில் இதனைச்செய்வதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. பூமியானது சூரியனுக்கும் சுக்கிரனுக்கும் இடையில் வடமத்திய ரேகையில் கடகக் கோட்டுக்கு தெற்கே 5 டிகிரி மேல்நோக்கி ஏறி, 3 டிகிரி கீழ்நோக்கி இறங்குவதால் இந்த இரசாயன பகுப்பு அதிகம் நடக்கிறது..!!! நம் முன்னோர்கள் மூடர்கள் அல்ல..! விஞ்ஞான அடிப்படையில் தான் செயற்பட்டிருக்கிறார்கள்..! நம் முன்னோர் பெருமையை உரக்க சொல்வோம்..! இந்த செய்தியை பகிர்ந்து உலகறியச் செய்வோம்..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரழியும் இளம் சமூகம்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்ததமிழ் தமிழின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் இறுக்கமான அடிக்கட்டுமாணங்களுடன் கடைப்பிடித்து வந்தது யாழ்ப்பாணம்.

கலாசாரம் என்றால் யாழ்ப்பாணம் என்று கூறுமளவுக்கு பெருமை கொண்ட யாழ்ப்பாணம் கலாசார சீரழிவின் முக்கிய இடமாக உள்ளதையிட்டு வேதனையடைகிறேன். உயிர்களைக் காவு கொண்ட போரின் காலங்களில் கூட எமது கலாசாரம் புனிதமாகவே இருந்தது.போர் ஓய்ந்து சற்று சமாதானதன்மை சுவாசிக்க தொடங்கிய அக்கணமே, கலாசாரத்தை சீரழிக்கும் காரணிகளும் முளைவிடத்தொடங்கின.

கலாசாரத்தை சீரழிப்பதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் இளம்சமூகத்தினரே. ஒரு நாட்டின் பெறுமதிமிக்க வலிமையுள்ள மூலதனம் இளைஞர் சமூகம் இன்று இவர்களது சுவாசமானது மாசடைந்த வாயுவை உள்ளெடுப்பதாக உள்ளது. இவர்கள் தமது வலிமையை எதிர்காலத்தை மறந்து விட்டனர் போலும் கலாசாரத்தை தலைகீழாய் பார்ப்பவர்களாகவும் போதைப் பொருட்களுக்கு அடிமைப்படுபவர்களாகவும் மாறிவிட்ட இளைஞர்கள், சிறைக்கைதியாகவும் துணிந்து விட்டனர்.



எம் குடாநாட்டின் இந்த இழிநிலைக்கான காரணங்களை உற்று நோக்கின் போதைப்பொருட்களின் பாவனை, வேற்று நாகரிகத்தின் இறக்குமதி, பெற்றோரின் பொறுப்பற்ற நிலை, நுகர்வோர் கலாசாரத்தின் ஆதிக்கம் என்பன முக்கியமாகின்றன.

இதன்விளைவாக வகைதொகையில்லா வாள்வெட்டுகளும் கொள்ளைகளும் பாலியல் வன்முறைகள், வன்புணர்வுகளும் தாராளமாக அரங்கேறுகின்றன.

அண்மையில் பிரபல பாடசாலையொன்றில் மாணவன் ஒருவன் தனது சீருடைபோகிற இடம் தெரியாமலே ஆசிரியரை தாக்கிய சம்பவம் அனைவரும் அறிந்ததே. போதைப்பொருட்களின் பாவனை எந்த அளவுக்கு இளைஞர்களை 'அழிவை நோக்கி கொண்டு செல்கிறது என்பதை இதன்மூலம் காணமுடியும்.

அப்பாவிப் பதின்மவயதுச் சிறுமிகள் பாலின்பத்துக்காய் பசியாறப்படுகின்றனர்.

பரலோகத்துக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். தினம் ஒரு வன்முறையாவது இடம்பெறாமல் இல்லை. இவையெல்லாம் ஏன்?எப்படி? என்பதை நம்மையே நாம் கேட்கவேண்டும்.வேற்றுக் கலாசாரம் எம்கலாசாரத்தின் முன் ஆடம்பர நடனம் புரிகிறது. இதைக் கண்குளிரப் பார்த்து உள்வாங்கி அரைகுறை ஆடைகளுடனும் வேண்டாத அணிகலன்களுடனும் வெட்டிகளாக திரிகின்றனர்.

செல்போன் பாவனையானது தமிழின் பண்பாட்டின் அழிவுக்கான நோய் காவியாக உள்ளது. காரணமின்றி தெருக்களில் அலைபவர்களாக உள்ள இளைஞர்களும் யுவதிகளும் செல்போன் துணையோடு பல அருவருக்கத்தக்க செயல்களை செய்கின்றனர்.

பல சிம் அட்டைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றோரை ஏமாற்றி பாலின சேர்க்கைகளிலும் பழிவாங்கும் செயல்களிலும் கூட ஈடுபடுகின்றனர். தொலைக்காட்சித் தொடர்கள் கற்றுக் கொடுக்கின்ற பாடங்களைப் படித்து சமூகவிரோத செயல்களை நெறியாள்கை செய்கின்றனர். பெற்றோர் வளர்ந்துவிட்ட பிள்ளைகளுக்கு பயந்தவர்களாக அடங்கி வாழ்வதைக் கூட காணக்கூடியதாக உள்ளது. நீதிமன்ற வழக்குகளில் பெரும்பாலானவை இளைஞர்களை மையப்படுத்தியே உள்ளன.

போதைப்பொருள் கடத்தல்,பெண் கற்பழிப்பு, சிறுமிகள் மீதான பலாத்காரம்,வாள்வெட்டு,பலதாரதிருமணம் போன்ற பல்வேறு முகங்கள் கொண்ட வழக்குகள் பதிவாகி பல இளைஞர் சிறைக்கம்பி எண்ணுகின்றனர்.

சந்திக்கு சந்தி அழகழகாய் காட்சி தரும் மதுபானக்கடைகள் இளம் சந்ததியினரை குழிதோண்டிப் புதைக்கின்றன. வேற்றுக் கலாசாரங்கள் எம் கலாசாரத்தை அழிக்க ஊடுருவல் செய்து குளிர்காய்கின்றன. தென்னிந்திய தொடர்கள் தேடி வந்து தீயிடுகின்றன.நாம் சிந்திக்க வேண்டும் பெற்ற தாயைப் புறக்கணித்து அந்நியமாதை அன்னையென வணங்கலாமா? எம் கலாசாரத்தை நாம் சிதைக்கலாமா? சீரழிக்கலாமா? கல்விச்சாலை செல்ல வேண்டியவர்கள் சிறைச்சாலை செல்லலாமா? இவ்விடத்தில் பெற்றோர் தமது பிள்ளைகள் மீது விழுந்துள்ள 'கலாசாரத்தை சீரழிக்கின்றனர் இளைஞர்' என்கிற குற்றச்சாட்டை உணர்ந்து இனியாவது தம் பிள்ளைகளின் பாதையை சீர்செய்ய வேண்டும்.

பிள்ளைகளின் நலனுக்காக, எம் பண்பாட்டின் மேன்மைக்காக இளையோர் சமூகத்தை செதுக்க வேண்டும். செல்லரித்துப் போகின்ற அவர்களது வாழ்வை செப்பனிட ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து முன்வரவேண்டும்.

உடுவிலூர் கலா

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: கர்ணன்

பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்

இசை :விஸ்வநாதன் - ராமமூர்த்தி



உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா .... கர்ணா
வருவதை எதிர்கொள்ளடா
உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா .... கர்ணா
வருவதை எதிர்கொள்ளடா

தாய்க்கு நீ மகனில்லை தம்பிக்கு அண்ணனில்லை
தாய்க்கு நீ மகனில்லை தம்பிக்கு அண்ணனில்லை
ஊர்ப்பழி ஏற்றாயடா நானும் உன் பழி கொண்டேனடா
நானும் உன் பழி கொண்டேனடா
உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது
வல்லவன் வகுத்ததடா .... கர்ணா
வருவதை எதிகொள்ளடா

மன்னவர் பணியேற்கும் கண்ணனும் பணி செயய
உன்னடி பணிவேனடா - கர்ணா
மன்னித்து அருள்வாயடா- கர்ணா
மன்னித்து அருள்வாயடா

செஞ்சோற்று கடன் தீர்க்கச் சேராத இடம் சேர்ந்து
வஞ்சத்தில் வீழ்ந்தாயடா - கர்ணா
வஞ்சகன் கண்ணனடா - கர்ணா
வஞ்சகன் கண்ணனடா


**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்: பூஜா கயல்விழி**

**அன்பு வாசகர்களே !**

**காலத்தால் அழியாத கானங்கள்** பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுணவதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

## ஈழத்து கவிதைகள் விஞ்ஞான ஆசிரியர்



### ஓ . . .

யாருமற்ற பரந்தவெளி
தேவையாக உள்ளது
வண்ணாங்களும் நகரங்களும்
சேர்ந்து அதிர்ந்த
பிரபல ஓவியம்போல . . .
ஏற்க முடியவில்லை உன்னால்
என் அறிவின் வேகத்தைக்
கொன்றுவிட்டாய் என்னை
மௌனமாக இருந்தே நீ தந்த வலிகள்
நியாயமற்றவை. அதனால்தான் இன்னும்
வலிக்கிறது என் காதலே
கிறுக்கலில்தான்
கிறுக்கலுக்கும் கவிதைக்கும்
காதல் வருமா என்கிறாய் நீ
புரிதலில் எப்பவுமே
குழப்பம்தான் எமக்கு.
சாதாரண வாழ்வு இல்லைதான்
என்னது இருப்பினும் வாழ்வை உறவை
நேசிப்பவள் என்னை
கவிதைகளில் ஆராய்கிறார்கள்
தடயங்களை நான் அழிக்காதபோதும்.

### அசைவின்றி ஒரு பொழுது

ஞாயிற்றுக்கிழமை
நேரம் நான்கு மணிதான்
மனிதர்கள் இருப்பதாகத் தெரியவில்லை
காற்றோடு போராடும் மரங்களும் குளிரும்
மழையும் நானும்தான் . . .
அயல் வீடுகளில் இருள் குடிவந்திருக்கிறது
தொலைபேசி அடிக்கடி
சிணுங்கிக்கொண்டிருக்கிறது
எப்பவோ நினைவிலிருந்து
விலகிப்போன காதலன்
இன்றும் அழைக்கிறான்
நண்பியின் சலிப்பான வார்த்தைகள்
ஒலிப்பதிவு நாடாவில் யாருடனும்
பேச வேண்டும்போல் இல்லை
எதைப் பற்றியும் அறியவோ
சிந்திக்கவோ ஆசையும் இல்லை
போர்வையின் கணகணப்பான
அணைப்பிலிருந்து
உடல் அசைய மறுக்கிறது.

### அழகியல் . . .

ரசனையாலான உனது அறையில்
உயிரான உன் ஓவியங்களுடன் நானும் நீயும்
நீண்ட நாட்கள் பழகிய உணர்வுடன்
உன் ஈர்ப்பில் அசைவற்ற என்னை
ஓவியமாக்கி உயிராக்கினாய்
உன்னை நான் கவிதையாக்கினேன்
கலையும் இலக்கியமும் கலந்து மகிழ்ந்தோம்
உன்னால் உனது ஓவியம் அழகா
ஓவியனானதால் நீ அழகா
பிரிக்க முடியவில்லை
இரண்டையுமே.

- ரஞ்சினி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# திரை விமர்சனங்கள்



# கொம்பன்

மெட்ராஸ் படத்தின் வெற்றிக்கு பிறகு கார்த்தி தன் பழைய வேட்டி, சட்டையை மாட்டி நடித்த படம் தான் கொம்பன். பருத்திவீரனுக்கு பிறகு கார்த்தி நடிப்பில் மீண்டும் ஒரு கிராமத்து படம். பருத்திவீரன் அளவிற்கு ஆழமாகவும் மற்றும் அழுத்தமாகவும் இல்லாமல் இருந்தாலும், ஒரு ஜனரஞ்சகமான மாமனார்-மருமகன் பாசத்தை வெளிப்படுத்தியுள்ளது இந்த கொம்பன்.

இயக்குநர் முத்தையா முந்தைய படத்தில் பயன் படுத்திய அந்த வேட்டி, சட்டையை கார்த்திக்கிற்கு கொடுத்து அதே களத்தில் இறக்கி அழகு பார்த்துள்ளார். இதில் ப்ளஸாக அதே வெற்றிப்பட நாயகி லட்சுமி மேனனை, கார்த்திக்கிற்கு ஜோடியாக்கியுள்ளார்.

**கதை**

நீ என்ன பெரிய கொம்பனா? என்ற வார்த்தைக்கு ஏற்றார் போல் கார்த்தி ஊரில் எங்கு தப்பு நடந்தாலும் தட்டிக் கேட்கும் முரட்டு இளைஞனாக வலம் வருகிறார். செம்மநாடு, வெள்ளநாடு, அரசநாடு என்ற மூன்று ஜில்லாக்களிலும் செம்மநாடு, வெள்ளநாடு ஒன்று சேர்ந்து அவர்களின் சொந்த ஊர்காரர்களையே தலைவராக்கி வருகின்றனர் இதை தட்டி கேட்கும் அரசநாட்டை சேர்ந்த பெரிய தலை ஒன்றை கொல்கிறார்கள்.

அதே அரசநாட்டில் தலை தூக்கும் கார்த்தி யாருக்கும் அடங்காத கொம்பனாக இருந்து வருகிறார். அப்போது செம்மநாட்டை சார்ந்த லட்சுமிமேனனை பார்த்ததும் காதல், அவரை பெண் பார்க்க கார்த்தியின் அம்மா கோவை சரளா செல்ல, 'என் அப்பா என்னுடன் தான் இருப்பார், அதற்கு சம்மதித்தால் தான், கல்யாணம்' என்று சொல்ல, திருமணம் சுபமாக அரங்கேறுகிறது.

ஆனால், தன் மாமனாரான ராஜ்கிரனை, கார்த்தி மதிக்காமல் தொடர்ந்து அசிங்கப்படுத்தி வர, ஒரு கட்டத்தில் கைகலப்பு வரை செல்கிறது. இதற்கிடையில் ஊரின் பெரும் தலை ஒன்று அநியாய வட்டிக்கு கடன் கொடுத்து அராஜகம் செய்ய, கார்த்தி அந்தக் கும்பலின் தலைவரை அடித்து விடுகிறார். இதனால் கார்த்தியை பழிவாங்க அந்த கும்பல் லட்சுமி மேனனுக்கு செக் வைத்து 'உன் புருஷனை வர சொல் என்கிறார்கள். இதை அறிந்து அந்த இடத்திற்கு வரும் ராஜ்கிரண், கார்த்தி வந்தால் அவருக்கு தான் பிரச்சினை என்று அவராகவே நடுரோட்டில் அந்த கும்பலை பந்தாடுகிறார். இதனால் கோபமடைந்த அவர்கள் 'உன்னையும் உன் மருமகனையும் கொன்றே தீருவேன்' என்று கங்கணம் கட்டுகிறார்கள். இந்த உண்மை அறிந்த கார்த்திக்கிற்கு, ராஜ்கிரண் மீது அதிக மரியாதை வருகிறது.இதற்கு அடுத்து பழிவாங்க வில்லன் குரூப் எடுக்கும் முயற்சியை கார்த்தி முறியடித்தாரா? தன் மாமா ராஜ்கிரணை அவர்களிடமிருந்து காப்பாற்றினாரா? என்பது தான் விறுவிறுப்பான மீதிக்கதை.

நடிகர், நடிகைகள், டெக்னிஷியன் பங்களிப்பு

கொம்பனாக கார்த்தி வாழ்ந்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும், பருத்திவீரனில் இடம்பெற்ற அதே தோரணை.

அதேபோல் அம்மாவாக வரும் கோவை சரளா, அண்ணனாக வரும் கருணாஸ், தாய் மாமாவாக வரும் தம்பி ராமையா என நம்மை ஒரு குடும்பத்திற்குள் கொண்டு போய் சேர்த்து விட்டார் முத்தையா.

லைட்டா விக்ரமன் சார் படத்துல அதிக வன்முறை சேர்த்த மாதிரி ஒரு பீலிங். வேல்ராஜின் ஒளிப்பதிவில் நகர மக்கள் இதுவரை பார்க்காத கிராமத்தை அழகாக கண்முன் கொண்டு வந்துள்ளார். இசை ஜி.வி. பிரகாஷ், என்ன பாஸ் ஹீரோவாகிட்டா மற்ற ஹீரோ படங்களை கண்டுக்க மாட்டீங்களா?

**க்ளாப்ஸ்**

கார்த்தி-ராஜ்கிரண் கெமிஸ்ட்ரி ஹீரோ, ஹீரோயினை விட நன்றாக ஒர்கவுட் ஆகியுள்ளது. ராஜ்கிரண் அவர்கள் தான் பிறவி கலைஞன் என்பதை நிருபித்துள்ளார். அட நம்ம கோவை சரளாவா இது? என்று கூறுவது போல் குணச்சித்திர கதாபாத்திரத்தில் கலக்கியுள்ளார்.

காலரை தூக்கிவிடும், வேட்டியை மடித்து கட்டும் கார்த்தி செம்ம மாஸ் சார், 50 பேரை அடித்தாலும் நம் பலாம் போல படத்தின் வசனத்தை குறிப்பிட்டே ஆக வேண்டும். 'கோவிலுக்கு ஜாதி சனத்தோட போகாதீங்க, ஜாதிய விட்டுட்டு சனத்தோடு போங்க' போன்ற வசனம் கைத்தட்ட வைக்கிறது.

**பல்ப்ஸ்**

குட்டிப்புலி படத்தின் சாயல் ரொம்ப தெரியுது முத்தையா சார். பிரச்சினை செய்யும் அளவிற்கு படத்தில் எந்த வசனமும் இல்லை என்றாலும், அங்கங்கு ஜாதி குறியீடு தேவை தானா? ஜி.வி. பிரகாஷ் சார் என்ன கிளைமேக்ஸில் மங்காத்தா பட தீம் மியூஸிக்கெல்லாம் வருது. கொஞ்சம் கவனமா இருந்திருக் கலாமே.

கறுப்பு நிறத்தழகி தவிர எந்த பாடலும் முடியல சார்.

மொத்தத்தில் குடும்ப ரசிகர்களையும், B, C செண்டர் ரசிகர்களையும் கவர இறங்கி அடித்துள்ளான் இந்த கொம்பன்.



# நண்பேன்டா

வெற்றி கூட்டணி என்று தமிழ் சினிமாவில் ஒன்று உருவாகிவிட்டால் போதும், அந்த கூட்டணியை சுற்றி எப்போதும் ஒரு எதிர்பார்ப்பு இருக்கும். அந்த வகையில் உதயநிதி - சந்தானம் கூட்டணியில் ஹாட்ரிக் லிஸ்டில் வந்திருக்கும் படம் நண்பேன்டா .

இப்படத்தை ஓகே ஓகே ராஜேஷிடம் துணை இயக்குனராக பணியாற்றிய ஜெகதிஷ் திரைக்கதை அமைத்து இயக்கியுள்ளார். சமீபத்தில் இப்படத்தின் ப்ரோமஷனுக்காக, உதயநிதி கொடுத்த ஒரு பேட்டியில் நண்பேன்டா படத்தை ஓகே ஓகே ரீமேக் என்று கூட சொல்லலாம் என்றார். ஆனால் அவரின் முந்தைய படமான இது கதிர்வேலன் காதல் படத்தையும் சேர்த்து கொள்ளலாம் என்று படம் முடிந்த வெளியே வந்த போது அவருடைய ரசிகர்கள் சொன்னார்கள். அவர் நடித்ததே இந்த இரண்டு படம் தானே !



சரி கதைக்கு போவோம் துரத்தி துரத்தி காதலிக்கும் ஹீரோ (உதயநிதி ) அந்த காதலுக்கு பல சமயம் தொந்தரவாகவும் சில சமயம் உதவியாகவும் இருக்கும் ஹீரோவின் நண்பன் (சந்தானம்). இவர்களின் ரகளையில் அந்த காதல் பாதியில் பிரிய கடைசியில் அந்த காதல் கை கூடியதா என்பது தான் கிளைமாக்ஸ். இதில் ஒரு புதுமையாக படத்தில் அனைத்து இடங்களிலும் காமெடி தான் மையப்பகுதி.

தஞ்சாவூரில் வெட்டியாக சுற்றி திரியும் உதய். அவரின் அப்பாவின் தொந்தரவால் தன் நண்பனை (சந்தானத்தை) தேடி திருச்சி செல்கிறார். திருச்சி இறங்கியவுடன் நயன்தாராவை பார்க்கிறார், உடனே காதல் பற்றி கொள்கிறது. பிறகு காதல் மயக்கத்தால் உதயநிதி கொடுக்கும் இம்சைகளைத் தாங்கிக் கொண்டு சந்தானமும் அவரது காதலுக்கு ஒரு கட்டத்தில் உதவுகிறார். இடைவேளையின் போது நயன்தாரவுக்கும், உதயநிதி மேல் காதல் வர, அவரிடம் காதலை சொல்லும்முன் தன் கடந்த கால வாழ்க்கையில் நடந்த சம்பவம் (பிளாஸ்ஷ்பேக் ) ஒன்றை உதயநிதியிடம் சொல்கிறார் (அங்கே தான் இயக்குனர் வைக்கும் ட்விஸ்ட்). அதை கேட்டு உதயநிதி கேலியாக சிரித்து அதுக்கு ஒரு கவுண்டர் கொடுக்க நயன்தாராவுக்கு கோபம் தலைக்கு மேல் வருகிறது, பிறகு என்ன அந்த காதல் அங்கேயே முறிகிறது.

மறுபடியும் அந்த காதலை ஒன்று சேர்க்க உதயநிதி - சந்தானம் போடும் திட்டம், அந்த திட்டத்தினால் அவர்கள் ஜெயிலுக்கு போக கடைசியில் அந்த காதல் வெற்றிபெற்றதா?, இவர்கள் ஜெயிலில் இருந்து விடுதலை ஆனார்களா? என்பது தான் நண்பேன்டாவின் முழுக்கதை.

நடிகர், நடிகைகளின் பங்களிப்பு

உதயநிதி நடிப்பை விட வசன உச்சரிப்பில் கொஞ்சம் தேர்ச்சி பெற்று இருக்கிறார். இந்த படம் வழக்கமான அவருடைய முந்தைய படம் போலே இருப்பதால் நடிப்புக்கு ஒன்று பெரிய ஸ்கோப் இல்லை. டான்ஸ் இந்த படத்தில் நன்றாக ஆடியுள்ளார். மக்கள் என்னிடம் இது தான் எதிர் பார்க்கிறார்கள் என்று இதே மாதிரி படங்கள் இனிமேல் நடித்தால் கொஞ்சம் கஷ்டம் தான்.

சந்தானம் இந்த படத்தில் கவுண்டர்க்கு மட்டுமில்லாமல் பாடி லாங்வேஜிலும் கவனம் செலுத்தியுள்ளது ரசிகர்களை ஈர்த்துள்ளது. அதுவும் நயன்தாரா தங்கி இருக்கும் லேடீஸ் ஹொஸ்டல் இழுத்து மூடப்படுகிறது என்று தெரிந்தவுடன் உதய் - சந்தானம் சேர்ந்து ஹொஸ்டல் முன்பு நடத்தும் போராட்டம் செமரகளை.

சந்தானத்தின் காமெடி இந்த படத்தில் ஒரு 50 சத விகிதம் தான் எடுபட்டது [illegible] பேசியே கொன்றார்.

அதுவும் இதுபோல் நண்பனுக்கு உதவும் கதாபாத்திரத்தில் பார்த்து பார்த்து சலித்து போய் விட்டது.

**நயன்தாரா**

படத்தின் மிகப்பெரிய ஆறுதல் நயன்தாராவுடைய ஸ்க்ரீன் பிரசன்ஸ், என்ன அழகு. அவருடைய இயல்பான, எளிமையான தோற்றம், பாடல்களில் அவரின் உடையலங்காரமும், அழகான நடனமும் ரசிகர்களை கவர்ந்துள்ளது. இருந்தாலும் நடிப்பை பற்றி சொல்கையில் இது கதிர்வேலன் காதல் பார்த்த அதே நயன் தான் இதிலும்.

**க்ளாப்ஸ்**

1. 1. நயன்தாரா தோன்றும் காட்சிகள்
2. 2. படத்தின் முதல் பாதி
3. 3. பாலசுப்ரமணியனின் கலர்ஃபுல் ஒளிப்பதிவு
4. 4. சந்தானத்தின் ஒரு சில காமெடி வசனங்கள்

**பல்ப்ஸ்**

1. 1. ஓகே ஓகே , இது கதிர்வேலன் காதல் படத்தின் அப்பட்டமான சாயல்
2. 2. போர் அடிக்கும் பல காமெடிகள்
3. 3. ஹரிஸின் எடுபடாத இசை, (படத்தின் அனைத்து பாடலிலும் திரை அரங் ஆளில்லை)


எந்தவொரு புதுமையான விஷயத்தையும் எதிர்பார்க்காமல் இந்த படத்தை பார்க்க போனால் இந்த படம் நிச்சயம் எண்டர்டெய்மெண்டாக இருக்கும்.

கடைசியாக இயக்குநர் ஜகதீஷ் தான் குருவான ராஜேஷ் போலவே படம் எடுப்பேன் என்பதற்காக உங்க படத்தை அதாவது ஓகே ஓகே படத்தையே எடுத்து விட்டாரே ,

மொத்தத்தில் நண்பேன்டா - சொல்லும் படி பெரிதாக ஒன்றும் இல்லையடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓரங்கட்டும் அரசியல் ஓரங்கட்டப்படுமா?



பிரச்சினைகள் இனம் காணப்பட்டு தீர்வுகள் முன்வைக்கப்படாததால் இலங்கையில் தமிழர் விவகாரம் என்றும் பேசு பொருளாகவேயுள்ளது. இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்று, நிம்மதியாக வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத்தமிழரிடம் நிறையவேயுள்ளது. தமிழரின் எதிர்பார்ப்புக்களை வெறும எதிர்பார்ப்புக்களாக மட்டும் வைத்திருக்க வேண்டும், அவைகள் நிறைவேறி விடக்கூடாது, நிறைவேற்றப்பட்டுவிடக்கூடாது என்பதில் சிங்கள ஆட்சியாளர்களும் உறுதியான மன நிலையில் உள்ளனர் என்பது மறுப்பதற்கில்லை.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்படுவதால் சிங்களவர்களுக்கு ஏற்படும் நன்மைகளை விட தீர்க்கப்படாமல் இருப்பதனால் ஏற்படும் நன்மைகள் அதிகம் என்று எண்ணி அரசாங்கத்தரப்பினர் தமிழர் பிரச்சினைகளைக் கண்டு கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியும். ஏனெனில் இலங்கையில் இத்தகைய நிலைமை நீண்ட காலமாக நிலைத்திருக்கின்றது.

மகிந்தவை வீட்டுக்கு அனுப்பிவிட்டோம், எங்களால் தெரிவு செய்யப்பட்ட மைத்திரி ஆட்சி நடக்கிறது என்று எம்மில் சிலர் மார்தட்டிக்கொண்டு உலாவருகின்றனர். தாம் ஏமாற்றப்படுவதை அறிந்து கொண்டும் தம்மால் தமிழர்களை ஏமாற்ற முடியும் என்று எண்ணிக் கொண்டும் அவ்வாறு அவர்கள் உலாவருகின்றனரா? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

யுத்த காலப்பகுதியில் தமிழினத்திற்கு எதிராக பல கொடுமைகளை அரங்கேற்றிய போது மகிந்த ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை வகித்துக்கொண்டிருந்த ஜாதிக ஹெல உறுமய போன்ற சிங்கள கடும் போக்குவாத கட்சிகளின் பிரதிநிதிகள் மைத்திரி அரசிலும் அமைச்சர் பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர் என்பதை அறிந்துகொண்டும் தமிழரின் பிரதிநிதிகள் எந்த எதிர்பார்ப்பில் அரசிற்கு ஆமாம் போடுகின்றனரோ தெரியவில்லை. இதற்கான பதில் அவர்களிடமும் இருக்கும் என்று நம்புவதிலும் பயனில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தமிழரின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நம்பினோம். ஆனால் நம்பிக்கைகள் எல்லாம் வீணடிக்கப்பட்டு தமிழர் தரப்பு பெரும் அழிவையே சந்தித்திருந்தது. தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் நோககுடன் சந்திப்புக்களை மேற்கொள்கின்றோம் என்றுகூறி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பத்திற்கும் மேற்பட்ட சந்திப்புக்களை மகிந்த அரசுடன் மேற்கொண்டிருந்தது. இருப்பினும் அதனால் எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை.

மகிந்த ஆட்சியில் தமிழர் தரப்பு புறக்கணிக்கப்பட்டிருந்த அதேவேளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாணசபையும் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு ஆளுமையற்ற நிலையிலிருந்தது.

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் நடத்திய சந்திப்பில் பத்துக்கோரிக்கைகளை முன்வைத்திருந்தார். அந்தப் பத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்துவிட்டு ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. இதனால் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாண மக்களின் எதிர்ப்பை மகிந்த பட்டுணரவேண்டியேற்றப்பட்டது.

இந்நிலையில், மைத்திரி அரசுடன் இணக்கமாக செயறபடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்கட்சி முரண்பாடுகளை நிறையவே சந்தித்து பாதிக்கத் தொடங்கிவிட்டது. உட்கட்சி முரண்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் வழமையான ஒன்றுதான் என்று கூறி அப்பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடமுடியும். ஆனால், முரண்பாடுகள் தொடரத்தான் செய்யும்.

செயற்பாடுகள் யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் முற்றுமுழுதாக மாற்றம் கண்டுவிட்டது என்று கூறினால் அதனை யாரும் மறுத்துவிட முடியாது. காரணம்அது உண்மை. கொள்கை ரீதியாக தமிழ்க் கூட்டமைப்பு மாற்றமடைந்தது மட்டுமல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்தவை, அந்த அமைப்பினரால் ஒதுக்கப்பட்டவை எல்லாம் உள்வாங்கப்பட்டிருந்தது கூட்டமைப்பினால்.

இலங்கை - இந்திய உடன்படிக்கையின் ஊடாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்திற்குட்பட்ட மாகாண சபை முறைமையினை ஏற்று வடக்கில் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியமைத்தமையுள்ளிட்ட அனைத்தும் இதற்குள்ளடங்கும்.

தமிழ் மக்களின் ஆதரவு வடக்கு மாகாணசபைத் தேர்தலின் மூலம் வெளிப்பட்டிருந்தபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளை மக்கள் வெறுத்துவிட்டனர் என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது.

சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிரான வாக்குகளை நமக்கு சாதகமான வாக்குகள் என்று கருதி அதன் ஊடாக மனக்கோட்டை கட்டுவது அதளபாதாளத்திற்குள் கொண்டுசென்றுவிட்டுவிடும் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நன்கு உணர்தல் அவசியம்.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் மகிந்த ஆட்சிக்கு எதிராக வாக்குகள் எவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பக்கம் திரும்பியதோ அதேபோன்று முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன்மீது தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கையும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை உள்ளிட்டவர்கள் மக்களுக்கு ஏற்படுத்திய நம்பிக்கையும் வடக்கில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சந்தர்ப்பத்தை உருவாக்கியிருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கட்டமைக்கப்பட்ட தமிழின அழிப்பை தடுத்து நிறுத்தும் வல்லமை கொண்ட அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் நம்புவதாலும் சர்வதேச ரீதியாக எமது இனத்துக்கெதிரான அநீதிகளுக்கு நீதிகோரிப் போராடுவதனாலும் மக்களின் ஆதரவு ஏனைய கட்சிகளை விட கூட்டமைப்புக்கு அதிகமாகவேயுள்ளது. கடந்த காலத் தேர்தல் முடிவுகள் இதற்கு தக்கசான்றாகவுள்ளன. இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுக் கரம் ஓங்கியேயிருந்தது.

மகிந்தவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து மைத்திரி ஆட்சிக்கு ஆதரவாக செயற்பட்டுவரும் கூட்டமைப்பின் ஆதரவு வடக்கு கிழக்கில் அதிகரித்தாலும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் அதிக அக்கறை கொண்டு கூட்டமைப்பு செயற்படுவதாக நம்பிக்கை கொள்ளமுடியாத நிலையில் அக்கட்சியின் தலைமைப் பீடம் செயற்பட்டு வருகின்றது.

ஏற்கனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரநிதிகளுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு அக்கட்சியின் தலைமைப்பீடத்தின் மீது சுமத்தப்பட்டுவரும் நிலையில் ஒருமாகாணத்தின் முதலமைச்சரையே ஓரங்கட்டும் நடவடிக்கையில் அக்கட்சியினர் ஈடுபட்டு வருகின்றமை தமிழ் மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகவே கருதப்பட வேண்டும்.

இந்திய அரசின் நேரடித் தலையீட்டின் மூலம் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக சி.வியை நிறுத்தியபோது அதனை தமிழரசுக் கட்சியினர் பகிரங்கமாக எதிர்த்ததோடு அக்கட்சியின் பொதுச் செயலாளராயிருந்த மாவை சேனாதிராஜாவை நிறுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர். இருப்பினும் அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. மாவையும் அப்பதவியை நிராகரிப்பது போன்று அப்போது செயற்பட்டிருந்தார். அவரை சிலர் செயற்பட வைத்திருந்தனர்.

மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட விரும்பியிருக்கவில்லை என்பதோடு அக்கட்சியில் அங்கம் வகித்த கட்சிகளும் நேரடியாகவே தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி ஆதரவுக்கரம் நீட்டினாலும் பின்னர் தமது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியிருந்தன. விக்னேஸ்வரனை தமிழரசுக் கட்சியினர் எதிர்த்ததனால்மாவை சேனாதிராஜா மீதான எதிர்ப்புகளும் குவியத் தொடங்கின. எதிர்ப்புகள் எல்லாம் தேர்தலின் பின்னர் அமைச்சர் பதவி யாருக்கு என்ற முரண்பாட்டில் காணாமற்போயிருந்தன. அது வேறு கதை.

வடமாகாணசபைத் தேர்தல் காரணமாக மாவை-வக்கியிடையே ஏற்பட்ட முரணபாடு இன்னும் முற்றுப்பெறவில்லை என்பதை தற்போது பொது மேடைகளில் முதல்வர் விக்னேஸ்வரன் பற்றியும் அவரது கடந்தகால பதவி நிலை குறித்தும் பகிரங்கமாக பேசிவரும் மாவை வெளிப்படுத்தி வருகிறார்.

விக்கி-மாவை இடையேயான முரண்பாடு ஓய்ந்துவிட்டது என்று கருதப்பட்ட நிலையிலும் முதல்வர் விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பனிப்போர் ஒன்று இடம்பெற்றுவரும் நிலையிலும் மாவை சேனாதிராஜா முதல்வர் விக்கிக்கு ஆதரவாக செயற்படுவார் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்த நிலையிலும் அந்த எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு முன்விரோதத்தை வெளிப்படுத்தும் விதமாக மாவை செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டை அக்கட்சியில் உள்ளவர்களே முன்வைக்கும்நிலைமையை ஏற்படுத்திவிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்த அக்கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க அண்மையில் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது அவர் பங்குகொண்டிருந்த நிகழ்வுகளை மக் களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்றவடக்கு மாகாண சபை புறக்கணித்திருந்த நிலையில்மாவை சேனாதிராஜா உள்ளிட்ட கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் பங்குகொண்டிருந்தனர். அதுமட்டுமன்றி தமது கட்சியின் தலைவருடன் அளவளாவுவதைப் போன்று நடந்து கொண்டனர்.

இந்த நடவடிக்கையானது பிரதமர் ரணில் மீதான விருப்பத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கருதிவிட முடியாது. முதல்வர் விக்கி மீது தாம் கொண்ட வெறுப்பையும் அவரை தாம் ஓரங்கட்டுவதை வெளிப்படுத்துவதற் காக மேற்கொண்ட உத்தியாகவே கருதப்பட வேண்டும். வடக்கு- கிழக்கில் தமிழர்கள் பல்வேறு அடக்கு முறைகளையும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து வரும் நிலையில் எமது விடிவுககாக போராடுபவர்கள் என்று தமிழ் மக்கள்நம்பிக்கை கொண்டுள்ளவர்களை சுயநல அரசியலுக்காக ஓரங்கட்டுபவர்களை ஓரங்கட்டும் நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுவிட்டனர்.

மக்களின் பிரதிநிதிகளை ஓரங்கட்டுபவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக யிருந்தாலும் ஓரங்கட்டப்படுவார்கள் என்பதை புரிந்துகொண்டு செயற்பட்டால் தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். இல்லையேல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற கௌரவத்துடன் மட்டும் இருக்க வேண்டிய நிலை ஏற்படும.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook வித்தியாசமான உதவி!

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு 'யாராவது காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது. தற் செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. 'பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு' என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு 'நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்' என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். 'ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?' என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே 'தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்' என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். 'நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்' என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 332


சத்தியா பிரகாஸ்




கார்த்திக் குமார்





சுலக்சினி ரவீந்திரன்




லவன் லவலோயன்




தர்சன் கவி தர்சன்




யது யதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட்டுடன் விடைபெற்ற சாதனை நாயகர்கள்



குமார் சங்ககக்காரா-
இலங்கை
(2000-2015)
போட்டிகள் - 404
ஓட்டங்கள்- 14,234
அதிக ஓட்டங்கள்- 169
சதம் -25
அரைச்சதம்-93
ஆட்டமிழப்புக்கள்-501

மஹேல
ஜெயவர்த்தன-
இலங்கை
(1997-2015)
போட்டிகள்- 448
ஓட்டங்கள்- 12,650
அதிக ஓட்டம்-144
சதம்- 19
அரைச்சதம்- 77

கிரிக்கெட்டி லிருந்து நீங்கள் விடை பெற்றாலும் நீங்களும் உங்கள் சாதனைகளும் என்றும் ரசிகர்கள் மனதிலிருந்து நீங்காது.

2015ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்துள்ளது.

பலரது எதிர்பார்ப்புக்கு மத்தியில் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்திரேலியா அணி 5ஆவது முறையாக வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது.

தமது வாழ்நாளை கிரிக்கெட்டுக்காகவே அர்ப்பணித்த பல வீரர்கள் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத்துடன் தமது ஓய்வினை அறிவித்து தமது கிரிக்கெட் பயணத் துக்கு முடிவு கொடுத்துள்ளனர்.

தேசிய அணிக்கு கிரிக்கெட் விளையாடுவதற்கு திறமை மட்டும் போதாது. அதற்கு கொஞ்சம் அதிர்ஷ்டமும் அநேக தியாகங்களும் தேவைப்படுகின்றன.


பாடசாலை மட்டத்திலிருந்து விளையாட்டுக் கழகங்கள் வரை போட்டி நிறைந்த உலகத்திலே பல கஷ்டங்களுக்கு மத்தியில் தேசிய அணிக்கு கிரிக்கெட் விளையாடுவதற்கு வீரர்கள் கடந்து வந்த பாதையை பார்த்தால் நிச்சயம் அது கரடுமுரடான வேதனை நிறைந்த பாதையாகவே இருக்கும். பல தசாப்தமாக விளையாடப்படும் ஒரு கிரிக்கெட்டிலிருந்து பல சாதனை வீரர்கள் விடைபெற்றுச் சென்றிருக்கின்றார்கள்.

ஆத்மார்த்தமாக தாம் நேசித்த கிரிக்கெட்டிலிருந்து ஒரு கிரிக்கெட் வீரன் விடைபெறுகின்றான் என்றால் அவனது மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதனை அறியமுடியும்.

இளைய வீரர்களுக்கு வழிகாட்டியாக அவர்களுக்கு வாய்ப்புக்களை அமைத்துச் கொடுத்ததோடு விடை பெறுவதற்கு இதுபோல இதுவே சரியான தருணம் என ஓய்வினை அறிவித்த சாதனை வீரர்களுக்கு கிரிக்கெட் உலகமே தலைவணங்கி நிற்கின்றது.

க.மதீசன்

## மிஸ்பா உல்ஹக்
பாகிஸ்தான்
(2002-2015)




போட்டிகள்-162
ஓட்டங்கள்-5,122
அதிக ஓட்டங்கள்-96*
சதம்-இல்லை
அரைச்சதம்-42

## டானியல்வெட்டோரி
நியூசிலாந்து
(1997-2015)




போட்டிகள் 295
ஓட்டங்கள்-2,253
அதிக ஓட்டம்-83
சதம்-இல்லை
அரைச்சதம்-4
விக்கெட்-305

## சஹிட் அப்ரிடி
பாகிஸ்தான்
(1996-2015)




போட்டிகள்-390
ஓட்டங்கள்-8,064
அதிக ஓட்டம்-124
சதம்-6
அரைச்சதம்-39
விக்கெட்-395

## யுனிஸ்கான்
பாகிஸ்தான்
(2000-2015)




போட்டிகள்-264
ஓட்டங்கள்-7,240
அதிக ஓட்டம்-144
சதம்-7
அரைச்சதம்-48

## பிரண்டன்
டெய்லர்
சிம்பாவே
(2004-2015)



போட்டிகள்-167
ஓட்டங்கள்-5,258
அதிக ஓட்டம்-145*
சதம்-08
அரைச்சதம்-32

## மைக்கல்
கிளார்க்
அவுஸ்திரேலியா
(2003-2015)



போட்டிகள்-245
ஓட்டங்கள்-7,981
அதிக ஓட்டம்-130
சதம்- 08
அரைச்சதம்-58
விக்கெட்-57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org